# குடந்தைக் கல்வெட்டுக்கள்

கல் 1

| | | | |
|---|---|---|---|
| குடந்தை | பாணபுரீஸ்வரர் கோயில் | 1-10 | |
| | நாகேஸ்வரர் கோயில் | 11-65 | 65 |
| திருப்பணந்துறை | பிரணவேஸ்வரர் கோயில் | 1-6 | 6 |
| திருக்களித்திட்டை | வேதபுரீஸ்வரர் கோயில் | 1-14 | 14 |
| திருவல்லியம்பேடு | ஸ்ரீ கோதைவல்லி ராமசாமி | 1-2 | 2 |
| கூத்தி | கோதண்டராமசாமி கோயில் | 1-4 | 4 |
| கஞ்சனூர் | அக்னீசுவரர் கோயில் | 1-10 | |
| | வரதராஜப் பெருமாள் கோயில் | 11-12 | 12 |
| திருச்சேறை | சாரபரமேஸ்வரர் | 1-14 | |
| | சாரநாதப் பெருமாள் | 15-24 | 24 |
| கருவேலி | சற்குணேஸ்வரர் கோயில் | 1-8 | |
| | கூந்திராப்த நாராயணப் பெருமாள் | 9-15 | |
| | கைலாசநாதர் கோயில் | 16-19 | 19 |
| ஆடுதுறை | ஆபத்சகாயேஸ்வரர் கோயில் | 1-20 | 20 |
| | மொத்த கல்வெட்டுகள் | | 166 |

| | | | |
|---|---|---|---|
| ாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 9-ஆவது |
| ட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1227 |
| ர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மாழி : | தமிழ் | | |
| ழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| ரசு : | சோழர் | | |
| ன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில்—மகாமண்டப வடபுறப்பட்டி—தென்புற ஜகதிகளில் உள்ளது.

றிப்புரை : கங்கை கொண்டான் ராஜராஜதேவனை அணுக்கப்பல்லவரையனும், கங்கை கொண்டான் பெற்றூழ்வானும், கங்கை கொண்டான் பெரியானும் ஆகிய மூவரும், ஒரு குறிப்பிட்ட வாணகோவரையர்க்கு தம் வாழைப்பந்தல் நிலத்தினை எண்ணாயிரம் காசுகளுக்கு விற்றுக் குடுத்தமையைக் குறிக்கின்ற ஆவணம் இது. முன்னரே, இவர்களுடைய சிற்றப்பனுர் பெரியான் கூத்தரான செங்கீரையார் முதலில் பெற்றிருந்த நிலம் ஐந்து வேலியும், இதே வாணகோவரையர்க்கு விற்கப் பட்டது என்ற செய்தியையும் இக்கல்வெட்டு தருகிறது.

கல்வெட்டு :

1 வாழைப்பந்தல் நிலம் விலைகொண்ட பிரமாணப்படி திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரை கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு கூ ஒன்பதாவது மீன நாயற்று அபர பக்ஷத்து . . மியும் . . . . .

2 யும் பெற்ற உத்திரட்டாதி நாள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்ணிக் கோட்டத்து ஒமிர ஞடான விசையராஜேந்திர வளநாட்டு வாகையான தலகண்ணந்தை கங்கை கொண்டான் ராஜராசதேவநான அ[ணுக்கப் பல்ல வரையனும் கங்]

3 கை கொண்டாந் பெற்றூழ்வானும் கங்கை கொண்டான் பெரி [யானும்] . . . . . . . . . . . . . . . . .

4 வரான வாணகோவரையர்கு நாங்கள் வி(ற்)றுக்குடுத்த
மாவது எங்கள் பிதாக்கள் பெரியாந் கங்கைகொ
டாரான அணுக்கப்பல்லவரய . . . தம் பெற்றும்
கொண்டுமுடையான . . இவர் அபாவத்து எங்களு
அருெ . .

5 ங்கலமான குலோத்துங்க சோழன் வாழைப்பந்தல் ரூ
ரூவஹல எங்கள் சிற்றப்பனுர் பெரியாந் கூத்தரான
க்ரையார்க்கு நாங்கள் குடுத்த வேருதாய் இவர் இ வ
கோவரையர்க்கு விற்ற ரூ ரூலம் . .

6 ம் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த வி
பொருளன்றுடு நெற்காசு அர்ரூ இக்காசு எண்ணுயிர
ஆவணக்களியே காட்டேற்றிக் கச்சலவறக் கொண்டு வ
விலையாவணஞ் செய்து குடுத்தோம் இவ்வான் . . . .

7 கை கொண்டான் பெற்றுழ்வானும் கங்கைகொண்டான்
யானும் இவர்களே முதுகண்ணுக உடைய சம்பந்
இறங்க . . ட்டாளும் இவ்வனைவோம் இந்நிலத்து
இதுவே . . . .

8 யோலையாவதாகவும் இதுவல்லது வேறு பொ(ரு)ள்மாவறு
பொருட் செலஓலை காட்டக் கடவதல்லவாகவும் இப்
ஸம்மதித்து இந்நிலம் விலைக்குற விற்றுப் பொருள
கொண் . . .

9 கிணறும் மனையும் மனப்படப்பையும் ஆறும் ஆறிடுபடுகை
பொதுவும் போதாதியும் மற்றும் எப்பேர்ப்பட்ட உரி
களும் அகப்பட விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோ
இ . . . .

10 . . ண்டான் ராசராச தேவநான அணுக்கப் பல்லவரையநு
கங்கை கொண்டான் பெற்றுழ்வானும் கங்கைகொண்டா
பெரியானும்

11 . . . . . ள் முதுகண்பட்டு விலையாவணஞ் செய்து குடுத்தோம்
இப்படிக்கு இவை அணுக்கப்பல்லவரையன் எழுத்து
இப்படிக்கு இவை . . . . .

12 த்து உ இப்பிரமாணப்படி நிலமும் முன்பு பெரியான் கூத்தனை
செங்கீரையார் பக்கல் கொண்ட ரூ ருலியும் ஆக ரூ அவ
வஹ . . ை . . . . . . தை தேவர்

13 க்க . . . ப்பிரமாணம் பண்டாரத்தே குடுத்தது உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1229 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில் – மகாமண்டப தென்புற ஜெகதியிலுள்ளது.

குறிப்புரை : சோமநாத தேவருக்கு திரைமூரான் தியாகவிநோதன் திருநாமத்துக் காணியாக நிலம் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டின் மூலம், இக் கோயில் இருக்கும் பகுதி சோமநாத மங்கலம் என்னும் பெயரதாய் திருக்குடமூக் கினின்றும் வேறு பிரிந்த பகுதியாய் வழங்கப்பட்ட செய்தி தெளிவாக அறியக் கிடக்கின்றது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ :–திருபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளின குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௰௧ ஆவது நாள் ௱அ௰௧ ஞல் ஹஸாதஞ் செய்தருளின திருமுகப்படி ||– திருபுவனச்சக்கர வத்தி கோநேரி

2 ன்மை கொண்டான் உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில் வேறுபிரிந்த சோமநாத மங்கலத்து சோமநாத தேவர் கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்வாநுக்கும் வாண

3 கோவரையன் காணியாந விக்கிரம சோழ வளநாட்டு மிறைக் கூற்றத்து திரைமூரான் தியாகவிநோதன் ஆற்றூர் நிலம் ந௰ரூ௨பகூபயும் இத்தேவற்கு திருநாமத்துக் காணியாகக் குடுத்தாநென்றும் இன்நிலம் இவந் குடுத்தபடியேய் இத் தேவர்கு தி

4 ருநாமத்துக் காணியாய் நிற்கவும் இப்படிக்கு இக்கோயிலிலே கல்வெட்டவும் கடவதாகப் பெறவேணுமென்று இவன் நமக்குச் சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவதாகச் சொன்நோம் இந்நிலம் இத்தேவற்கு திருநாமத்துக் காணி யாகக் கைக்கொண்டு அனு

5 பவிக்கவும் இப்படிக்கு இக்கோயிலிலே கல்வெட்டவும் கட வதாகவும் பண்ணுக எழுதிநாந் திருமன்திர ஓலை இராசஞு ராசண் மூவேந்த வேளான் ||ட இவை சேதராயன் எழுத்து || இவை காலிங்கராயன் எழுத்து || இவை வரகுணராயன் எழுத்து ||–இ

6 வை மூவேந்தரையந் எழுத்து ||– இவை நிகரிலி சோழப் பல்ல வரையன் எழுத்து ||– இவை பிரிதி அயங்கரையன் எழுத்து|| இவை குருகுலராயன் எழுத்து உ.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 18-ஆவது |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1236 |
| ஊர் : | கும்பகோணம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில்-மகாமண்டப தென்புறப் பட்டிகையிலுள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கம் மட்டுமே உள்ளது. இக்கோயில் இறைவனுக்கு உதராசப்பர் சோமன் . . . என்பார் ஏதோ செய்வித்ததைக் குறிப்பதாக இருக்கலாம்.

கல்வெட்டு

1 திரிபுவனசக்கரவத்திகள் மதுரை கொண்டு பாண்டியன் முடித் தலைக் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு பதினெட்டாவது மிதுன நாயற்று பூர்வபக்ஷத்து த்விதியையும் நாயற்றுக்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் உய்யக் கொண்டார்

2 வளநாட்டுப் பாம்பூர் நாட்டுச் சோமநாத தேவ மங்கலத்து உடையார் சோமனாத தேவர்க்கு . உதராச[பய]ர் சோமன் த . . . . . . . . புகுந்த பாவாட்டி நலடை ரூ௰சூ இ*

* இத்துடன் கல்வெட்டு நின்றுவிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

**இடம் :** பாணபுரீஸ்வரர் கோயில் நிருத்த மண்டப - வடக்குப்புற ஜகதி, மகாமண்டப வடக்கு, மேற்குப்புற ஜகதிகளில் தொடர்ந்து உள்ளது.

**குறிப்புரை :** ஆற்றூருடையான் அரையன் ராஜராஜ தேவனான வாணகோவரையன் என்பான் ராஜராஜீஸ்வரமுடையார் மாநிலைத் திருநந்தவனம் என்னும் பெயரால் நந்தவனம் அமைத்ததையும், இக்கோயிலும் திருமுற்றமும் திருமடை விளாகமும் தீர்த்தக் குளமும், திருநந்தவனமும், உள்ளிட்டவைகளுக்கு நிலம் இறையிலியாக வழங்கியதையும் குறிக்கிறது. நிலத்தின் எல்லைகள் குறிக்கப்படுகின்றன. கல்வெட்டின் இறுதிப்பகுதியில் அளக்கவேண்டிய நெல்லின் அளவைகள் குறிக்கப்படுகின்றன. முதற்குலோத்துங்க சோழனின் 16-ஆம் ஆட்சியாண்டு குறிக்கப்படுகிறது.

கல்வெட்டின் நடுநடுவே புதிய கட்டடங்களை எழுப்பிவிட்டதால் தொடர்ச்சியாகப் படிக்க இயலவில்லை.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொ . . . . . . . . ண்டாந விருதராய புயங்கர வளநாட்டு மிழலைநாட்டு ஆற்றூருடையார் அரையன் ராஜராஜதேவனான வாணகோவரையன் உடையார் ராஜராசீரமுடையார் மாநிலைத் திருநன்தவனம் குலோத்துங்க சோழவளநாட்டு திருநறையூர் நாட்டு . . . . . . . சோமநாததேவர் கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்வானுக்கும் இத்தேவர் ஸ்ரீகோயி

2 லும் திருமுற்றமும் திருமடைவிளாகமும் தீர்த்தக்குளமும் திருநன்தவனமும் உள்ளிட்டவையிற்றுக்கு . . இத்திருநன்த வனம் ஸ்ரீஷேயம் . . . . . . க்கு இவ்வூரில் கவுணியன் குநிக்கும் பிரான் மாதேவன் நிலத்துக்கு மேற்கும் பார தாயன் வீரன் ராஜேந்திர சோழன் நிலத்துக்குத் தெற்கும் இச்செவ்வை காவேரி நீர் ஓடுகாலுறவும் இத்தேவர் அநு போகமாக அளந்த நிலம் உட்பட பொதப்படியாய் வருகிற ரூ உமீசாம் முன்நுடையாரும் பழம் பெரு . . . . . படியே சோமநாத மங்கலமென்னும் பேரால் இன்நாள் முதல் நீங்கலாக நீக்க வரியிலாரும் வரிக்கூறு செய்வார் களும் எழுத்திட்ட . . . . தாசனேன் நொ . . .

3 ம் இன்ரூ மிரு வது பசான் முதல் இத்தேவர்க்கு நீங்கலாக நீக்கப் பண்ணுக எழுதிநான் திருமந்திர ஓலை ராஜநாரா யண மூவேந்த . . . . ஆற்றூருடையான் அரையன் ராஜ ரா[ஜ] தேவனை வாணகோவரையன் உடையார் ராஜ ராசீரமுடையார் மாநிலைத் திருநன்தமனம் குலோத்துங்க சோழவளநாட்டுத் திருனறையூர் ஞட்டு ராஜரா[ச] புரத் தோடுங் கூடின காவேரி உள்ளுறையில் இராஜேந்திர சோழனை இருள்நீக்கி . . . . . னவையிற்றுக்கு இடுகிற இத்திருநந்தவன ஸ்ரீஷ[ணம்] திருக்குடமூக்கில் உடையார் திருக்கீட்கோட்டமுடையார் திருமஞ்சனப் பெருவழிக்குக் கிழக்கு உடையா

4 ர் சுங்கந் தவிர்த்தருளின குலோத்துங்க சோழதேவர்க்கு மிசா அளவிலித் திருக்குடமூக்குக்கு வடவெ . . . . டக்கைக்கு வடக்கு . . . . . . . . பொத்தகப்படி என்று வருகிற நில முன்றுடையாரும் பழம்பெரும் உடையார் ராஜரா[சீ]ஸ்ர [உ]டையார்க்கும் மாநிலைத் திருநன்தவனமாய் நீங்கலாய் வருகிறபடியும் இந்நாட்டு முதலுந் தவுந்து உய்யக் கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நீர்படி நில முதலுமாய் யாண்டு மிரு வ . . . . . ரூ உமிசா ஞல் காசு உமிசா . . . ரூாப்படி ஸ ாகா நிச்சயித்த க . . . . . . உமிசா ஞல் சாப்படி ஸ ாசா யாண்டு மிரு வது பசாந் முதல் நீங்கலாக வேறு . . . .

5 ற்றூருடையான் . . . . ன்ராசராச தேவராந வேணுடுடையார் விக்கிர சோழவளநாட்டு விறைக் கூற்றத்துத் தி

6 ரைமூர் பரிக்கிர்த்தரக் குடியிருப்பு மாறி வீரராஜேந்திரப் பெரு விலை விற்கிற ரூத்து(க்)கு காணி விலைக்கு ஒடுக் . . . .

7 ம் பெருமுன் இறைகட்டிந படி . . . . பல . . . . ஸ்ரூவா தக் காணியாக இட . . .

8 . . . . . க்கிறபடியும் தவிர்ந்து இவர் . . . . ாவ யாண்டு சுவது . . . . [த]ன்மக் காணியாக திரை

9 . . . ராந தியாகவிநோதன் ஆற்றூர் ரூ ருஉபழ¬பகுரு ஞலி காணிக்கடன் ௳ வதசயகா உஞல் யசு ஆக்கி ௳ . . . .

10 கத வுா உய கூாகள உ நிச்சயித்த ௳வுதாசயருா இப்படி தவிர வேலி க க்கு ௳ சயா ஆக யாண்டு சுவது . . . .

11 . . த் . . . த . . கரி இறைகட்டிந ௳ ககூபாஉயரு ௳வுதஙசுாம் சு முதல் தன்மக் காணியாநமைக்

12 கும் திருக்கி இறைகட்டினமைக்கும் எழுத்து இட்டார் புரவரிசிக் காணிநாயகம் நெல்குன்ற

13 க்கொடுமலூருடையார் ஆற்றூருடையார் எருமலூருடையார் குருகாடி கிழார்

14 பிரம்பா . . . . வரையர் தி . . . . திம் பெற்றமையா . . . .

15 மி . . . . மைக்கு எழுத்து இவ்வூர் புரவரி சீகரண நாயகம் பந்தணை நல்லூருடையார் குருகாடி கிழான் பெருநல்லூருடையார் . . . . .

7 . . . ல்லே . . இன்நிலத் . . . . . . . டுவான . . கண்டத்துக்கு . . . .

8 துக்கு மேற்க்கு தென்பார்கெல்லே . . . ங்கான வாய்க்காலுக்கு வடக்கு மாப . . .

9 நிலத்துக்கு கிழக்கும் தெற்கு நடுவுபட்ட ரூ<sup></sup>வழவதூ<sup></sup>வ இன் நிலமாகாணி முந்திரி . . . .

10 நிலத்துக்கு கிழ்பார்க்கெல்லே திருவிடைக்கழி எல்லேக்கு மேற்க்கு தென்பாற்

11 கு வடக்கு குளத்துக்கு கிழக்கு வடபாற்கெல்லே ஆனேச்சூர் கிழவன் சேதிகுல ராயன் . . .

12 முக்காணி அரைக்காணி முந்திரிகை . . முக்காணி முந்[திரி] கையும் ஆக . . . . .

13 பகூதகுூஉபஃவூ இன் நிலம் . . . மா முக்காணி முக்காணி முந்திரிகை . . . . . .

14 ள்வதான என்மில் இசைந்த [விலேப்பொருளன்றுடு ந]

15 ற்காசு எஙளஙய இக்காசு ஏழாயிரத்து எழுநூற்று

16 முப்பதும் ஆவணக்களியே காட்டேற்றிக் கச்செலவறக்கெ

17 காண்டு விற்று விலேப்பிரமாண இசைவு தீட்டுக் குடுத்தே

18 ன் இக்கோயில் ஆதிசண்டேசுர தேவதன்மிகள்

19 . . . . . . . . . . . திருநாவுடை[யான் அ]

20 ரிந்தவ மூவேந்த வேளானேன் இவர்கள் சொல்ல இப்

21 பிரமாண இசைவு தீட்டு எழுதினேன் ஜயங்கொண்ட சே

22 ாழவள நாட்டு குறும்பூர் நாட்டு மெற்க்

23 குடையான் சங்கரதேவன் பெரியாண்டான் . . .

24 வை என் எழுத்து இக்காசு ஏழாயிரத்து எழுநூற்றுமுப்பது

25 ங் கைக்கொண்டு இப்பொத்தகப்படி நிலம் . . . .

26 க்காணி முந்திரிகைக் கீழ் இரண்டுமா அரைக்காணி முந்

27 திரிகையும் விற்றுக் குடுத்தமைக்கு மேற்குடையான் அர

28 யன் அரிந்தவன மூவேந்தவேளான் எழுத்து இப்படி

29 க்கு இவை மேற்க்குடையான் சங்கரதேவன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-வது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1220 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் ராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில் - மகாமண்டப, அர்த்தமண்டப வடக்கு, மேற்குச் சுவர்களில் உள்ளது.

குறிப்புரை : திருநாவுடையான் ஆன அரிந்தவன் மூவேந்த வேளான் என்பவன் திருநாமத்துக் காணியாக நிலம் விற்றுக்கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. ஏழாயிரத்து எழுநூற்று முப்பது காசுகளுக்கு இந்நிலத்தினை விற்றுக்கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தே[வ]ற்குயாண்டு சுவது கும்பஞயற் . . . தியையும் திங்கள் கிழமையும் பெற்ற உத்திர

2 த்து நாள் ஜெ[ய]*ங்கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் [நாட்டு] . . . திருநாவுடையான் ஆன அரிந்தவன் மூவேந்த

3 வேளான் நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டு உடையார் [திருநாமத்]துக் காணியாக நான் விற்றுகுடுத்த நிலம் ஆவது ெ

4 ஜயங்கொண்ட சோழவளநாட்டு குறும்பூர் நாட்டு . . [மறக்க] . . . ன விற்றுகுடுத்த பெரியதேவ[வ*]யக்கல் என்று பேர்

5 கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பா[ற்*]கெல்லை மேற்குடையான் [சிவானந்த] . . . . . பார்கெல்லை சங்கரன் வாய்க்காலுக்கு வடக்கு . . . .

6 . . . . . ர்க்கெல்லை ஆனைச்சூர் கிழவன் சே[சதி]குல ராயன் . . க்குகிறக . . . . . .

30 இப்படிக்கு இவை மேற்க்குடையான் திருவலஞ்சுழி உடை
31 யான் ஆன ராஜநாராயண மூவேந்த வேளான் எழுத்து
32 இப்படி அறிவேன் ஆனச்சூர் கிழவன் பெரிய வேளானே
33 ன் இப்படி அறிவேன் ஆனச்சூர் கிழவன் பெரிய வேளானே
34 ன் இப்படி அறிவேன் ஆனேச்சூர் கிழவன் உலகுய்ய ஆடு
35 . . . . . . . டைநாயனே இப்படி அறிவேன் [ஆனச்சூ]
36 ர் கிழவன் சேதிகுலராயன்னே இப்படி அறிவேன் ஆ
37 னேச்சூர் கிழவன் உலகுய்ய ஆடுவான் திரு . . பசு . .
38 டையானே இப்படி அறிவேன் உலகுய ஆடுவான்
39 திருவிடை மருதுடையானே| உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1220 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில்-நிருத்தமண்டபத் தென்புறப்பட்டிகை, குமுதம், ஜகதி, உபானம் ஆகியவைகளில் உள்ளது.

குறிப்புரை : மேற்குடையான் அரையன் சங்கரதேவன் என்பவன், சோமநாத தேவர் கோயில் தேவகன்மிகளுக்கு எழுதிக்கொடுத்த நிலவிலை ஆவணம் இது. ஒன்றே இரண்டு மா அரைக்காணி முந்திரிகையினை இருபத்தையாயிரத்து எழுநூற்று நாற்பத்தெழு அன்றாடு நற்காசுகளுக்கு விற்றுக் கொடுத்ததைக் காட்டுகிறது.

## கல்வெட்டு

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ச கும்பநாயற்று வ௵வ-௨ பக்ஷத்துத் . . . . யும் நாயற்றுக் கிழமையும் பெற்ற [பெற்ற] உத்திரத்து நாள் ஜெ[ய*]ங் கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் ஞ

2 டு மேற்குடையான் சங்கரதேவன் பக்கல் திருநாமத்துக் காணியாந விலை கொண் . . . . . . . ஜெயங்கொண்[ட சோ]ழ வளநாட்டு குறும்பூர் நாட்டு மேற்குடியில் என் காணியான நிலமாய் விற்றுக் குடுத்த நிலமாவது இவ் வூரில் கூட . . . . .

3 திருபட்டீஸ்வரமுடையான் சீதனம் பெற்ற நிலத்துக்கு கிழக்கு வடபாற்கெல்லை உட்சிறு . . . . . க்கு தெற்கு இன்னுன் கெல்லையுள் நடுவுபட்ட ௫௬ . . . . திருவிடைக்கழி எல் லைக்கு வடக்கும் கிழக்கு . . . . .

4 றக் கெல்லை மேற்குடையான் சந்திர சேகரனும் ஆனைச்சூழ்

கிழவன் சேரிகுலராயன் . . . . . . . . . . .

5 ரா னிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இராசாநராச வாய்க்காலுக்கு தெற்கு நடுவுபட்ட . . . . . . க்காலே காணி . . . . .

6 ழ்பாற்கெல்லை ஆனைச்சூழ் கிழவன் சேரிகுலராயனிலத்துக்கு மேற்கும் தென்ம்பாற்கெல்லை [ராஜ]ராஜ வாய்கா . . . . . பாற்கெல்லை ஆனைச்சூழ் கிழ

7 . . எண்மாவரை முந்திரிகைக்கு உடையார் விழுக்காட்டோ பாதி பொத்தகப்படி ஏறி ரூ கூஉப

8 ௯உபஞ இந்நில ஒன்றே இரண்டுமா அரைக்காணி

9 [முந்திரி]கைய்யும் திருநாமத்துக்காணியாக விற்றுக்குடுத்து கொள்வதான எம்மிலிசைந்த விலைப்

10 [பொ]ரு(ள்) அன்றுடு நற்காசு உ௰டுசூளாசு௰ள இக்காசு இருபத் தைய்ஆயிரத்து எழுநூற்று ந

11 [ாற்]பத்தேழும் ஆவணக்களியே காட்டேற்றிக் கைச்செலவறக் கொண்டு விற்று விலைப்பிரமா

12 ண இசைவுத்தீட்டுக் குடுத்தேன் உடையார் சோமநாத தேவர் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர் கன்மி

13 களுக்கு மேற்குடையான் அரையன் சங்கரதேவனேன் இந்தப் பிரமாண இ

14 சைவுத்தீட்டு எழுதினேன் ஜெயங்கொண்ட சோழவள நாட்டு குறு

15 . . . . . . . . பெரியாண்டான் எழுத்து இக்காசு இருப . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 6-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1222 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில் நடராஜ மண்டப கிழக்கு, வடக்கு, மேற்குப்புற பட்டிகைகளிலுள்ளது.

குறிப்புரை : ஆனைச்சூர் கிழவன் அரையன் உலகுய்ய ஆடுவானான சேதிகுலராயன் என்பவன் சோமநாதமங்கலத்து சோமனாத தேவருக்கு நிலம் கொடையளித்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது. கொடுக்கப்பட்ட நிலங்கள் தனித்தனியாக இருந்திருக்கின்றன. அந்நிலங்களின் பெயரும், அளவும், அதன் எல்லைகளும் தெளிவாகக்குறிக்கப் பட்டுள்ளன. கல்வெட்டின் இடையிடையே புதிய கட்டடங்கள் எழுந்து விட்டதால் முழுவதுமாகக் கிடைக்கவில்லை.

**கல்வெட்டு :**

1 [ஸ்வஸ்தி ]ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ௬வது குழஅ நாயற்று பூர்[வ[* பக்ஷத்து த்ரிதியையும் சனிக்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் உய்யக் கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டு ஆனைச்சூர் கிழவன் அரையன் உலகுய்ய ஆடுவானான சேதி குலராயனேன் இன்னாட்டு பாம்பூர் நாட்டு சோமநாத மங்கலத்து உடையார் சோமனாத செ . . . . . . . . . . . . . கொண்டுடையேனாய் என்னுதாய் நான் அனுபவித்து வருகிற நிலத்து விற்ற அழியாநிலை விளாகம் என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை ஆனைச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வரமுடையான் ஸ்ரீயகழ பெற்ற நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சோழகுல வாய்க்கா(ல்)லுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை சோழன் மாருதி வேளான் அனுபவித்து வருகிற நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை [இ]டமுடையான்

வாய்க்காலுக்குத் தெற்கும் இன்னுன்கெல்லேயுள் நடுவுபட்ட . . . . . . வடக்கும் மேற்பாற்கெல்லே பெ . . . . க்கு கிழக்கும் வடபாற்கெல்லே இவ்வூர் சுப்பிரமண்ணியப் பிள்ளே யார் திருநாமத்துக் காணியான நிலத்துக்குத் தெற்கும் இன்னுன்கெல்லேயுள் நடுவுபட்ட ரூ பகூஸஹரூ இன்நிலம் ஒருமா முக்காணி அரைக்காணி முந்திரிகையும் சுப்பிர மண்ணிய விளாகம் எந்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லே ஆனேச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வர முடை யான் உ . . . . . . . . . . .

2 மேல்பாற்கெல்லே திருவரங்க விண்ணகர் ஆழ்வார் திருவிடை யாட்டத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லே சோழகுல வாய் காலுக்கு தெற்கும் இன்னுன்கெல்லேயுள் நடுவுபட்ட ரூ வ இந்நிலம் காலும் திருவையாற்று மயக்கல் என்று பேர் கூவப்பட்ட நிலத்துக் கீழ்பாற்கெல்லே சி[ற]குல காடுகிழான் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லே உட்சிறுவாய்க் காலுக்கு வடக்கும் மேற்பாற் . . . . . . . . . வன் திருப் பட்டீஸ்வரமுடையான் ஸ்ரீயகழ பெற்ற நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லே சோழகுல வாய்க்காலும் மிலாடுடையான் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லே மிலாடுடையான் நிலத்துக்கும் பெருவாய்க்கும் கிழக்கும் வடபாற்கெல்லே உட் சிறுவாய்க்காலுக்கும் . . . . . யான் பறைத்திடலுக்கு தெற்கும் இன்னுன்கெல்லேயுள் நடுவுபட்ட ரூ எழுமாவரையும் கருஞ்செய் என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற் கெல்லே உட்சிறுவாய்க்காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லே உட்சிறு வாய் . . . . . . . . . . . . . . [பே]ர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லே கொற்றக் குறும்பூர் உடையான் ஸ்ரீயகழ பெற்ற நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லே சோழகுல வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லே அரும் பாக்கிழார் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லே உட்சிறு வாய்க்காலுக்கு தெற்கும் இன்னுன்கெல்லேயுள் நடுவுபட்ட ரூ ஒன்பதுமா முக்காணி முந்திரிகையின் கீழரை கொடு கொ . . . . . என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ் பாற்கெல்லே . . . . . . . . .

3 தென்பாற்கெல்லே சோழகுல வாய்க்காலுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லே ஆனேச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வர முடை யர் உள்ளிட்டார் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லே உட்சிறு வாய்க்காலுக்கு தெற்கும் இன்னுன்கெல்லேயுள்

நடுவுபட்ட ரூ மூந்றுமா முந்திரிகையின் கீழ் நாலுமாவும் தெங்கஞ்செய் ஏழும் இவர் கூறுப்பட்ட நிலத்துக் கீழ்பாற் கெல்லை சந்திரசேகரன் நிலத்துக்கு மேற்கும் தென்பாற் கெல் . . . . . . . . . . க்கு மேற்கும் தென்பாற்கெல்லை சோழகுல வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை திருக்குரவதிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மேற்குடையான் உலகுடையான் நிலத்துக்கு தெற்கு இன்னுன்கெல்லையுள் நடுவுபட்ட ரூலம் இரண்டுமா . . . . . க்காணி வடக்கில் களருக்குக் கீழ்பாற்கெல்லைக்கு மேற்கும் தென் பாற்கெல்லை ஆனைச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வரமுடையான் உள்ளிட்டார் நிலத்துக்கு வடக்கும் வடபாற்கெல்லை திருவிடைக்கழி எல்லைக்கு தெற்கும் இன்னுன்கெல்லையுள் நடுவுபட்ட ரூலம் காலே முந்திரிகையின் . . . . , க்கும் இன்னுன்கெல்லையுள் நடுவுபட்ட ரூலம் எழுமாக்காணியும் பெரியதேவன் மயக்கலென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை மேற்குடையான் திருநாடுடையான் அரிந்தவன் மூவேந்தவேளான் நிலத்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லை சங்கரன் வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை கோயிலான் இறையிலிக்கு கிழக்கும் வடபாற் கெல்லை ராஜராஜ வாய்க்காலுக்கு தெற்கும் இன்னுன் கெல்லையுள் நடுவுபட்ட ரூ அறுமாவரையே . . . . . . . . . மா . . . . .

4 . . . . யென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை சந்திரசேகரன் நிலத்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லை சங்கரன் வாய்க்காலுக்கு வடக்கு மேல்பாற்கெல்லை மேற்குடையார் சங்கர தே[வன்] நிலத்துக்கு கிழக்கும் வட பாற்செ . . . .

5 . . . கு வடக்கடையவும் தென்கண்டத்து ஆனைச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வரமுடையான் . . நீக்கி கமுகு நின்ற நிலம் காலும் ஆக நிலம் ஆறரையே இருமாவரையே அரைக் காணியின் கீழ் முக்காலே ஒருமாவரை . . . . கன் ஆனைச் சூர் கிழவன் திருப் . . . .

6 . . . ள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அந்றுடு நற்காசு ரா௲௯௰௲௧௫௱நா இக்காசு நூறாயிரத்து தொண்ணூறாயிரத்து ஓராயிரத்து ஐஞ்ஞூறும் இன்னமும் இற்றைநாள் திருநாமத்துக் காணியாக விற்றுக் குடுத்த நிலத்து [எழு] முந்திரிகை மேற்குடையான் பெரிய . .

7 ஐஞ்ஞூற்றுக்கும் பொத்தகப்படி ௫ . . . . தம் திருநாமத்துக் காணியாக விற்றுக்குடுத்தமைக்கு இவை ஆனேச்சூழ் கிழவன் அரயன் உலகுய்ய ஆடுவாநான சேதிகுலராயநேன் இவை என் எழு . . .

8 . . . ந்த வெளான் . . . கீழ்பாற்கெல்லே ம . குடையானு . . . கு மேற்கும், தென்பாற்கெல்லே . . . ங்கன் கிழவன் நிலத்துக்கும் விற்கின்றேன் நிலத்துக்கும் வடக்கும் மேல்பாற் கெல்லே விற்கின்றேன் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லே ராஜராஜ வாய்க்காலுக்கு தெற்கும் இன்னன்கெல்லேயுள் நடுவுபட்ட நிலம் நால் மாவரை முந்திரிகையும் தெற்கில் . . கண்டத்து கீழ்பாற்கெல்லே மேற்குடையான சந்திரசேகர நிலத்துக்கு கிழக்கும் வ . . .

9 கின்றென் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லே ராஜராஜ வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லே சற்ருலக்காடு கிழவன் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லே [வாசிய]வாய்க் காலுக்கு தெற்கும் இன்னன்கெல்லேயுள் நடுவுபட்ட நிலம் இருமாவரை மேலேத்திடலில் நாகவிளாகமென்று பேர்கூவப் பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லே மேற்குடையான் சங்கர தேவன் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லே ராஜராஜ வாய்க்காலுக்கு வடக்கும் மேல் . . .

10 கெல்லே திருக்குரவதிக்கு கிழக்கும் வடபாற்கெல்லே விற்கின்றேன் நிலத்துக்கு தெற்கும் இன்னன்கெல்லேயுள் நடுவுபட்ட நிலம் நான்மாவரையே அரைக்காணியின் கீழரையும் பிடாரி கோயில் கண்டத்துக்குக் கீழ்பாற்கெல்லே மேற்குடையான் சந்திரசேகரன் கமுகந் தோட்டத்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லே பிடாரி கோயிலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லே பூலாங்குடையான் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லே மூவேலி வாய்க்காலுக்கு தெற்கும் இன்னன்கெல்லேயுள் நடுவு . . . .

11 க்குறைவு உட்பட திருநாமத்துக்காணியாக விற்றுக்குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த விலேப்பொருள் அன்ருடு நற் காசு ௫௲ ஆக நிலம் ௱ஹதரூஉஹப . . இன்னிலம் பத்தெ அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே [ஒரு]மா முந்திரி கைக்கு விலேப்படிக் காசு உாகூகூகூநாம் ஆவணக்களியே காட்டேற்றிக் கைச்செலவறக் கொண்டு விற்றுவிலேப் பிர மாண இசைவுதிட்டுக்குடுத்தேன் ஆதிதன்டேவூர தேவகன்மி களுக்கு ஆ

12 [மோ]நாயநார்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாகப் பிள்ளையான கோவ . . மா இட்ட திருவாபரணங்கள் விற்று இற்றை நாளால் ஒரு கிழியப்படந் கைக்கொண்டு குடுத்தபடிக்கு கிழிப்புணைப்பட்டு எழுத்திட்ட மேற்குடை யான் அரயன் சங்கர தேவன் எழுத்து இப்படிக்குப் பிர மாணத்துக்கும் எழுத்து இட்டார்;—பிரமாணப்படி ரூயாபணகீழ்ஙபணக்கு . . . .

13 . . . . . நிலத்துக்கு தெற்கும் இன்னுன்கெல்லையுள் நடுவு . . . . . . முக்காணி அரைக்காணியின் . . . . . கீழைச் சென்னல் கண்டத்துக்கு கீழ்பாற்கெல்லை . கற்க்குறு[ம]யூருடையான் ஸ்ரீதநம் பெற்ற நிலத்துக்கும் மேற் . . . . . . . . சந்திர சேகர

14 வாக்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை . . . சங்கரதேவன் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை உட்சிறு வாய்க் காலுக்கு தெற்கும் இன்னுன்கெல்லையுள் நடுவுபட்ட ரூரு இந்நிலம் அரையும் புறத்துண்டத்துக்கு கீழ்பாற்கெல்லை திருவரங்க விண்ணகர ஆழ்வார் திருவிடையாட்டத்து மேற்கும் தென்பாற்கெல்லை திருவிடைக்கழி எல்லைக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை [இறைகு] . . .

15 . . வூர் குலோத்துங்க விண்ணகராழ்வார் இறையிலியான நில மாய் ஸ்ரீசெல . . விலையாக நான் விலைகொண்ட நிலமான . . டுகை விளை நிலத்துக்கு கீழ்பாகெல்லை பெருவழிக்கு மேற் கும் தென்பாற்கெல்லை மேற்குடையான் சந்திரசேகரன் நிலத் துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை பவுத்திர மாணிக்கவதிக்கு கிழக்கும் வடபாற்கெல்லை திருவிடைக்கழி எல்லைக்குத் தெற்கும் இன்னுன்கெல்லையுள் நடுவுபட்ட நிலம் ப இன் . .

16 களும் அகப்பட ஆஸனந போகத்தோடும் விலைக்கற விற்றுப் பொருளறக் கொண்டு திருநாமத்துக் காணியாக விற்று விலைப்பிரமாண இசைவுதீட்டுக் குடுத்தேன் இன்நிலத்துக்கு ஊர்மாவிந்த உடமை குடிமை ஊர் இறுத்தபடி இறுக்கக் கடவதாகவும் விற்றமைக்கு இவர்கள் சொல்ல இ . . . . . இசைவுத்தீட்டு எழுதிநேன் மேற்குடையான் சங்கரதேவன் பெரியாண்டான் எழுத்து உ

17 கு கொண்டு குடுத்தபடிக்கு கிழிப்புணை . . . டு எழுத்திட்ட மேற்குடையான் அரயன் சங்கர தேவன் எழுத்து இப்படிக்கு பிரமாணத்துக்கும் எழுத்து இட்டார் உ

த. நா. தொ. ஆய்வுத்துறை                    தொடர் எண் : 8 / 1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில் — நிருத்தமண்டப கிழக்குப்புற ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : நிலவிலை ஆவணத்தைக் குறிப்பதாகத் தெரிகிறது. கல்வெட்டு இடையிடையே சிதைந்து விட்டது. வியாபாரி நெடுவாயிலுடையார் செய்து தந்த நிலவிற்பனையாகத் தெரிகிறது. ராஜராஜன் பெயரில் மடமும் பந்தலும் இருந்திருக்கிறது.

இடையில் வாயிற்படி கட்டிவிட்டதால் தொடர்ச்சி நடுவில் தடைப்படுகிறது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத் . . . . . . . . . . . . . . . ஷே
நாயற்று பூர்வபக்ஷத்து . . . . யும் திங்கள் கிழமையும்
பெற்ற உரோசணி நாள் . . . . . . . . நிலவிலைப் பிர
மாண இசைவுத்தீட்டு உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்
பூர் நாட்டு

2 யில் ஆதிசண்டேஸ்வர தேவர் . . . . . . . . . . . . . யாபாரி
களில் நெடுவாயிலுடையார் பக்கல் ஓலை கொண்டு உடை
யேனுய் என்னு . . . . . . . . . . . . . . . . . இன்னம்
பர் நாட்டு பெருமா . . . . . யான் அபிமானமேருச் சருப்
பேதி மங்கலத்து மெ . . . . . . . .

3 ல்லூரில் பொத்தகப்படி நிலம் உலி . . . . . . . . ராஜராஜன்
மடமும் பந்தலும் உட்பட்ட நிலத்துக்கு தரியம்பகமையும்
உட்பட ஒ . . . . . . . . குற்ற[வு] உள்ளடங்க விற்றுக்
குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள்
அன்றாடு . . . .

4 பணிய் அற விட்டுத்தந்தமையில் . . . . . . . . . . . . . டுவிற்று
விலைப்பிரமாண இசைவுத் தீட்டுக் குடுத்தேன் இக்கோயில்
ஆதிசண்டேஸ்ர தேவ . . . . . . . . . . கிணறும் பொது
வும் போதாதியும் பாகாசிரியங்களும் இந்நிலத்துப் பாகாசி
. . . . . . .

5 . . . . . . . . . . . . . . . . . ஆதிசண்டேஸ்ர தேவர்கன்மி . .
. . . . . . . . . . . . ஓலை காட்டக் கடவதல்லாத . . . . .
. . . . . . துக்கு இவர்கள் . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம் :** | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| **வட்டம் :** | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 13-ஆம் நூற்றூண்டு |
| **ஊர் :** | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| **மொழி :** | தமிழ் | முன் பதிப்பு | — |
| **எழுத்து :** | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| **அரசு :** | — | | |
| **மன்னன் :** | — | | |

**இடம் :** பாணபுரீஸ்வரர் கோயில்– நிருத்தமண்டபக் கிழக்குப் பட்டியிலுள்ளது.

**குறிப்புரை :** கல்வெட்டின் இறுதிப்பகுதியே உள்ளது. இடையிடையே எழுந்த புதுக் கட்டடங்களால் கல்வெட்டின் தொடர்பு அறிய இயலவில்லை. நிலத்தின் எல்லைகளும், அளவும் குறிக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டு :**

1 க்கு தெற்கு இன்னுன்கெல்லையுள் நடுவுபட்ட ரூ ஃகூகுரூ ங . . . . . . மேற்கும்தெ . . . . . . . . திருவிடைக்கழி எல்லைக்கு வடக்கும் கிழக்கு . . . .

2 லுக்கு தெற்கு நடுவுபட்ட ரூ . . . . . . உச இந்ரூம்இரண்டு மா முந்திரிகைக் கீழ் எழுமாவரை . . . . . . . . எல்லைக்கு . . . . . . . . கெல்லை ஆனைச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வர முடையான் சீதனம் பெற்ற ரூலத்து . . . . .

3 வடபாற்கெல்லை சங்கரன் வாய்க்காலுக்கு தெற்கும் பட்டரூ த . . . . ரூ ப இந்நில முக்காணி . . . . . . . . . . சேதிகுல ராயன் நிலத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்லை ஆனைச்சூர் கிழவன் திருப்பட்டீஸ்வர . . . .

4 . . . டையான் கமுகு நின்ற ரூ . . . . . . . ழுக்கு வடபாற் கெல்லை கள் . . . . . . . . . . . . . . . . . முந்திரிகையும் ஆக ரூ . . . . ஙகூ3கீழ்பகயஙு . . . . . . . .

5 கு மேற்கும் தென்பா[ற்கெல்லை] திருவிடைக்கழி எல்லைக்கு வடக்கும் கிழக்கும் . . . . . . .

6 எல்லைக்கு . . . . . . . . . பாற்கெல்லை ஆனைச்சூர்கிழவன் திருப் பட்டீஸ்வரமுடையான் சீதனம் பெற்ற ரூலத் . . . . . ழக . . . . . .

7 . . . . . கெ . . . . . . . . . . சேதிகுலராயன் நிலத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்லை ஆனைச்சூர் கிழவன் திருப்பட் டீஸ்வர

8 . . . . திரி . . . . . . முந்திரிகையும் ஆக ரூ ஞகூஉகு வங்ஞ . . . . . ருகாலே நாலு . . . . . .

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : குடந்தை
ஊர் : குடந்தை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :
முன் பதிப்பு :
ஊர்க் கல்வெட்டு எண் : 10

இடம் : பாணபுரீஸ்வரர் கோயில்-நிருத்தமண்டப மேற்கு, தெற்குப்புற உபானத்தில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒருபகுதியே உள்ளது. இக்கல்வெட்டு, ஊரை நோக்கி எழுந்தருளியுள்ள இறைவனின் கோயிலின் பித்தியில் இக்கல்வெட்டு பொறிக்கப் பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு

1 . . . . ஷ பண்ணச் சொன்னோம் இப்படி . . நிற்குமிடத்து ஊரைத் திருக்கண்ணோக்கி எழுந்தருளியிருக்கிற உடையார் பிரியாத மஹாதேவர் ஸ்ரீவிமானத்தில் ஷிதியில் ஶிலாவத மான ப்ரதேஶத்திலே இந்நியோகப்படி உள்ள பாசுரம் கல்லிலே வெட்டக் கடவதாகவும் [பா]ரில் காணியாளரான . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 35-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1213 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 260 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தென் மாவட்டக் கல்வெட்டுக்கள் பக். 194 எண். 9 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : நாகேஸ்வரர் கோயில் உட்பிரகாரத்தின் வடக்குப்புறச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : ஆழ்வான் திருப்புறம்பியமுடையான் ஆன செம்பியன் பல்லவரையன் என்பான், கீழ்க்கோட்டமுடையார் கோயிலின் கிழக்குத் திருச்சுற்று மாளிகையில், தன் பெயரில் திருப்புறம்பியமுடையாரெனும் இறைவனை எழுந்தருளச் செய்தான். அவ்விறைவனுக்குப் பூசை, திருவமுது, திருவிளக்குகள் இவைகளுக்கும், பூசை செய்யும் நம்பிமார்களுக்கு நிமந்தத்திற்கும், திருக்கீழ்க்கோட்டமுடையாருக்கு மகர தோரணம் செய்து அளிப்பதற்கும் ஆகிய திருப்பணிகளுக்குக் கோயிற் பண்டாரத்தில் 17,000 காசுகள் அளித்துள்ளான். இச்செய்தியினை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளி விஜயாபிஷேகமும் வீரா அ

2 பிஷேகமும் பண்ணியருளின ஸ்ரீ திரிபுவநவீரதேவர்க்கு யாண்டு முப்பத்தஞ்சாவது உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில் உடையா

3 ர் திருக்கீழ்கோட்ட முடையார் கோயில் முதல் பிரகாரத்துக் கீழைத் மாளிகையில் வேளூர் [கிழ]வன் ஆழ்வான் திருப்புறம்பியமுடையானுந செம்பியன் பல்லவரைய

4 ன் எழுந்தருளிவித்த உடையார் திருப்புறம்பியமுடையார்க்கு அமுதுபடிக்கு ஞளொன்றுக்கு . . . தாளக் . . . . . வெள்

ளைக்குத்த[ல் அ]ரிசி நானுழியும் இவ்வரிசியால்வந்த

5 [ப]ருப்பமுதும் களி அமுதும் உப்பமுதும் மிளகமுதும் தயிரமுதும் நெயமுதும் அடைக்காய்அமுது பாக்கும் இலை அமுது மற்றும் திருமஞ்ச]

6 னமும் திருப்பள்ளித்தாமமும் திருமேற்பூச்சும் உள்ளிட்ட விஞ்சனத்துக்கும் சிறுகாலைச் சந்திவிளக்கு இரண்டும் உச்சிச் சந்திவிளக்கு ஒன்று

7 ம் இரவைச் சந்திவிளக்கு நாலும் ஆக இச்சந்திவிளக்கு ஏழுக்கும் வேண்டும் திருவிளக்கு எண்ணையும் இந்நாயனர் ஸ்ரீபண்டாரத்து உட

8 விலே இத்திருப்புறம்பியமுடையார்க்குப் பூசைக்கும் அமுது படிக்கும் விடக்கடவதாகவும் இப்படி விடுமிடத்து முப்பத்தஞ்சா

9 வது சித்திரைமாஸ முதல் நிமந்தக்கட்டாக விடக்கடவதாகவும் பூசிக்கும் நம்பிமார் சிவப்பிர[ாம]ண . . . ஞ்சனமைப் பாருக்கும் வே

10 ண்டு நிமந்தத்துக்கு இக்கோயிலில் உடலிலே விட்டு இத்திருப்புறம்பியமுடையார் அமுது செய்தருளிந சோறு நானுழியும்

11 சோற்றடைப்பிலே கூட்டிக்கொள்ளக்கடவதாகவும் இப்படியால் வந்த நிமந்தங்கட்[கு]* இப்படியே சந்திராதித்தவற்விட

12 க்கடவதாகவும் இதுக்கு உபயமாக உடையார் திருக்கீழ்கோட்டமுடையாருக்கு திருமகரதோரணம் பண்ணிச்சாத்துகை

13 க்கு உபையமாக வேளூர் கிழவன் ஆழ்வான் திருப்புறம்பியமுடையாநாந செப்பியன் பல்லவரையன் முப்பத்தஞ்சாவது நாள் உஙா

14 அயிள ஞல் சீபண்டாரத்து ஒடுக்கினகாசு ௰௭ஆ காசு பதினேழாயிரமும் சீபண்டாரத்து ஒடுக்கினமைக்கு இவை கோயிற்கணக்கு இராமநூருடையான் மூலபருஷப் பிரியனேனெழுத்து

15 இக்காசு பதினேழாயிரமும் சீபண்டாரத்து ஒடுக்கினமைக்கு தேவகன்மி உய்யக்கொண்டான்பட்டனெழுத்து இக்காசு பதினேழாயிரமும் கோயில் ஒடு . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | சகம் : 1412<br>கி.பி. 1490 |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 259 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | விஜயநகரர் | | |
| மன்னன் : | கோனேரிதேவ மகாராயன் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் உட்பிராகாரத்தின் வடக்குச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : கோனேரி தேவ மகாராயனின் காலத்தில் மடந்தைபாக நாயனுர் கோயிலில் பலவாருகச் சிறப்பாகப் பணிபுரிந்த மடந்தைபாகக் கொங்கராயன் என்பானுக்கு, மூன்றுவேலி நன்செயும், நாள்தோறும் சோறும், சன்னதித் தெருவில் ஒரு மனையும் ஆகிய இவைகளைச் சர்வமானியமாகக் கொடுத்த செய்தி குறிக்கப்படுகிறது. மடந்தைபாக நாயனுர் கோயிலோடு தொடர்புடைய அதிகாரிகளான. மடத்து முதலிகள், மாகேஸ்வரர், மூல பருஷத்தார், கோயில் நாயகம் செய்வார், தேவ கன்மிகள், பிற அனைத்துக் கொத்துக்களும் கூடி இம்முடிவினைத் தெரிவிக்கின்றனர்.

கோயிலொழுகு நூலில் குறிப்பிட்டுள்ள, திருச்சிப் பகுதியில் அரசப் பணி புரிந்த சாளுவ திம்மராஜா என்பவருக்குப் பின்வந்த மன்னனை கோனேரிதேவ மகாராயனே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னன் என்பது, திரு. கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் கருத்து. இம்மன்னன் வைஷ்ணவத்திற்கு எதிராக இருந்தான் என்றும் கூறப்படுகிறது.

கல்வெட்டு

1 ஸஹஸ்ரே ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் ... ன் மேல் செல்லா நின்ற சாதாரண ஸம்வற்

2 ஸரத்து மகர நாயற்று அபர பக்ஷத்து ஸ்வாதியும் ஆதித்ய வாரமும் பெற்ற அத்தத்து நாள் உய்

3 யக்கொண்டார் சோழ வளநாட்டுப் பா . . நதி நாட்டு ப்ரஹ்ம தேஸம் திருக்குடமூக்கு நாயனுர்[ம]*

4 மடந்தைபாக நாயனுர் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர் திருவாய் மலர்ந்தருளினபடி

5 க்கு மடத்து முதலிகளும் மாஹேஸ்வரரும் மூலபருஷத்தாரும் கோயில் நாயகம்

6 செய்வாரும் தேவகன்மிகளும் அனைத்துக் கொத்தும் நிறைவற நிறைந்து குறைவற

7 கூடி இருந்து இக்கோயில்க் காணி தேவர்அடியாரில் சேதிராய மாணிக்கத்தின் மகன் திம்மண்ணன் . . .

8 மடந்தைபாகக் கொங்கராயனுக்கு குடுத்த திருமுகம் நாயனார் மடந்தைபாக நாயனார்க்கு

9 ஆங்காங்கவைபோக நய்வேத்தியத்துக்கு ஸ்ரீமநுமஹாமண்ட லேஸ்வரந பட்டுக்கட்டாரி

10 ராய வஸவசங்கர மதியாத மன்னர் மணவாள காஞ்சீபுரவரா தீசுர கோனேரி தேவ மஹாராசாவிநு

11 உபையம் ஆக நடக்கும்படிக்கு கோயில் பற்று ஆக தாங்கள் கருப்பூர் சேற்பித்துக் கொண்டு கல்லும்

12 வெட்டி நாட்டுவித்து தந்தபடிஆலும் தங்கள் முகாந்தரமாக திருவாசலுக்கு வேண்டின கோயில் காரிய

13 ங்கள் செய்வித்தபடிஆலும் தனக்கு மடந்தைபாக கொங்கு ராயன் என்று திருநாமத்தாலே பெரும் திருவிள

14 ம்பற்றி தனக்கு அருள காணி இறைஇலி ஆக திருவுளம் பற்றின உள்ளூரிலும் தட்டவ[ன்பிலு]ம் கிழஞ்சேரியிலும் ஆக

15 சேத்த உழவினல் நஞ்செய் ரூ கூலி–நாள் ஒன்றும் சோறும் . உ சன்னதிதெருவில் வட சிறகில் இரயர் முன்

16 பாலத்து நஞ்சிமனைக்கு கிழக்கு சேத்தமனை ஒன்றுக்கு கீழ் மேல் கோல்ரூ தென்வடல் . . [கடை வால்]

17 நீளமும் உள்பட மனை ௧ ஆக இந்த உழவினல் நஞ்செய் நிலம் மூவேலியும் சோறு நாழியும் . . . இன்

18 றும் பெற்று சந்திராதித்த வரையும் ஸர்வமாந்நியம் ஆக அனு பவித்துக் கொள்ளவும் உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 20-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1236 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 258 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் - உட்பிரகாரத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் இராஜராஜனின் 20-ஆம் ஆட்சியாண்டில் திருக்கீழ்க் கோட்டமுடையார் கோயிலின் தெற்குத் திருமடை விளாகத்தில் எழுந்தருளியிருக்கும் நாயனார் மடந்தைபாகருக்குத் திருப்பணி செய்யவும், திருவாபரணங்களுக்கும் நிலம் கொடையளித்ததையும், இக்கோயிலில் உள்ள திருகுடமூக்குடையாருக்குத் திருப்பணிக்காக நிலம் அளித்ததையும் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் ஸ்ரீபுராணங் கேட்டருளா நிற்க என்று வருகிறது. இக்கல்வெட்டின் தொடர்ச்சியாக பகுதி II-ம் எழுதப்பட்டுள்ளது. கீழ்க்கோட்டமுடையார் கோயிலில், கூத்தாடுந் திருஞான சம்பந்தர் மாணிக்கவாசகன் என்பார், தான் எழுந்தருளச் செய்த, திருஞான சம்பந்தீஸ்வரமுடையாருக்கு, அமுது படிக்கு நிலம் அளித்த செய்தி குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டுக்களில் அவன் அளித்த நிலங்களின் அளவுகளும் எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

I

1 ஸ்வஸ்திஸ்ரீ சீர்மன்னி யிருநான்கு திசை விளங்க திருமடந்தையும் போர்மன்னு ஜயமடந்தையும் புவிமடந்தையும் மணம் [புணர அரும]றையினெறி வாழ அருந்தமிழோர் கிளைவாழப் பொருவி

2 ல் மனுநெறிவாழப் பொன்மகுடங் கவித்தருள வெங்கோபக் கருங்கலிப்பகை விடர் நாகர் பிலம்படரச் செங்கோலுங் கொடி[ப்புலி]யுந் திகிரிவரை வரம்பளக்க எண்டி . . . .

3 டுத்தனிக்கூடமென்ன அண்டகூடமுமளந்த முழும(த்)திக்குடை நின்றழகெறிப்ப பொலந்திகிரி பதினறு புவனங்களுமடிப் படுத்தி இ[லங்கு]வடமெருதிரியருந்த வயப்புலியேறென்[ன செம்பொ]

4 ன் வீரஸிம்ஹாஸநத்துப்புவன முழுதுடையாளொரும் வீற்றிருந் தருளிய கோராஜகேசரிபந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தே[வற்கு]யாண்டு இருபதாவது மீன நாயற்று பூவ-ஃ[பக்ஷ[த்து] . . .

5 கிழமையும் பெற்ற சித்திரை நாள் உய்யக்கொண்டார் வள நாட்டுப் பாம்பூர் நாட்டு ப்ரஹ்மதேயம் திருக்குடமூக்கில் உடையார் திருக் கீழ்க்[கோட்ட] முடையார் தெற்கில் திரு மடைவிளாகத் . . . . . கயக்க . . .

6 த்துக் கும்பிட்டு இருக்கும் கூத்தாடுந் திருஞாந சம்பந்தர் மடந்தைபாகனேன் நாயனுர் மடந்தைபாக தேவர் திரு வனத்தில் எழுந்தருளியிருந்து திருஓலக்கஞ் செய்து ஸ்ரீபுரா ணங் கேட்டருளா நிற்க்க

7 இன்னுயநார்க்குத் திருப்பணிக்குந் திருவாபரணங்களுக்கு உட லாக என்காணியான நிலமாய் ஸ்ரீபாதத்து நீர்வார்த்துக் குடுத்த நிலமாவது இவ்வூர் பிடாகை ஆராவமுது நல்லூரில் நறு[வல்]லிக்கண்

8 டத்து இவ்வூர் ப்ராஹ்மணர் பலர் பக்கல்லிலும் விலைகொண்டும் ஆனுங்கூருடையான் புற்றிடங்கொண்டான் பக்கல் விசத்த . . ட்ட பரிவத்தனையாக உடையாந் திருச்சிற்றம்பல முடை யான் தே

9 வநாந ராஜாதிராஜ வளநாட்டு வெண்ணையூர் நாட்டு மேலை வல்லத்து என் காணியான நிலம் நாலே ஆறுமாவும் குடுத்து நான் பரிவத்தனையாலும் என்னுதாய் நான் அனுபவித்து . . . . . . .

10 ய திருநாமத்துக் காணியாக குடுத்த விளைநிலமும் புன்செய்யும் புன்செய்த்திருத்தும் அகையாறும்மாவது இவ்வூர் பிடா[ர]*ன் ஆராவமுது நல்லூரில் காமக்காணி மஹாதேவன் வடுகன் உள்ளிட்டார் நி[லத்]துக்

11 கு மேற்கிநாலும் ஆராவமுது வாக்காலுக்கு வடக்கினுலும் உடையார் திருக்கழி*கோட்டமுடையார் திருமஞ்சனப் பெரு வழிக்கு கிழக்கினுலும் முதலியார் மாணிக்கவாசகர் காணி யான நிலத்துக்கு தெற்கும் ஆக இசை

12 ந்த இன்னுன்கு எல்லையுள் நடுவுபட்ட நிலமும் இன்னி[ல*]மும் இக்கட்டளையில் குடுத்த ஆதுயென் மாயான் சடரி மகுட பட்டன் வாடீண நிலத்துக்கும் அபிமான பூஷண விஞயகப் பிள்ளையார் நிலத்துக்கு மேற்கும்

13 கவுணியன் மஹாதேவன் சீ பலதேவபட்டன் நிலத்துக்கு வடக்கிநாலும் இன்னுயனுர் திருமஞ்சனப் பெருவழிக்கு கிழக்கினுலும் குலோத்துங்க சோழன் குலேக்கு தெற்கினுலும் ஆக நடுவுபட்ட நிலமும் ஆக இப்படியா

14 ல் வந்த விளை நிலம் புன்செய்யும் புன்செய்த் திருத்தும் அகையாறு மிகிதிக் குறைவுள்படக் குடுத்த நிலம் ரூசு இன்நிலம் ஒன்றரையே அரைமாவும் இன்னிலங்களில் மேனேக்கின தெங்கு உள்ளிட்ட . . .

15 ங்களும் கீழ்நோக்கின கிணறுகளும் புகவும் போர்வும் நீர்பாயவும் வார்வும் மற்றும் எற்பேறபட்ட உரிமைகள் உள்ளபடி நான் குடுத்தபடியே திருநாமத்துக் காணி ஆகவும் இன்னிலத்து இறுப்பு விளைநிலத்துக்கும்

16 புன்செய்க்கும் ந[ா]ன் இறுத்து வந்தபடியே ஊர்வாய்ந்த கடமை இறுத்து இறை மிகுதியால் உள்ள உடல் கொண்டு திருப்பணிகளும், திருவாபரணங்களும் இன்னுயனுற்கு செய்ய வேண்டுவன செ

17 யக்கடவேனுக[வும்] பின்பும் என் சந்தானத்தில் உள்ளார் இவ்வுடல் கொண்டு இப்படி செய்யக்கடவதாகவும்உ இவ்வூரில் ஜனநாயகற் . . . . . . . த்தில் எழுந்தருளியிருக்கும் உடையார் தி

18 ருக்குடமூக்குடையார்க்கு குடுத்த நிலமாவது இக்கட்டளையில் குடுத்த அகையாறு நிலம் நான்மாவரையும் இன்னுயநாற்கு திருப்பணிக்கு உடலாகவும் இப்படி சம்மதித்து இன்னுயன் மாற்கு திருநா

19 மத்துக்காணியாக குடுத்தேன் கூத்தாடுந் திருஞாந சம்பந்தர் மடந்தை பாகனேன் இப்படிக்கு இவை கூத்தாடுந் திருஞாந சம்பந்த [மடந்தை]பாகனேன் எழுத்து உ அருளிச் செய்ய இப்பி

20 ரமாண இசைவுதீட்டு எழுதினேன் ஐயங்கொண்ட சோழவளனாட்டு திருவழுந்தூர்னாட்டு காஞ்சிவாயிலுடையான் மடந்தை பாக தில்லேவாணன் எழுத்து

## II

21 ஸ்வஸ்திஸ்ரீ இற்றை நாளால் . . . . . .

22 கூத்தாடுந் திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகனேன் உடையார் திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயில் நான் எழுந்தருளிவித்த கூத்தாடுந்திருஞான சம்பந்[தீ]ஸ்வரமுடையார்க்கு அமுது படிக்குக் குடுத்த இக்கட்டளையி

23 ல் நாயனார் மடந்தைபாக தேவர் திருநாமத்துக் காணியான நிலத்துக்கு மேற்கும் வடக்கும் இன்நாயனார் திருமஞ்சனப் பெருவழிக்குக் கிழக்குங் கவி . . . . . . மஹா[தே]வன் ஸ்ரீ பலதேவபட்டன் நிலத்துக்குத் தெற்குமாக நடு

24 [வு]பட்ட விளைநிலமும் புன்செய்யும் புன்செய்த் திருத்தும் நிலம் ஒரு[மா]முக்காணி முந்திரிகையும் என்னோபாதி தெங்கு ஒன் றரையும் இன்னா[யனா]ர்க்[கு*] குடுத்தேன் கூத்தாடுந் திருஞான சம்பந்தர் மாணிக்கவாசகே

25 னன் இப்படி அருளிச் செய்ய இப்பிரமாண இசைவுதிட்டு எழுதி னேன் . . . . காஞ்சிவாயிலுடையான் மடந்தைபாகன் தில்லை வாணனேன் [எ]ழுத இப்படிக்கு [இவை] கூத்தாடுந் திரு ஞானசம்பந்தர் மாணிக்கவாசகன்உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1238 |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 257 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |

**இடம் :** நாகேஸ்வரசாமி கோயில் உட்பிரகாரத்தின் வடக்குச் சுவரில் உள்ளது.

**குறிப்புரை :** திருக்கீழ்க் கோட்டத்தில் உள்ள மடந்தைபாக நாயனுர்க்கு இவ்வூர் காமக்காணி யுடைய நாராயணன் அம்பலத்தான் என்பானின் மனைவி உய்யவந்தாட் சாணி என்பாள், பங்குனி மாதம் பூரட்டாதி நாளில், திருக்காப்பு நாண், திருப் பாவாடை ஆகியன சாத்தவும், மார்கழி மாதம் திருவாதிரை நாளில் திருவமுது செய்யவும், திருப்பங்குனித் திருநாளில் வழிபாடு செய்யவும், நிலம் கொடையாக யாக அளித்த செய்தி குறிக்கப்படுகிறது. பல இடங்களில் நிலம் தனித்தனியாக இருப்பதால், எல்லா நிலங்களுக்கும் எல்லைகள் தனித்தனியாகக் குறிக்கப் படுகிறது. எல்லை குறிப்பிடுகையில், வானவன்மாதேவி நல்லூர், விக்கிரம பாண்டிய நல்லூர், இராசநாராயண நல்லூர் ஆகிய ஊர்களும், ராஜராஜவாய்க் கால், சோழ உத்தம வாய்க்கால் ஆகிய கால்களும் குறிக்கப்படுகின்றன.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ திருபுவ[ன]*ச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு உ௰உவது ஜ்ரச்சிகநாயற்று அபரபக்ஷத்து புதன் கி

2 ழமையும் பெற்ற உரோசணி நாள் காத்திகை மாதத்து உயக் கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் உடை[யார்]

3 திருக் கீழ்கோட்டமுடையார் கோயிலில் மடந்தைபாக நாய ஞர்க்கு இவ்வூர்க் காமக்காணி ஞராயணன் அம்பலத்தா

4 ன் ஸூனி உய்யவந்தாட்சானி இன்ஞயநார்க்குப் பதிஞரூவது பங்குனிமாஸத்து பூரட்டாதித் திருநாளிக்கு திருக்காப்பு ந

5 ஏனுக்குத் திருப்பாவாடைக்கு ஊர்க்காலால் இருகலனே தூணி பதக்கு திருவமுது அரிசியும் இதுக்கு நிமந்தக் கட்டு[ப்படி]

6 கறி[யமு]து உள்ளிட்ட விஞ்சனங்களும் திருமார்கழித்திரு வாதிரை அமுது செய்தருள திரு[வ]முது அரிசி கலமும் கறி அமுது உள்

7 ளிட்ட விஞ்சனமும் திருப்பங்குனித் திருநாளைக்குத் திருக்காப்பு நாணுக்கு திருப்பா . . . திருவமுது அரிசி இருகலனே தூ

8 ணிபதக்கும் இதுக்கு நிமந்தக் கட்டுபடி கறி அமுது உள்ளிட்ட விஞ்சனமும் . . . வித்துவருகையில் இதுக்கு இன்

9 னுயனுர்க்கு னுன் இ[ருபூவில்]விலை கொண்ட நிலம் உள்பட இட்ட இவ்வூர் கைவினை [வடை] . . . . லூரில் கௌணி யன் மஹாதேவன் கு

10 க்கும்மாரன் உள்ளிட்டார் னிலத்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லை ராஜராஜவாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாறல்லை குடுக்கின்[ற்]றேன்

11 . . ஏகைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை ஒழுக்கைக்கு தெற்கும் இன்னுன்கெல்லை[யுள்] நடுவுட்பட [வுள்ள] நிலமுக்காணி அ

12 ரைக்காணியும் [யி]ன்னம் வானவன் மாதேவினலூரில் கொண் [டி]ச்சாணி நிலத்துக்கு மேற்கும் மேற்பட்ட

13 புன்செ[ய்]*க்கு வடக்கும் மேல்பாற்கெல்லை காமக்காணி சீகருண்னனுராயணன் உள்ளிட்டார் புன்செய்க்கு கிழக்கும்

14 வடபாற்கெல்லை யிரா[ஜ]ரா[ஜ]* வாய்க்காலுக்கு தெற்கும் யின்னுன்கெல்லையுள் னடுவுபட்ட நிலம் யிரண்டுமாவும் யின் னம் விக்கிரபா

15 ண்டிய நல்லூரில் மாடிலன் திருச்சிற்றம்பல முடையான் பிளைய தியம்பகன் பக்கல் விலைகொண்டு விட்ட நிலம் மூன்று

16 மாவும் நிலம் தண்ணிச்சாகையினுல் யிது தவிந்து யிதுக்கு தலை மாறு வானவன் மாதேவனல்லூரில் விடுகிற நிலத்

17 துக்கு மேல்பாற்கெல்லை கொண்டிச்சானி நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை யிரா[ஜ]*ரா[ஜ]* வாய்க்காலுக்கு தெற்கும் கீழ்பாற்

18 கெல்லை குடுக்கின்றே நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை கொண்டிச்சானி நிலத்துக்கு வடக்கும் யினுன்கெல்லையுள் ன

19 டுவுபட்ட விளைநிலம் மூன்று மாவும் யின்னம் யிராசனா[ரா*]யண
னல்லூரில் விடுகிற திருத்து விளைநிலத்துக்கு கீழ்பாற்கெல்

20 லை மோகலியன் சங்கரன் தியம்பகன் நிலத்துக்கு மேற்கு தென்
பாற்கெல்லை சோழஉத்தம வாய்க்காலுக்கு வடக்கும் ெ

21 மல்பாற்கெல்லை காமக்காணி திருச்சிற்றம்பல முடையான்
தாயபட்டன் உள்ளிட்ட நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை
வட

22 மணியான் புன்செய்க்கு தெற்கும் யின்னான்கெல்லையுள் னடுவு
பட்ட புன்செய் திருத்து நிலம் மாக்காணி முந்திரிகையினால் கு

23 ழி நானூற்று முப்பத்திரண்டரையும் இன்னமும் இந்த வானவன்
மாதேவிநலூரில் இரா[ஜ*]ரா[ஜ*] வாய்க்கா . . கைக்கு தெ

24 ற்கும் விளைநில மூன்று மாவும் யிதன் கீழ்தலை[யில்] புன்செய்
நிலம் குழிா அச்சின்னமும் இரா[ஜ*]ரா[ஜ*] வாய்க்காலுக்கு
வடகரையில்

25 புன்செய் நிலம் மிகுதிக் குறைவு உள்ளடங்க நிலம் அரைக்
காலும் ஆக நிலம் ஆறுமாச் சின்னம் நானுள்ளதனையும்
நானே

26 அனுபவித்து என் அஸாவத்து மடைந்தைபாகர் திருக்காப்பு
நாண் சாத்தி அமுது செய்தருள குடுத்த நிலத்தோடே
கூடக்குடு

27 த்தேன் . இந்நிலம் ஆறுமாவின் சி[ன்*]னமும் என்னுடைய
அஸாவத்து நான் அமுது சேவித்தாப் போல திருப்பாவாடை
கோயில் நிமந்த

28 . . . . . . . ய் என்னுடைய ஸுதர்கள் அமுது செய்விக்கக்
கடவர்கள்ளாகவும் மாட்டுதிலர்களாகில் சிகையுந் தனிசும்
படார

29 . . . ரும் வெட்டாதே ஹோகத்தோடே பண்டாரத்துடனே
கூட்ட விடக்கடவர்களாகவு பின்புத் தானத்திலுள்ளார்
இப்படி அ

30 . . . செய்விக்கக் கடவர்களாகவு பண்ணி கல்லுவெட்டிக் குடுத்
தேன் காமக்காணி நாராயணனம்பலத்தாடி ப்ராஹ்மணி
உயவந்த . .

31 . . . . . .

7 . . ன்கங்கநும் உழக்கு நெய்யட்ட ஆடு தொண்ணூற்றுறும்
அக . . . . ந்நெய் அற்றைக் . .

8 அறசாலையில் அட்டக் கடவாராக அச்சு . . குடுத்தேந் இவ்வாடு
சந்ராதித்தவல் சாவாமூவா [பேர]

9 ஈடாக இவை ஆயிரம் திருவடியும் பந்மாஹேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் (ஆதித்த கரிகாலன் ?) | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் வடக்குப்புறத்திலுள்ளது.

குறிப்புரை : கோயில் மயிலையான் மதுராந்தக மூவேந்த வேளான் கோயிலுக்கு (திருக்கீழ்க் கோட்டமுடையார்க்கு) விளக்கெரிக்க தொண்ணூற்றுறு ஆடு கொடுத்ததைக் குறிக்கிறது. அவ்வாடுகளை மன்றாடிகள் சிலர் தாம் ஏற்றுக்கொண்டு நெய் அளித் திருக்கின்றனர். பிராணன் குட்டேறன், கங்கன் ஆகிய மன்றாடிகள் பெயர் குறிக்கப்படுகிறது. இக்கோயிலில் அறச்சாலையொன்று இருந்த குறிப்பையும் இக் கல்வெட்டு தருகிறது. ஒவ்வொரு வரியிலும் இறுதிப் பகுதி சிதைவடைந்து விட்டது.

கல்வெட்டு :

1 ஸ்ரீகோப்பரகேஸரிபந்மற்கு யாண்டு ௰ஆவது வடகரை பாம்பூர் நாட்டு . . .

2 தானம் திருக்குடமூக்கின் திருக்கீழ்க்கோட்டத்து இங்கணுட்டுச் சிற்றிங்கண் சி . . .

3 ஹுடையான் கோயில் மயிலையான் மதுராந்தக மூவேந்த வேளான் வைத . . . .

4 க்கு மயிலைய் கோயிலான் நேரியன் மூவேந்த வேளானேன் . இச் . .

5 யயட்டுவதாகவைத்த ஆடு மன்றாடி பிராணன் குட்டேறன் நிவஹும் உ . .

6 . . . ய்யட்டுவதாக . . . . . தொண்ணூற்றுறு வலியாக்கியட்ட [கள்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 233 of 1911 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | ஆதித்த கரிகாலன் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |

இடம் : நாகேஸ்வரசாமிகோயில் கருவறை வடக்குப்புறத்தில் உள்ளது.

குறிப்புரை : இங்கணாட்டுச் சிற்றிங்கணுடையான் மயிலையான் பராந்தக மூவேந்த வேளானுக்கு, மூலபருடைப் பெருமக்கள், தாம் இன்னம்பர் நாட்டு மேற்காவிரி உடையாரிடம் அபிஷேக தக்ஷிணையாகப் பெற்ற நிலத்தில் 2 மாவினை, பட்டவிருத்திக்காக விற்றுக் கொடுத்ததையும், அந்நிலத்திற்கான எல்லைகளையும் இக்கல்வெட்டுக் குறிக்கிறது. நிலத்தினைப் பெற்றுக்கொண்டு அதனைப் பட்டவிருத்தியாகப் பராந்தக மூவேந்த வேளான் அளித்ததையும் இக்கல்வெட்டுச் சுட்டுகிறது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ பாண்டியன்றலை கொண்ட கோப்பரகே
2 ஸரிவ உற்க்கு யாண்டு உ ஆவது வடகரைப்பாம்பூர் நாட்டு
3 தேவதாநம் திருக்குடமூக்கில் மூலபறடைப் பெருமக்க
4 ளோம் இங்கணாட்டுச் சிற்றிங்கண் சிற்றிங்கணுடை
5 யாந் கோயில் மயிலையாந் பராந்தக மூவேந்த [வே]
6 வளாநுக்கு இன்நம்பர் நாட்டு மேற்காவிரி நாங்கள் உ
7 டையாரிடே அபிஷேக தக்ஷணை பெற்றுடை
8 உம்ச வேலியிலும் ஏஹாகாவைகா . . யார்கு [ஸ]
9 பட்டவிருத்தியாக இவ்வூரிலே விற்றுக்குடுத்[தோம்] இரண்டு . . .
10 இரண்டுமாவுக்கும் எல்லை கீழ்பாற்கெல்லை ஸோமு[ா]
11 ஹோமமாக விற்று குடுத்த நிலத்துக்கு மேற்கும் தெ

12 ன்பாற்கெல்லை மேற்காவிரி நிலத்துக்கு வட

13 க்கும் மேல்பாற்கெல்லை விற்றேங்கள் நி

14 லத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை விற்றே

15 ங்கள் நிலத்துக்கு தெற்கும் ஆக இவ்விசைத்தெ

16 பருநான் கெல்லையுள் அகப்பட நிலம் மூ

17 ல பறடையாரிடை விலைகொண்ட பரிசே அசந்ரா

18 தித்தவற் ஸபாவரத்தியாக வெச்சேன் பராந்தக மூ

19 வேளானேன் இது ஆயிரநிருவடியுமுடையார

20 க்ஷை ஊஷழ வராத்கேண மேவா:-

4 ம் திருக்கா . . . கம் ஸ்ரீ குடணை ௨௰௵வவை பெ
5 ரு மக்களோம் இங்கணுட்டுச் சிற்றிங்கன் சிற்றிங்
6 கணுடையான் கோயின் மயிலையாந் ப
7 ராந்தக மூவேந்த வேளாநுக்கு இன்னம்பர் நாட்டு
8 மேற்காவிரி நாங்கள் உடையாரிடை சுவிஷேகக்ஷி
9 ணை பெற்றுடைய நிலம் உமசு வேலியிலும்
10 திருக்கீழ்க்கோட்டத்து பெருமான் ஸ்ரீகோயிலிலே
11 வேதம் வல்லார் அவுலவிகள் உய ஶிவயோகிகள்
12 இ ஐவரும் அந்ராசித்தவற் உண்ண ஶாலாஹோமம்
13 ஆக வைக்கவிற்றுக் குடுத்த நிலம் சுரு இவ்வாறரை
14 நிலத்துக்கும் எல்லை கீழ்பாற்கெல்லை வேளாகுடி எல்
15 லை வரம்புக்கு மேற்கும் மேற்காவிரி நிலத்துக்கு மே
16 ற்கும் தென்பாற்கெல்லை விற்றூரும் நத்துக்கும் குள
17 த்துமாக வடக்கும் மேற்காவிரி நிலத்துக்குமாக வடக்கும்
18 மேல்பாற்கெல்லை விற்றூங்கள் நிலத்துக்கு கிழக்கு
19 வடபாற்கெல்லை விற்றூங்கணி[ல]*த்துக்கு தெற்கும் இ
20 விசச்ச பெருநான்கெல்லையுளடிப்பட்ட நிலம் சு
21 ரு இவ்வாறரையும் நான் மூல பறடைப் பெருமக்க
22 ளிடைய் விலைகொண்டுடைய பரிசெ ஶாலாஹோம
23 மாக வைச்சேன் கோயில் மயிலையாந் பராந[க]
24 மூவேந வேளாநேன் இது ஆயிரவிருவடியும் வ
25 தாஹேஸ்வரமுடைய ரக்ஷை
உதிழவேவா :-

## II

26 [ம]யிலையாந் பராந்தக மூவேந்தவேளாநுக்கு விற்ற நிலம் + காலு
27 முந்பு கொண்ட நிலமாறரையுமாகந் நிலம் [ஏழே]முக்காலுங் கொண்டு
28 இ[வ்]ஐம்பது ப்ராஹ்மண நிசதம் அந்ராசித்வத் உண்ண ஶாலாஹோம
29 மாக வைத்தேந் பராநக மூவேநவேளாநேன் பிந் கொண்ட + ஒந்றேகா
30 லுக்குமெல்லை கீழ்பாற்கெல்லை வேடர்குடி எல்லை வரம்புக்
31 கு மேற்கும் தென்பாற்கெல்லை கோயில் மயிலையாந்
32 பராநக மூவேந்தவேளாநேந் ஶாலாஹோமமும் பட்டவர்த்தியும் .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 230 of 1911 |
| மொழி | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | ஆதித்த கரிகாலன் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |

இடம் : நாகேஸ்வரசாமிகோயில் கருவறை வடக்குப்புறத்தில் உள்ளது.

குறிப்புரை : குடந்தைக் கீழ்க்கோட்டத்து மூல அவைப் பெருமக்கள், இங்கணுட்டைச் சேர்ந்த சிற்றிங்கணுடையான் கோயின் மயிலையாந் ஆன பராந்தக மூவேந்த வேளானுக்கு நிலம் விற்றுக் கொடுத்ததைக் குறிக்கிறது. அந்நிலம், வேதம் வல்லவர்கள் இருபது பேருக்கும் [அபூர்விகள்], சிவயோகிகள் ஐவருக்கும் உணவு படைக்க அளிக்கப்பட்ட நிலம் என்று குறிப்பிடப்படுகிறது, இந்நிலம் முன்னர் அபிஷேக தக்ஷிணையாக இருந்தது. சாலோபோகமாக தற்போது ஆக்கப்படுகிறது. விற்கப்பட்ட ஆறரை நிலத்துக்குப் எல்லைகளும் குறிக்கப்படுகிறது.

பகுதி II முதலில் கொடுத்த நிலம் ஆறரையுடன், மேலும் ஒன்றேகால் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. ஆனல் முன்னர் 25 பிராம்மணர்களுக்கே உணவு அளிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்க, இதில் 50 பிராம்மணர்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளது.*

கல்வெட்டு

I

1 ஸ்வஸ்திஶ்ரீ பாண்[டியன் றலைக் கொண்ட]

2 கோப்பரகேஸரி வன்மற்கு யாண்டு ௩ ஆ

3 வது வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவதாந

* இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் இப்பகுதியினை அடுத்த கல்வெட்டோடு [231 of 1911] தொடர்பு செய்து எழுதியுள்ளனர். ஆனல் இக்கல்வெட்டோடுதான் [230 of 1911] தொடர்புடையதாய்த்தெரிகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | ஆதித்த கரிகாலன் | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் வடக்குப்புறம் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் இறுதிப் பகுதி இல்லை. முன் கல்வெட்டுக்களில், [ஊ. க. எண். 15 16, 17] குறிப்பிடப்பட்ட அதே கோயிலின் மயிலையான் இதிலும் குறிப்பிடப்படுகிறான் இதுவும், திருக்குடமூக்கில் மூல அவைப் பெருமக்கள் செய்து கொடுத்த ஆவணமே ஆகும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ பாண்டியந் றலை கொண்ட கோப்பரகேஸரி வன்மற்கு யாண்டு ச[வது வடகரை பாம்பூர் நாட்டுத் தெ

2 தவதாநம் திருகுடமூக்கில் மூல பறடையோம் வடகரை இந்நம் பர்ஞட்டு மேற்காவி[ரி] நாங்கள் ஞடையாரிடை கவி

3 [பே]ஷகதக்ஷிணை[1] பெ(ற்)ற நில உய்ச வேலியிலும் இங்கணுட்டு சிற்றிங்கணுடையாந் கோயின் . . . .

4 . . க் கொண்ட நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை மூல பரடையார் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெ . . . .

---

1 அபிஷேக தட்சிணை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 8-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 229 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. III No. 131 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் வடக்குச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : பரகேஸரிவர்மனின் எட்டாம் ஆட்சியாண்டில் சாத்தன் ஆச்சனுன ....... என்பான் ஒரு நொந்தா விளக்கெரிக்க 96 ஆடுகள் கொடுத்ததைக் குறிக்கிறது. இதைப் பெற்றுக்கொண்டு மாதேவன், காரி என்ற இரு மன்றாடிகள் நெய் இந்த அளவு அளக்கவேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கும்பநாயற்று, வியாழக்கிழமை, அவிட்டத்தின் நாள் என்று நாள் பற்றிய விரிவான குறிப்பும் உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர
2 கேசரி பந்மற்க்கி யா
3 ண்டு அ எட்டாவது இ
4 வாண்டு வடகரைப் ப[ா]
5 ம்பூர் நாட்டுத் தேவத[ா]
6 ன திருக்குடமூக்கில் திருச்
7 கீழ்க் கோட்டத்தி[ல்] ப
8 ரமேஸ்வரக்கு இவ்வாட்
9 டைய் கும்பநாயற்றில் வியாழ
10 க்கிழமை பெற்ற அவிட்டத்தின் நா

11 ன்று உடையார் கண்டராதித்த தெரி

12 ஞ்ச கைக்கோளர் சாத்தன் ஆ

13 ச்சன்னை கோ [அ]ளகுஞ்சாப்பெ

14 . . . அணயன் வச்ச திருநொன்தாவி

15 ளக்கு க ஒன்றுக்கு [விட்ட] ஆடு கூ

16 ம்சூ இவய் கொண்டு மன்றாடி மா

17 தேவன்புறம் அட்டக்கடவ நெய் ரு ம[ன்]

18 றாடிமா . . . காரி அட்டக் கடவநெய் ரு . . .

19 . . . . . ஒரு விளக்கும் சன்திர

20 . . . . . ட்டக்கடவர்கள் இது பன்மா

21 ஹே[ஸ்வ]ர ரக்ஷை :—

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 8-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 234 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No: 205 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 20 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : உத்தம சோழனின் தேவியும் முத்தரையரின் மகளுமான வீரநாராயணியார் திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயிலில் அரைவிளக்கு எரிக்க தொண்ணூற்று ஆறு ஆடுகள் அளித்ததைக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இதனைப் பெற்றுக்கொண்டு கொற்றவன் தேறிலன் என்பான் அரைவிளக்கும், அயல் அஞ்சி பள்ளியும், அயல் அஞ்சி பழைநூரும் ஆகிய இருவரும் அரை விளக்கும் எரிக்க ஒத்துக்கொண்டனரென்ற செய்தியும் இக்கல்வெட்டில் உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகே
2 சரி பந்றக்கி யாண்
3 டு அ எட்டாவது இவ
4 ாண்டு வடகரைப்பாம்
5 பூர்நாட்டுத் தேவத
6 ான திருகுடமூக்கில் தி
7 ருக்கீழ்க்கோட்டத்தி
8 ல் வாஉ[ஸா]மிக்கு திரு
9 நொன்தா விளக்கு ஒன்றுக்கு ஸ்ரீ
10 உத்தமசோழ[ர்] நம்பிராட்டியர் [இள] முக்க
11 ரைய் ம[க]ள்ளார் வீரநாராயண்[ணி]யார் வை

12 ச்ச ஆடு கூ௰சு தொண்ணூற்று ஆறும்
13 . . . கொற்றன் தேறிலன் கடவ விள
14 க்கு ரு அரையும் மன்ருடி அயல் அஞ்சி
15 [ப]ள்ளியும் அயல் அ[ஞ்]சி பழைநூரும் ஆக
16 விளக்கு ரு அரையும் ஆக இவ்வொரு விள
17 க்கும் சந்திராதிதவரை கடவர் இவை பன்மா
18 ஹேஶ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | – |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறை வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : அம்பலவன் பழவன் நக்கனான விக்கிரமசோழ மாராயன் என்பான், பரகேசரி வர்மனின் பத்தாம் ஆட்சியாண்டில், சித்திரைமாத வியாழக்கிழமையும் பரணி நாளுமான சூரிய கிரஹணத்தின் அன்று நொந்தா விளக்கெரிக்கத் தொண்ணூற்றாறு ஆடு அளித்ததைக் குறிக்கிறது. இவ்வாடுகளைப் பெற்றுக்கொண்டு, மன்றுடி சோமாசி கண்ணன் அரைவிளக்குக்கு மாதத்திற்கு முந்நாழி உழக்கும், மாதேவன் சேரி, மாதேவன் கோன், மாதேவன் சிற்றப்பிரான் ஆகிய மூவரும் அரை விளக்குக்கு மாதத்திற்கு முந்நாழி உழக்கும் நெய் அளக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேச
2 ரிபநக்கி யாண்டுப் பத்தாவ
3 து இவ்வாண்டு வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவத[ா]
4 நம் திருக்குடமூக்கில் திருக்கீழ் கோட்டத்து வா॰
5 ஸ்வாமிக்கு இவ்வா[ட்]டைய் ஶேஷ நாயற்று விசாழக்கி
6 ழமைய் பெற்ற பரணி நாள் [ஸூ]ரியக்ரஹணத்தின்
7 பொதிநால் அம்பலவன் பழவ[ன்] நக்கநான விக்கி
8 ரம சோழ மாராயன் திருநொன்தா விளக்கு+
9 ஒன்றிநுக்கு வைச்ச ஆடு [கூ]*மிசூ தொண்
10 ணூற்று ஆறு இவ்வூர் மன்றுடிய் சோமாசி க

11 ண்ணன் கடவ விளக்கு ரு அரையாலும் திங்

12 கள் முன் நாழி முழாக்கு நெய் அட்டகடவநாக

13 வும் மன்ருடிய் மாதேவன் சேரி[யு]ம் இவ

14 ன் தம்பிய் மாதேவன் கோநும் மாதே

15 வன் சிற்றப் பிராநுமாய் கடவ விளக்கு ரு அரை

16 ஆலும் திங்கள் முன்நாழி முழாக்கு நெ

17 ய் அட்டக் கடவநாகவும் இது ஶன்

18 திராதித்தவர் பன்மாஹேஶ்வர ரக்ஷை :—

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 227 of 1911 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIII No.44 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | | |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருக்கீழ்க்கோட்டத்து மூல அவைப் பெருமக்கள், தஞ்சாவூரிலிருக்கும் வேளான் அரயன் கலங்காமலைக்குத் தாம் முன்னர் அபிஷேகத் தக்ஷிணையாகப் பெற்ற நிலத்துள் காற்செய்யினை விற்றுத்தந்ததைக் குறிக்கிறது இக்கல்வெட்டு. அது கொண்டு அரயன் கலங்காமலை, சிவயோகி ஒருவன் சந்திர ஆதித்தர் உள்ளவரை கும்மாயம் கறிகாய், புளிக்கறி, பொரிக்கறி, தயிர், நெய், வாழைப்பழம் ஆகியவைகளுடன் உணவு கொள்ள ஒருகலம் நெல் (உத்தமாக்ரம்) அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேஸரி வ2ஃற்கு யா
2 ண்டு மூன்றுவது வடகரைப் பாம்பூர்
3 நாட்டுத் தேவதானம் திருக்குடமூக்கி
4 ல் மூல வஷஃயோம் தஞ்சாவூரிருக்கும்
5 வேளான்ன[ந] அரயன் கலங்காமலைக்கு விற்று
6 க்குடுத்த நிலமாவது நாங்கள் சுஹிஷேக உக்ஷ
7 ணைப்[1] பெற்ற இன்னம்பர் நாட்டு மேற் காவிரி
8 திருக்கீழ் கோட்டத்துப் பரமஸ்வாமிக்கு
9 மூலபருடையோம் விற்றுக் குடுத்த மீய் வா

[1] அபிஷேக தட்சிணை

10 ய்க்கால் நால்வேலியில் வடகீழ்க்கடைய் விற்

11 றுக்குடுத்த காற்செய்க்கும் எல்லை கீழ்பாற்கெல்

12 லை மல்லிவாய் மண்ணிலைக்கு மேற்கும்

13 தென்பாற்கெல்லை இதேவந் நிலத்துக்[கு]

14 வடக்கும் மேல்பாற்கெல்லை இதேவர் நி

15 லத்துக்கேய் கிழக்கும் வடபாற்கெல்

16 லை [ஏ]ரிய் எல்லை வரம்புக்குத் தெற்க்

17 கும் இவ்விசைத்த பெருநான்கெல்லையி

18 ல் அகப்பட்ட நிலம் காற்செய்யும் மூல

19 பருடைய் பெருமக்களிடை விலைகொண்ட பரிசே உ

20 த்தமாக்ரம்[2] ஒரு கலம் ஶிவயோகி சந்த்ராதித்

21 தவற்கு[3] ஒருவன் உண்ண வைத்தேன் அரயன்

22 கலங்காமலையேன் உண்ணும்படி கும்மாயமும் காய்க

23 றியும் வேம்புகும் புளிங்கறியும் பொரிக்கறியும் தயிர் உரியும் நெய் ஒ

24 ருபிடியும் சா . . . . இரண்டும் வாழைப்பழம் இரண்டும் பாக்கும் இவ்வட்டிவ

25 . . . . . . . . . . இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

---

[2] உத்தமாக்ரம்

[3] சிவயோகி சந்திராதித்தவற்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 234-A of 1911 |
| மொழி | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No: 131 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | | |

இடம் : நாகேஸ்வரசாமிகோயில் கருவறை வடக்குப்புறபட்டியில் உள்ளது.

குறிப்புரை : தஞ்சாவூர் கற்றளிப்பிராட்டியார் வேளத்துப் பெண்டாட்டி மாநெதநங்கண்டி 20 காசினை மூலபருடைப் பெருமக்களிடம் அளித்துள்ளாள். அதனைக் கொண்டு காவிரியிலிருந்து மூன்று போதும் இறைவன் நீராட்டுக்கு நீர் கொண்டு தருவான் ஒருவனுக்கு போகமாக நிலம் அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டில் பஞ்சாங்கக் குறிப்புக்கள் ஆண்டு, திங்கள், பக்கம், பொழுது, பருவம் என்ற முறையில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி பந்மக்கு யாண்டு [ரு] ஆவது இவ்வாண்டானித் திங்கள் மதிநாட் பக்கம் பஞ்சமி நாள் மூலங் கழல்லெம் வெள்ளி பெ[ா]ழுது முன் கோற்குறி இது வாண்டிது திங்களிது பக்கம் இது பொழுதிது பருவமாக வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவதாநந் திருக்குடமூக்கில் மூல பருடைப் பெருமக்களோங் கேட்ட நில விலையாவணந் தஞ்சாவூர் [கூ ற்றத்துத் தஞ்சாவூர்க் க-

2 ற்றளிப் பிராட்டியார் வேளத்துப் பெண்டாட்டி மாநெ[த]நங் கண்டித் திருக்கீழ்க்கோட்டத்துப் பரமஸ்வாமிக்கு வைத்த திருமஞ்சுணத்துக்கு இவளிடைக் கொண்ட காசு உ௰ இக்காசு இருபதுங்கொண்டு எம்பெருமானுக்குக் காவிரியினின்றும் பொது கலநீர் கொண்டு மூன்று ஸந்தியுந் திரும[ஞ்ச]ன நீராட்டுவானுக்கு ஷோமமாக ஆவணஞ்செய்து குடுத்த நில மாவது கழநியில் அரியலூரப்பதிற்று வே . . . .

3 . . . நான்மாக் கூறிட்டில் அளந்து காற்செய் விற்றதற்கெல்லை கீழ்பாற்கெல்லை [இவா]ஸ்வாமி நிலத்துக்கேய் சேக்குந் [வட பா]ற்கெல் . . . . வடக்கும் மேல்பார்க்கெல்லையும் பரஸ்வா . . . . ழகு . . . . . ல்லையும் பரஸ்வாமி . . . . . . மேற்கும் . . நந்தப் பெருநான்கெல்லையுள்ளக . . . . [அ]ளந்து வந்த படி காற்செய்யும் விற்றுவிலையாவண

4 ஞ் செய்து குடுத்து இக்காசிருபதுமாவணக்களத்தே செல்லப் பொருளறக்கொண்டு வஞ்ராஜித்தவல் திருமஞ்சனமுட்டாமே திரு. . இக்காசு இருபதும் எம்பெருமான் ஸ்ரீஹணார[1]த்தேய் வைத் . . . . . காற . . . . பொன்த ஸ்வாமி . . . ஹோமம் மத்திருஜேந[2] நீரட்டுவானுக்குக் கப்படத்துக்குங் கெ . . . . . க்குமாக இந்நிலங்காலும் ஆவணஞ் செய்து விற்று

5 க்குடுத்தோம் மெற் சொல்லப்பட்ட கற்றளிப்பிராட்டியார் வேளத் துப் . . . . மூலபரடை[ப்] பெருமக்களோம் . . கேக் . . . . . ளானைக் கிழவன் மூலபருடைப் பெருமக்கள் பணியால் இந்நிலவிலையாவணமெழுதினேன் இவ்வூர் ஊர்க்கணக்குச் செய்கிந்ற[3]

---

1 ஸ்ரீபண்டாரம்

2 திருமஞ்சன

3 இத்துடன் கல்வெட்டு நின்றுவிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4[6]-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் (சுந்தரசோழன்) | | |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : பெருங்குடிக் கிழான் பாலாசிரியன் நக்கன் அமராபிதன் என்பான் திருக்கீழ்க் கோட்டத்துப் பெருமானடிகளுக்கு நந்தா விளக்கொன்றுக்கு தொண்ணூறு ஆடுகள் கொடுத்ததையும், அதனைப் பெற்றுக் கொண்ட மன்றாடி சோமனுகன் என்பான் விளக்கெரிப்பதோடு, தினமும் காவிரியிலிருந்து நீர் கொணர்ந்து திரு மஞ்சனத்திற்கு அளிக்கவேண்டுமெனவும் ஏற்பாடு செய்யப்பட்டதை இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ [மதுரையு ஈழமு]
2 ங் கொண்ட கோப்பர கேசரி ப
3 ன்மற்க்கி யாண்டு ௪௰[௬ வ]
4 திவ்வாண்டு வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவ
5 தானந் திருக்குட மூக்கில் தி
6 ருக்கீழ்க் கோட்டத்துப் [பெ]
7 ருமானடிகளுக்குப் பெரு[ங்]
8 குடி கிழான் பாலாசிரியன்
9 நக்கன் அமராஙிதன்
10 நொந்தா விளக்குக்கு வை
11 த்தவாடு ௬௰ தொண்ணூ

12 றும் சாவா மூவாப்பேராடாக
13 கொண்டு நெய்யட்டக் கட
14 வான் மன்றாடி சோமனுகன் இ[வ]
15 னே இப்பெருமாளுக்கு ஆற்றுத்தி
16 ரு மஞ்சன நீர் நிசதியும் நீர் காவிரி
17 யில் நின்று அட்டக்[கடவ]னுக பாரதாய
18 ன் மிதுன சூற் . . சம் சந்தி
19 ராதித்த . . . வனுக குடுத்
20 த நில . . இன்னம்பர் நாட்டு ஸ்ரீ*

* கல்வெட்டு இத்துடன் நின்றுவிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 236 of 1911 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIII No. 108 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 25 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | | |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளர் என்பார், தான் எழுந்தருளச் செய்த இறைவனுடைய ஸ்ரீபலிக்காக 70 ஈழக்காசுகளை அளித்து, அதில் வரும் வட்டியின் மூலமாக, ஆண்டுக்கு 60 கல நெல்லினை அளிக்க வகை செய்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டுள், பாண்டியன் தலைக்கொண்ட கோப்பரகேஸரி வர்மனின் மூன்றும் ஆட்சியாண்டும் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜ
2 கேஸரி பன்மக்கி யா
3 ண்டு ரு ஆவது இவ்வ
4 ாண்டு வடகரை பாம்பூர் நாட்டு
5 தேவதாந [திருக்குடமூக்கு] தி
6 ருக்கீழ்கோட்டத்து பரமஸ்வாமிக்
7 கு கோயிலில் உடையார் வீரசோழத் தெரிஞ்ச
8 கைக்கோள[ர்] மாதேவற்குப் பெலி எழுன்தருளத் தான் எழு
9 ன்தருளுவிச்ச வெள்ளித்திருமேனி[க்கு திரு]வமுதுக்காக ஸ்ரீபாண்டிய
10 [ன் றலைக் கொ]ண்ட கோப்பரகேசரி பன்மக்கி யாண்டு ந ஆவது தேவர் பண்டாரமா

11 . . . . . . . மாந ஈழக்காசு எழுபதுக்கும் பொலியூ

12 ட்டாக . . . தவன் . . . . மநக்கு போது இருநாழி போநகப் பழவரிசியு

13 நிசதம் மூன்று ஸ்ரீபோனக பழவரிசி அறுநாழியில் அஞ்சி ரண்டு வ

14 ண்ணத்தால் நி[சத]ம் சென்னநெல்லு குறுணி எழுநாழியு

15 ம் கறியமுதுக்கு நிச்சம் நெல்லு நாழியும் ஆக நிச்ச நெல்

16 லு பதக்காகத் திங்கள் நெல்லு ஆறு கலமாக ஓராட்டைக்கு வன்

17 த செ(ன்)னல் அறுபதின் கலமும் இக்காசுக்குப் பொலியூட்டாக் கி . . .

18 . . . . . . படி நெல்லு தேவ பண்டாரத்தே அவ்வவ் ஆண்

19 டு ஸ்ரீகாயூஷயஞ் செய்ய . . . வந்திராதித்தவல் அளக்க கடவ ராகவு

20 . . . [சந்]திராதித்தவல் பன்மாஹேஷ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 26 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குப்புறம் உள்ளது.

குறிப்புரை : பெருங்குடிக் கிழான் பாலாசிரியன் அமராசிதன் மதுராந்தகன் என்பவன், நொந்தா விளக்கிட தொண்ணூற்றுறு ஆடுகளை அளித்ததைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி[ஸ்ரீ கோவி]
2 ராசகேசரி பன்
3 கு யா . . .
4 . . ஆ . . து
5 . . ன்ப . . .
6 பூர் நாட்[டுத் தே]
7 வதானம் திருக்கு
8 ட மூக்கில் திருக்கீழ் கோட்டத்
9 தில் பரஃஸ்வாமி[1]க்கு பெருங்குடி
10 கிழான் பாலாசிரியர் அமராசித
11 ன் மதுராந்தகன் வசிச* நொந்
12 தா விளக்கு ஒன்றினு . . . ந்த ஆடு ௬௰

* 'வச்ச' எனப்படிக்க

[1] பரமஸ்வாமி

13 சூ தொண்ணூற்றுறும் மன்றுடி
14 சா[ம]ன் [அ]க்கன்கடவ நெய் . .
15 ன்றுடி மாதேவ . . எச்சில் கட
16 . . . ஸவர மன்றுடி மாதேவ
17 . . . . . ன் கடவ நேய் ஙூ . . . . . .
18 விளக்கு ஒன்றும் சந்திரா
19 தித்தவல் கடவர் இது பந்மாயே
20 ஸ்வரரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம் :** | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 7-ஆவது |
| **வட்டம் :** | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| **ஊர் :** | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 237 of 1911 |
| **மொழி :** | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No. 184 |
| **எழுத்து :** | தமிழ் | | |
| **அரசு :** | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 27 |
| **மன்னன் :** | பரகேசரிவர்மன் | | |

**இடம் :** நாகேஸ்வரசாமிகோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

**குறிப்புரை :** கல்வெட்டு மிகவும் சிதைந்துவிட்டது. அமுது செய்ய அளித்த கொடையாகத் தோன்றுகிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்

2 பரகேசரிபன்ம(ற்)கு

3 யாண்டு [எ]ஆவது

4 . . . . வடக

5 ரைப் [பாம்]பூர் நாட்

6 டுத் தே[வதாந] திரு

7 க்குடமூக்கி[ல்] திருக்கீழ்க்கோட்டத்

8 து பரம[ஸ்வா]மி[1]க்கு ஸ்ரீகார்யஞ்

9 திருத்துகிற பெருமக்களோ . . .

10 . . . . . ரஸ்ஸூ

11 செட்டி உச்ச[ம்போது] அமுது செ

12 யும் . . ண்கலம் உத்தமா . . . த்ரமுண்

---

[1] பரமஸ்வாமி

13 . . இவன் தந்த பொன் அய .

14 . . ப்பொன் . . . ஞ்சினலும் . .

15 [இ]ரண்டு கலத் . . அரிசி நானா

16 [ழி]யுமா . . காய்கறியொ

17 ன்றும் புளிங்கறியொன்

18 றும் பொ . . . . . ழாக்கும் தயிர் ந

19 ாழியும் . . . . வெற்றிலையோரடுக்கும் ஆ

20 க இப்படி . . . . கார்யூஞ் செயு

21 பெருமக்க . . . பண்டு . . குறைவறுத்

22 துக் குடுப்ப . . ாத்தில் பழய

23 வெள்ளி . . . ளி . . ஊட்டுவதாகவு

24 . . வி . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 6-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 240 of 1911 |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. III No: 137 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 28 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : உத்தமசோழர் நம்பிராட்டியார், இளமூக்கரையர் மகளார் வீரநாராயணியார் திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமானடிகளுக்குத் திருப்பள்ளித் தாமத்திற்காகத் திருநந்தவனம் செய்ய நிலம் விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இவரே இம்மன்னனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறார். இக்கல்வெட்டிலும் [ஊர் க. எண். 23ஐப் போல] பஞ்சாங்கக் குறிப்புக்களுள்ளன.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகே
2 சரி பந்மக்கி யாண்டு சா ஆ
3 வது இவ்வாண்டான்நி தி
4 ங்கள் மதிஞள்ப் பக்கம் ப[ஞ்ச
5 மி]ஞள் மூல்லம் வெள்ளிக
6 து இவ்வாண்டு இது திங்கள்
7 யிது பொழுதிது பருவமாக . . . .
8 [பா]ம்பூர் நாட்டுத் தேவதான . . . . . .
9 கீழென் கோற்குறி . . . ன் பாலாவணத்து . . . . .
10 இவ்வூ[ர்]* மூலப[ரு]டைப் பெருமக்களோம் சீ[உத்]தமசோழ
11 ர் நம்பிராட்டியார் இளமூக்கரையர் மகளார் வீர நாராய

12 ணியார் திரு[கீ]ழ்க் கோட்டத்துப் பெருமா[ளுக்]குத் திருப்ப

13 ள்ளித் தாம[த்]து . . . க . . . . நந்தவான[ப் புற]மாக விற்று

14 விலையாவணஞ் செய்து குடுத்த நிலமாவது மூல பரு

15 டைப் பெருமக்களோ(ம்) உடைய பொது நிலம் பணா

16 க்கையின் [கி]ழக்கினுலெங்கள் நிலம் [ஊ] . . . கூற்றுபடி . .

17 ணியால் உமிசு . ரைக்க . . . நிலமரைக்காலு விற்றுவிலையாவ

18 ணஞ் செய்து குடுப்பதற்கெல்லை கீழ்பாற்கெல்லை . . . நிலன் எநி

19 லத்துக்கும் . . . ம்பி நிலத்துக்கு வடக்கும் தென்பாற்கெல்லை போகிலய

20 ன் புறம்பியன் . . . வன் தோட்டத்துக்கேய் புக்க உள்ளெழு கடைக்கு வடக்கும்

21 மேல்பாற்கெல்லை பேரொழுக்கைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கவிசிகன்

22 பட்டன் பற்பனு[ப]ன் கோவிந்தன் ஸ்ரீதன நிலத்துக்கும் கவி ஷிகன் . . தசெயன்ன

23 கேசுவனும் த[ம்]பியும் நிலத்துக்கும்மாகத் தெற்கு இவ்விசைத்த பெருநான்கெ

24 ல்லையுள்(ள)பட்ட நிலம் . கூற்றுபடி . . . வது நிலத்து அரைக்காலு மிகு

25 திக் குறைமை[யுள்]ளடங்க உண்ணிலமொழிவின் . . . விற்று விலை

26 யாவணஞ் செய்துகொண்ட விலை பொருளீழக்காசு ய௨ பன்னி

27 ரண்டு இகாசு பன்னிரண்டு மாவணக்களியே காட்டேற்றி கைச் செல்ல . . . . . . .

28 பெருதோமாகவும் இபரிசு உரிய பழியிருந்து . . . .

---

1. இக்கல்வெட்டில் வரும் இளமுக்கரையர் மகள் என்ற குறிப்பு வேறெங்கும் காணப்பட வில்லை. இது முத்தரையர் மரபினைக் குறிக்கிறதா என்பது ஆய்வுக்குரியது. இதேபோல இவ்வூர்க்கல்வெட்டு எண். 20 இலும் குறிப்புள்ளது.

2. இக்கல்வெட்டில் மன்னனின் ஆட்சியாண்டு பதிமூன்று என்று இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை குறிப்பிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 2-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 242 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No. 7 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 29 |

இடம் : நாகேஸ்வரசாமிகோயில் கருவறையின் மேற்குச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : படைவீரனை ராஜாதித்தன் என்பான் விளக்கெரிக்க தொண்ணூற்று ஆறு ஆடு அளித்ததைக் குறிக்கிறது. தான தொங்கத்தெரிஞ்ச கைகோளர் என்று வருவதால் படைவீரன் என்பது பெறப்படுகிறது. அதனை இரு மன்றுடிகள் பெற்றுக்கொண்டு, மாதத்திற்கு ஏழு நாழுரி நெய் அளிக்க ஒப்புக்கொள்கின்றனர்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ கோப்பரகேசரிவஂற்கு யாண்
2 டு ௨ ஆவது வடகரைப் பாம்பூர் நாட்டு தேவ
3 தானம் திருக்குடமூக்கில் திருக்கீழ் கோட்ட[த்]*து
4 பரஂஸ்வாமி[க்]*கு திருநொந்தா விளக்கு வைத்த உடை
5 [யார் தாந]தொங்கத்தெரிஞ்ச கைக்கோளரில்
6 [தே]வந் ராஜாதித்தன் வைத்த விளக்கு ஒந்று இதிநால
7 ாடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறிலும்
8 இவ்வூர் மன்றுடி தேவடி திருவியலூரும் கூற்றன் திருவநு
9 ம் இவ்விருவோம் பாதிபாதி நெய் திங்கள் ஒரோ
10 முன்ஞழி முழாக்காக இருவோமாய்
11 திங்கள் எழுஞடுரிநெயட்டுவதானேம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 243 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No:132 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 30 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : ஆறு மன்றாடிகள் மூலம் மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றிரண்டு ஆடுகள் கொடுத்து விளக்கெரிக்க வகை செய்ததைக் குறிக்கிறது. யார் யாரிடம் எத்தனை ஆடுகள் கொடுக்கப்பட்டது என்று விரிவாக எழுதப்பட்டுள்ளது. மிகவும் சிதைந்து இருப்பதால் தெளிவாக அறிய இயலவில்லை. கல்வெட்டு முற்றுப் பெற வில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி
2 பந்மற்கு யாண்டு ரு ஆவது வட
3 கரைப்பாம்பூர் நாட்டுத் தேவ
4 தானந் திருக்குடமூக்கில் தி[ரு]
5 கீழ்க் கோட்டத்துப் பரம
6 ஸ்வாமிக்குத் திருநொந்தா வி
7 ளக்கு[க்]*கு மன்றாடிய் சாத்த
8 ன் மாதேவன் கடவவிளக்கு மு . .
9 ன் . . . . . . . .
10 . . . . . . . . . .
11 . . . . . யா . . . .
12 வத . . . . ஆக . . . . .

13 விளக்கு . வையி
14 தில இவன் . . ல் நின் . .
15 வாங்கி அடு . . . மன்
16 ருடி காரி . . . . . . . . த்த
17 ஆடு ௩௰௨ மன்ருடி சிங்க
18 ன் மேல் அடுத்த இவ . . . .
19 ஆடு ௩௰௨ மன்ருடி சாத்தன் [அ]
20 சலஞ்சி மேலடுத்த ஆடு ௩௰௨ ம
21 ன்ருடி அசலஞ்சி புத்தன் மேல
22 டுத்த ஆடு ௩௰௨ மன்ருடி புகழு
23 ச்சியேம் . . ம்பிமாரல்லம்
24 . . டு . . ன்ருடி சலவன் தே
25 வன் மேல் அடுத்த ஆடு ௰௬
26 மன்ருடிய் பாலே நாராயணன்
27 மேலடுத்த ஆடு அ மன்ருடி
28 நல்லூர்ரே நாராயணன் மே
29 லடுத்த ஆடு அ ஆக ஆ
30 டு ாகூ௰௨ நூற்றுத்தொ
31 ண்ணூற்றி[ரண்டு] மன்ருடி வடுக . .
32 சிவாடியுந் தம்பிமாருக்கும் அடுத்த
33 ஆடு . . ௰அ . . . . நீக்கி மன்ருடிய்
34 சாத்தன் மாதேவன் எரிக்கக் கடவ .
35 . . . கூ௰௬ ஞல் அட்டக் . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 31 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துவிட்டது. விளக்கெரிக்க ஆடு கொடுத்ததைக் குறிப்பதாகவே உள்ளது.

## கல்வெட்டு

1 . . . . . . . . . . ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்
2 . . . . . . . . . . கோட்டத்து பர௨[ஷூ]மிக்கு முன் திரு
3 . . . . ார் செ . . கம . . . . ளம் . . பெ . .
4 க்கள்பால் . . . . ட்டா . . பாகஇவ்
5 ரூ அரை விளக் . . ஆடு ௲ம . . மன்றாடி . . . காஞ்சன
6 . . . இவ்வா . . க்கா , நிசதம் . . களமுன் ந
7 ஆட்டுவாநாக ஆடு ச . . .
8 . . . சன்திராதிதவல் அட்டக்கடவன் பன்மாயேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 245 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No: 95 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 32 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : சித்திரைமாதம், வியாழக்கிழமை, நவமிநாள், மகநக்ஷத்திரத்தின் அன்று மூல பருடைப் பெருமக்கள் எழுதிக்கொண்ட ஆவணம் இது. கற்றளிப் பிரா . . . . அறிவரன் அமித்ரவல்லி தனிகன் கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில், காரி கோளம்பன் என்பான் பெயரில் திருநொந்தா விளக்கிட நிலம் விற்றுக்கொடுத்துள்ளான். நிலத்தின் எல்லைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டு :

1 கோப்பரகேஸரி பந்மற்கு யாண்டு ௪ ஆவது வடகரைப் பாம்பூர் நாட்டு தேவதான திருக்குடமூக்கில் மூலபருடைப் பெருமக்களோம் இய்யாட்டை ஷேஷநாயற்று வியாழக் கிழமையும் நவமியும் பெற்ற மகத்தினன்று திருக்குடமூக்கில் மூலபரடைப் பெருமக்களோம் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்க் கற்றளிப் பிரா . . .

2 அறிவரன் னமித்திரவல்லி தனிகன் கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் காரி கோளம்பனேச் சாத்தித் திருக்கீழ்க் கோட்டத்துப் பரமஸ்வாமிக்கு வைத்த திருநொந்தா விளக்கு ஒன்றினுக்கு இவ[நே] விற்றுக்குடுத்த நிலமாவது . . . . .

3 . . . உக்ஷிணை பெற்ற . . . . மேற் கவி[சியன்] . . . . திருக் கீழ்கோட்டத்து பரமஸ்வாமிக்கு விற்றுக் குடுத்த நிலத்தின் அள[ந்]து ப காற்செய் விற்றுக்குடுத்ததற்கெல்லை இஷடேவர் நிலத்துக்கேய் மேற்குந் தெந்பாற்கெல்லை பள்ளி கொண் டருளுகின்ற பரமஸ்வாமி நிலத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்லை

இந்நிலத்துக்குப் பாயும் வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற்
கெல்லை இப்பெருமாள் நிலத்துக்கேய் தெற்குமாக இவ்வி
. . . .
4 ட்ட நிலம் அளந்து வ காற்செய் . . . . த்து இக்காற் செய்
யின் ஹோமமேய் கொண்டு சந்த்ராதித்தவல் [இரு]நொன்தா
விளக்கு எரிப்பதா . . . . . . . . . . . . இருபத்தைய்ங்
கழைஞ்சு ஆவணக்களத்தே கைச்செலவறக் கொண்டு
இப்பொன் இருபத்தைய்ங் கழஞ்சும் எம்பெருமான் ஸ்ரீ
பண்டாரத்தேய் . . ய்ப்பித்து இத்திருநொந்தா விளக்கு
ஒன்றும் [அ]வ்வவ் ஆண்டு ஸ்ரீகாயஞ் செய் . . .
5 . . . . ய்ப்பிக்கக் கடவாராகவும் இப்பரிசு பணித்தோ(ம்) மூல
பருடைப் பெருமக்களோம் . . . பெருமக்களும் வாயால் . .
. . . ன் இவ்வூர்த் தச்சன் பிராந்தகன் அரிய[முத்தா]
னேன் இவை எழுத்து :–

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 33 / 1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 28-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 246 of 1911 |
| மொழி : | சமஸ்கிருதமும், தமிழும் | | |
| எழுத்து : | கிரந்தமும், தமிழும் | முன் பதிப்பு | S.I.I. Vol. XIX No. 431 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 33 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மிழலைக்கூற்றத்துக் கருவூர் கிழான் காச்சுவன் தன்வலி அரங்கனாகிய பஞ்சவன் கொடை அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. இறுதிப்பகுதி மிகவும் சிதைந்து விட்டது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ஜாஹ்நவகு . . . நுவஹநத வஷேழஷ . . .

2 வஹூநுஹய ஷி . . யது . . . கொடீநூகூ ஹசெதெ நிஷூ[ணா] . . . . வ[ஐ] . . .

3 விஶுவதிஉெதூாணாநூஞூ உெஞூழ ஷிநூ ஹாஷாஷநுக ஶநுவெ ஷுிஹஉதஃ ஸ்ரீஹஂமகா[யா]

4 ஹயஃ கோவுஹகேசரி பன்மற்கு யாண்டு உ௰அ வது இவ்வாண்டை கார்த்திகைத்

5 திங்கள் திருக்கீழ்க் கோட்டத்து ஹட்டாரகற்கு மிழிலைக் [கூற்றத்து]

6 கருவூர் கிழா[ன்]* காச்சுவன் தன்வலி அரங்கனாகிய பஞ்சவன் . . . . . .

---

இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கையின் மூலம், விளக்கெரிக்க பணம் கொடுத்தான் என்ற தெளிவு கிடைக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 244 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No. 133 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 34 |

இடம் : நாகேஸ்வரசாமிகோயில் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருக்கீழ்க் கோட்டத்துப் பரமசுவாமிக்கு மன்றுடிதேவன் நக்கன் என்பான் 97 ஆடுகளை ஒரு நந்தா விளக்கெரிக்க அளித்ததை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு —* ஆவது
2 திருக்கீழ் கோட்டத்து ஶ்ரம(ா)ஸ்வர்க்கு மன்றுடி
3 தேவன் நக்கன் வைத்த திருநொந்தா விளக்கு
4 ஒன்றெரிக்க குடுத்த ஆடு கூயிஎ தொண்ணூ
5 ற்றேழு இது சந்திராதித்தவற் வநூரஷேஶ்வர
6 ரக்ஷை

* ஆட்சியாண்டு பொறிக்கப்படவில்லை. தேவையான அளவு இடம் விடப்பட்டுள்ளது. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் ஆட்சி ஆண்டு ஐந்து என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 40-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 947 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 235 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற்பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 35 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மாடிலன் பட்டன் மகாதேவன் நாராயணன் என்பான் திருக்கீழ்க் கோட்டத்து இறைவனுக்கு நொந்தா விளக்குக்கும், சூரிய தேவற்கு, சிதாரிக்கும், கற்பூர விளக்குக்கும் வகை செய்ததைக் குறிக்கிறது. அதற்காக 30 மஞ்சாடிப் பொன் கொடுத்து அதன் மூலம் நிலம் வாங்கித் தந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ ம[திரை கொ]
2 ண்ட கோப்பரகேசரி [பன்]மற்கு யாண்
3 டு ௩௰ நாற்பதாவது இ . . . வடகரைப்பா
4 ம்பூர் நாட்டுத் தேவதானந் திருக்குடமூக்கில்
5 திருக்கீழ் கோட்டத்துப் பெருமானடிகளு
6 க்கு வெள்ளி மக . . . . . .
7 திருநொந்தா விளக்கு
8 ம் ஸூர்யதேவர்க்கு . . . . . . . . .
9 மாடிலன்பட்டன் மஹாதேவன் நாராயணன்
10 னேந் வைத்தபடி . . . . . . .
11 நின்ற குடும்பு காட்டுக்காற்க்குடும்பி . . காட்டு
12 க்கா[ற்]தலை நெற்றிக்காலும் கண்ணி விளாகத்து இ
13 ரு மாவும் ஆக நிலம் (பெ)பதிநெருமாவும் இந்நில

14 த்துக்கு மூலபரடைப் பெருமக்களுக்கு நான்
15 இறைகாவல் குடுத்துடைய பொன்னில் இந்நி
16 லத்தாலுடைய ஒபாதியும் நான் தலைக்கல
17 த்தா(ல்)லுடைய பொன்னில் நிலவோபாதியால்
18 வந்த பொன்னும் ஆக பொன் ஈம மஞ்சா[டி]* பொ
19 ன்னூலு வந்த நிலம் பதினொருமாவும் கொண்
20 டு சந்திராதித்தவல் சிதாரிக்கும் கற்பூர விளக்கு
21 க்கும் ஆக குடுத்தேன் மாடிலன்ஊட்ட ஊஹாதே
22 வ ஞாராயணனேன்—

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1015 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 256 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் ராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 36 |

இடம்: நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கமுதவன் கொற்றன் தாமோதரனின் மனைவி, வாசுதேவன் மகாதேவி என்பாள், திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயிலுக்கு நிலம், நெல், காசு, மனை ஆகியன அளித்ததையும், அதிலிருந்து திருக்கீழ்க்கோட்டமுடையாருக்குப், பொன்னூலானச் செங்கழுநீர் மாலையும், ஸ்ரீவிமானத்தில் எழுந்தருளியுள்ள செல்லப்பிரான் தேவருக்கு உச்சியம்போது சந்தியில் அமுதும் அளிக்க வேண்டுமென ஏற்பாடு செய்ததையும் குறிக்கிறது. இக்கல்வெட்டில் குடமூக்கு முதன்முதலாக உய்யக் கொண்டார் வளநாட்டைச் சார்ந்ததாகக் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி வன்மரான ஸ்ரீராஜேந்த்ரசோழ தேவற்க்

2 கு யாண்டு ௩ ஆவது உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்கு

3 டமூக்கில் மூலபருடையோம் இவ்வூர்த் திருக்கீழ்க்கோட்ட முடையா

4 ர் ஸ்ரீ விமானத்தி(ல்)லே எழுந்தருளியிருந்த செல்லப்பிரான் தே

5 வற்கு நிமந்தஞ் செய்த பரிசாவது இவ்வூர்க்கமுதவன் கொற

6 றன் தாமோதிரன் ப்ராஹ்மணி வாஸுதேவன் மஹாதேவி இத் தேவற்குக் குடு

7 த்த நிலம் இவ்வூர் தென்கழல் ஆனைப்பள்ளிச் சுற்றுக் காமக் காணி மஹாதேவ

8 ர் நிலத்துக்கு மேற்கு கவிணியன் ஞாராயணன் ஸ்ராஹ்மணி
ஆட்சி உடைய நிலத்துக்கு வட

9 க்கு உள்வாய்க்காலுக்குக் கிழக்கு உள்வாய்க்காலுக்கே தெற்கு
நடுவிட்ட நில . . . . . யும் இ

10 . . . . க்குடுத்த நிலமனை கமுதவன் . . . . நாகன் மனைக்கு
மேற்க்கு கமுதவன் தாமோதிரன் செங்க

11 மைக்கு வடக்கு இவன் மனைக்கே கிழக்கு கவிணியன் தாழை
நாராயணன் மனைக்குத் தெற்குமாக நடுவுபட்ட மனைக் கு

12 ழி ஒன்பதே காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரையால்
வந்த மனையும் இவளே குடுத்த காசு முப்பத்தொ

13 ந்றும் நிலம் நெல்லெண்பத்து நாற்கலமும் ஆக இந்நிலமும்
இம்மனையும் இ[க்கா]சும் இந்நெல்லும் இத்தனையுந் தி

14 ருக்கீழ்க் கோட்டமுடையா(ர்)ரே கொண்டு இவற்றில் . .

15 . . . காசுங் கொண்டு பொன்மாறிச் செங்

16 கழுநீர்த் திருப்பள்ளித் தாமமாகப் பொன்னாலே

17 செய்தமையில் இத்திருக்கீழ்க்கோட்டமுடைய [பர]

18 ஃஹ்வாமி ஸ்ரீஃபண்டாரத்தே இச்செல்லப்பிரான் ஷேவ

19 ற்கு உச்சியம்போதை ஸந்திக்குத் திருவமுது செய்யக்

20 குத்தல் அரிசி முன்னாழிக்கு நெல்லெழு நாழி உரியு

21 ம் பருப்பமுது நாழிக்கு நெல்லு நானாழியும் நெய்

22 . . . . . . . . . . நெல்லிரு நாழியும்

23 பருப்பமுதுக்கு நெல்லே முழக்கும் அடைக்காய் மூ

24 ந்றுக்கும் இலையமுதுக்குமாக நெல்லு முழாக்கும்

25 ஆக நித்த னிவந்தம் நெல்லுக்குறுணி எழுந

26 ாழியாக ஒரா[ட்]டைக்கு நெல்லு ௲ம் முப்பத்திரு

27 கலனே முக்குறுணி நெல்லும் திருத்தி . .

28 . . . . . .

29 ழ்க் கோட்ட

30 முடைய பர

31 ஃஹ்வாமி ஸ்ரீ

32 பண்டாரத்தே

33 கொண்டு அ

34 வ்வவ் ஆண்

35 டு ஸ்ரீ காயஞ்

36 செய்வாரே

37 இந் நிவந்தம்

| | | | |
|---|---|---|---|
| *38* | முட்டாமற் சந் | *39* | திராதித்தவற் செய் |
| *40* | ய்விக்கக் கட | *41* | வாராக நிவந்த |
| *42* | ஞ் செய்வித் | *43* | துக் குடுத்தோ |
| *44* | ம் மூல பருடை | *45* | யோம் இம |
| *46* | ஊக்கு பண் | *47* | டுடைய பரி |
| *48* | சே வழி | | |
| *49* | மை பெறுவதாக இவை வஹாஸ்வர ரக்ஷை|| | | |

---

* **இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் ஆட்சி ஆண்டு ஆறு என்று குறிக்கப்பட்டுள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 37 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குப்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருக்கீழ்க் கோட்டமுடையாருக்கு, நொந்தா விளக்கிட ஆடு கொடுத்ததைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. கல்வெட்டு மிகவும் சிதைந்துவிட்டது. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

கல்வெட்டு :

1 . . ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி ப
2 . . யாண் . . .
3 . . பாம்பூர் நாட்டு தேவ . . .
4 . . ட மூக்கில் திருக்கீ
5 . . டத்து பெருமா[ள்ளுக்]கு இவ
6 . . டிலன் பட்டன் ஶ்ரா
7 மணன் உஹாதேவன்
8 ஶ்ராஹ்மணி ஏறன் பொன் உ
9 த்தி வைத்த நொந்தா விள
10 க்கு க ஒன்றுக்கு வைத்த ஆ . .

| | |
|---|---|
| மாவட்டம் : | தஞ்சை |
| வட்டம் : | குடந்தை |
| ஊர் : | குடந்தை |
| மொழி : | தமிழ் |
| எழுத்து : | தமிழ் |
| அரசு : | சோழர் |
| மன்னன் : | பரகேசரிவர்மன் |

| | |
|---|---|
| ஆட்சி ஆண்டு : | 2-ஆவது |
| வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 251 of 1911 |
| முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No:8 |
| ஊர்க் கல்வெட்டு எண் | 38 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குப்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : உடையார் வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் கடிகாவன் கள்ளான் என்பவன் தொண்ணூற்றுறு ஆடுகளை விளக்கெரிக்க வைத்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இதனை மன்றுடி கண்ணன், மன்றுடி சங்கந் மாதேவன் ஆகிய இருவரும் பெற்றுக்கொண்டு மாதத்திற்கு ஏழு நாடுரி நெய் அளத்தல் வேண்டுமெனக் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி வர்மற்கு யாண்டு ௨ ஆ
2 வது வடகரைப் பாம்பூர் நாட்டு தேவதானம்
3 திருக்குடமூக்கில் திருக்கீழ் கோட்டத்து பரமஸ்வாமி
4 க்கு திருநொந்தா விளக்கு வைத்த உடையார்
5 வீர சோழத்தெரிஞ்ச கைக்கோளரில் கடிகாவந்
6 கள்ளான் அநந்தாதித்யவற்கு வைத்த நொந்தா
7 விளக்கு(க்கு) வைத்தவாடு தொண்ணூறு இத்தொ
8 தாண்ணூறும் இவ்வூர் மந்றுடி கண்ணன் மந்ற
9 னும் சங்கந் மாதேவனும் வைத்த வா
10 டு தொண்ணூறு [இக்கோயிலினுல்] நிசதமாழாக்கா
11 க ஒரொத்தரமு இருவருமாய் திங்க
12 ள் எழுநாடுரி நெய் . . . . . . இப்பரிசு
13 அநந்தாதித்யவற்கு வைத்தேன் கடிகா[வ]ந் க
14 ள்ளானேன் இது பந்மாஹேஸ்வர ர
15 க்ஷை||

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 38-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 945 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 250 of 1911 |
| மொழி | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் | முதற்பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 39 |

இடம்: நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபம் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருநறையூர் நாட்டு ஐயாற்றைச் சேர்ந்த, மைஞ்சன் கவையன் என்பவன் நொந்தா விளக்கு ஒன்று எரிக்கத் தொண்ணூற்றாறு ஆடு கொடுத்ததை இக்கல் வெட்டுச் சுட்டுகிறது. அதனை இரு மன்றாடிகள், ஆளுக்கு அரை விளக்காக எரிக்கப் பொறுப்பேற்றனர்.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி மதிரை கொண்ட
2 கோப்பரகேஸரி பன்மற்க்கி யாண்டு
3 ௩௰அடாவது வடகரைப் பாம்பூர் நாட்டுத் தே
4 வதாநம் திருக்குடமூக்கில் திருக்கீழ்க் கோட்ட
5 த்து ஊஹாதேவர்க்கு திருநறையூர் நாட்டு
6 ஐய்யாருடையான் மைஞ்சன் கவைய[ந்]
7 வைத்த திரு நொன்தா விளக்கு ஒன்றுக்கும் வை
8 த்த ஆடு தொண்ணுற்றாறும் சாவாமூவாபேரா
9 டு ஆடு கைய் கொண்டு எங்[க]ள் மக்கள் எரிப்
10 போமாநோம் மன்ருடி நாகன் படுகன் அரை
11 விளக்கும் மன்ருடி சாத்தன் நூங்கம . . .
12 சந்திராதித்தவல் எரிக்க ஸ்ரீஊஷே
13 வ கணப்பெரும(க்)க(ள்)ர(ை)க்ஷ:—

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 248 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 40 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மலைநாட்டு நெடும்புறையூர் நாட்டைச் சேர்ந்த, பூவங்கண்ணன் என்பான் திருக்கீழ்க்கோட்டத்து இறைவனுக்கு ஒரு நந்தா விளக்கெரிக்க 25 பொன் அளிக்கக் கருதி, அதற்குப்பதிலாக நிலமாகக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர
2 கேசரி ப[ந்]ற்கு யாண்டு
3 ௩-ஆவது வடகரைப் பா
4 ம்பூர் நாட்டுத் தேவதான
5 ந் திருக்குட மூக்கில் திருக்
6 கீழ் கோட்டத்து பரமஸ
7 ஸ்வாமிக்கு மலைநாட்டு
8 நெடும்புறையூர்ப் பூவங்
9 கண்ணன் வைத்த நொ
10 ந்தா விளக்கு ஒன்றுக்கு
11 [கு]*டுத்த பொன் உம[ரு] இ
12 ப் பொன்னுக்கு த
13 லை மாறாக எழுதிக்

14 குடுத்த நிலம் கழனி
15 கல்மசக்கற் சுற்றில்
16 . . ற்றேயுங் கொண்டு இ
17 விளக்கு வஞ்ஜாதித
18 எரிப்போமானோம்
19 . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 247 of 1911 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No: 96* |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 41 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : தேவன் பாண்டனிடமும், அவன் தம்பியரிடமும், நந்திபுரத்தைச் சேர்ந்த வியாபாரி மூவன் தேவன் என்பான் விலைகொடுத்து நிலம் வாங்கி, அதனைக் கொண்டு ஒரு பிராமணனைச் சந்திராதித்தவரை ஊட்டுவிக்க ஏற்பாடு செய்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுடன் இணைந்து மற்றொரு பகுதியும் (II) உள்ளது. தொடர்பு அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

I

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர
2 கேசரி பன்மக்கி யா[ண்]
3 டு [சு] ஆவது வடகரைப்
4 பாம்பூர் நாட்டுத் தேவ
5 தானந் திருக்குடமூக்கி
6 ல் திருக்கீழ்க்கோட்டத்து
7 ப்ராஹ்மணனுச்சம[ன்]
8 . . . . நஷி[புர]
9 த்து வ்யாபாரியே[ன்*] மூவ
10 ன் தேவனேன்
11 வைத்த நிலம் நான்
12 மாடலன் தேவ
13 ன் பாண்டனும் த
14 ம்பிமாருமிடை விலை
15 கொண்டு உடைய நி
16 லம் பாம்பூர் நாட்டு பு
17 ன்சை நான்மாவும்
18 கழனியில் கொ
19 ண்டு பு[ர்க்]குதல் அரி
20 சி இரு நாழியும் இரண்
21 டு கறியும் அரைப்பிடி
22 நெயுங் கொண்டு ஒரு ப்ரா

23 உணைச் சஙிராதித் | 24 தவல்லூரட்டுக பன்மா
25 ஹேசுா ரகைஷ |-

II

| | | | |
|---|---|---|---|
| 1 | ழைச் | 10 | ண்டுடை |
| 2 | செய்ச் | 11 | ய பரிசெ |
| 3 | சுற்றாத் | 12 | ய் இவ்(வை)வ |
| 4 | தெற்கிஞ | 13 | று மாவ . . |
| 5 | லரைக்க | 14 | ரைச் சென் |
| 6 | வ . . . | 15 | னும் வ |
| 7 | ன நமசு ம் | 16 | ந்த போ |
| 8 | பொ[ன்]*னுக்கு | 17 | கங் கொ . . |
| 9 | விலே கொ | | |

* மத்திய அரசுத் தொல்பொருளாய்வுத்துறையினர் வெளியிட்ட இக்கல்வெட்டில் இங்கு II-வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள பகுதியினை பகுதி I-ன் 19-ஆம் வரியிலிருந்து தொடர்ந்து பதிப்பித்துள்ளனர். பதிலாக இங்கு கொடுக்கப்பட்டுள்ள பகுதி I-ன் 19-ஆம் வரியிலிருந்து 25-ஆம் வரி வரையுள்ள பகுதி விடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 25-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 252 of 1911 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIII No. 255 |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 42 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கீழ்க்கோட்டமுடையாருக்குக் கலயன் மாணிக்கம் என்பான் நொந்தாவிளக்கு ஒன்றும், தாளகுடம் இரண்டும், கடாரம் ஒன்றும் அளித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரி ப
2 ன்மக்கு யாண்டு உ௰ரு ஆவது
3 திருக்குடமூக்கில் திருக்கீழ்க்கோட்ட
4 த்து பெருமானடிகளுக்கு கலய
5 ன் மாணிக்கம் [வை]*வத்த நொந்தாவி
6 ளக்கு ஒன்று உலகுந் சந்தி
7 ராதித்தருமுள்ள அளவும்
8 எரிக்கவு[ம்] தா[ள]குடமிரண்
9 டு கடாரமு ஒன்று

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 255 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 43 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறை, அர்த்தமண்டபத் தெற்குப்புறப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : திருக்கீழ்க்கோட்டத்து இறைவனுக்கு எழுதிக்கொடுத்த நிலவிலை ஆவணம் இது. கல்வெட்டு சிதைந்துவிட்டதால் முழுச் செய்தியும் அறிய இயலவில்லை. இதைவிட சிறிது விளக்கம் கிடைப்பதால், இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையும் இத்துடன் தரப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேஸரிவஂமக்கு யாண்டு ௩ ஆவது வடகரைப் பாம்பூர் நாட்டு தேவதானம் திருக்குடமூக்கில் மூல பருடைப் பெருமக்களோம் திருக்கீழ்க்[கோட்டத்து பரம]ஸ்வாமிக்கு விற்றுக்குடுத்த நிலம் ஆவது நாங்கள் அபிஷேம தக்ஷிணை பெற்றுடைய அரிசலூர் நிலத்தில் . . . பலிநால் . . .

2 மதிரை கொண்ட உடையார் மூவாயிரக்கழஞ்சு பொன் தண்டம் கொள்ள முப்பத்தெட்டாவது நாங்கள் பாண்டிபடையார்க்கு நாங்கள் இட . . . இப்பரமஸ்வாமி இடை . . . . துகொண்ட பொன் ஐந்நூற்று கழஞ்சுக்கும் இ . . . ஜலச்சயன . . . .

255 of 1911—Tamil. On the South Wall. A damaged record in the third year of the Chola King Rajakesarivarman (Gandaraditya). Records sale of Land in Arisalur by the Assembly of Thirukkudamukku to the temple of Thirukkilkottathu Paramaswami, for 500 kalanju of gold, in order to pay a part of 3,000 kalanju levied upon them as an impost (dandam) by

Madiraikonda Udaiyar, (i.e. Parantaka I) in his thirty-eighth year. Mentions the army of the Pandya and the temple of Jalasayana.

இராஜகேசரிவர்மனின் (கண்டராதித்தன்) மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. சிதைந்துவிட்டது. திருக்குடமூக்கு சபையினர், அரிசலூரிலுள்ள நிலத்தினை, திருக்கிழ்க் கோட்டத்துப் பரமசாமிக்கு 500 கழஞ்சுப் பொன்னுக்கு விற்றதைக் குறிக்கிறது. மதிரைகொண்ட உடையாரான முதற் பராந்தகனின் 38-ஆம் ஆட்சியாண்டில் விதிக்கப் பட்ட 3,000 கழஞ்சு பொன் தண்டத்தினைக் கொடுக்கும் பொருட்டு இந்நிலம் விற்கப் பட்டுள்ளது. பாண்டிப்படையும், ஜலசயனத்து பெருமாள் கோயிலும் குறிக்கப் படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | [8]-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1020 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 15 of 1908 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதல் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 44 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில்–சூரியன் சன்னதி கிழக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : முதலாம் இராஜேந்திரனின் 8-ஆம் ஆட்சியாண்டில், வேளான் மல்லியான் உண்ணு நங்கை திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயிலில் தாம் எடுப்பித்த சுந்திரசேகர தேவருக்கு அமுதுபடிக்கும், திருவிளக்குக்கும் ஏற்பாடு செய்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது. கல்வெட்டின் இறுதிப்பகுதி கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ திரும[ன்னிவளர யிருநில]
2 மடந்தை[யும் பொற் செயப் பாவையுஞ் சீர்]
3 த்தநிச் செல்[வியுந் தன் பெருந் தேவியராகி]
4 இன்புற நெடு[தியல் ஊழியுள்ளிடை துறை]
5 நாடுங் தொடர்வனவேலி படர் வானவாசி
6 யுஞ் சுள்ளிசூழ் மதிட்கொள்ளிப்பாக்கமு
7 ம் நண்ண[ற்]*கருமுரண்[மண்ணைக் கடக்கமும்]
8 [பொருக]டரீழத்தரைய[ர் தம் முடியும் ஆங்கவர் கே]
9 தவியர் ஓங்கெழில் முடியும் [முன்னவர் பக்கல்]
10 தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரு
11 மும் தென்றிசைஈழ மண்டல முழுவதும் எறி
12 படைக் கேரளன் முறைமையில் சூடும் குலதநமாகிய
13 பலர் புகழ்முடியும் செங்கதிர் மாலையும் சங்[க]

14 திர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழந் தீவும்

15 செருவிற் சினவில் இருபத்தொரு கால் அரைசு களை[கட்ட]

16 பரசுராமன் மேவருஞ்சாத்திமத் தீவரண் கருதி இருத்திய

17 ய செம்பொற்றிருத்தகு முடியும் மாப்பொருதண்டாற் கொண்ட

18 கோப்பரகேஸரி வந்மரான ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்

19 க்கு யாண்[டு அ]ஆவது உ[ய்]*யக்கொண்டார் வளநாட்டு
பாம்பூர் நாட்டு

20 திருக்குடமூக்கில் திருக்கிழ்க்கோட்டமுடைய[ா]*ர் உமாதேவர்ஸ்ரீ

21 . . . . . முடையான் சிங்கன் வைத்த

22 . . . . . வேளான் மல்லியான் உண்ணு நங்கை

23 . . த்த சந்திரசேகர தேவற்கு . . . . த்திருக்கீழ்க் கோட்ட

24 உமாதேவ . . . . . தமாக கைக்கொண்டு . . . . . . உண்ணுகை

25 . . . . த்திக்கும் ஒரு ஸந்தி அரிசி இருநாழி ஆக அரிசி அறு
நாழி . .

26 . . . வணத்தால் ஊஙள கறி அமுதுக்கும் நெய்

27 . . . துக்கும் திருவிளக்கு ஒன்று . . த்திக்கும் மாக

28 . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு | 36-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு | கி. பி. 1054 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 14 of 1908 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 45 |
| மன்னன் : | இராஜாதிராஜன் | | |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் சூரியன் சன்னதி வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : விசைய ராஜேந்திரனை முதலாம் இராஜாதிராஜன் காலத்தில், திருக்காரோணமுடைய மகாதேவருக்கும், கன்னியாபிடாரிக்கும் மூலபருடையார் இறையிலி செய்து கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அதற்காக நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது கழஞ்சுப் பொன் பெற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. இவ்விலை யாவணத்தினை, திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயிலில் வெட்டியுள்ளனர். இதில் குறிப்பிடப்பெறும் இறைவன் கோயில் எங்குளது என அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திங்க
2 ளேர் தரு தந் தொங்கல்
3 வெண்குடை நிழல்க்கீழ் நி
4 லமகள் நிலவ மலர் மகற்ப்புணர்ந்து செங்கோ
5 [ே]லாச்சிக் கருங்கலி கடிந்து தந்தையர் தமையர் தம்பி
6 யர் தன் றிருமைந்தரென் றிவரை மணிமுடி சூட்டிக் க
7 ன்னிக் காவலர் தென்னவர் மூவருள் வானகம் இருவருக்கருளி
8 க் கானகம் ஒருவநுக்களித்து பொருதிரல் சேரலரை வேலைகெ
9 ழு காந்தளூர்ச்சாலை கலமறுப்பித்து இலங்கையற் கரைசையும்
10 அலங்கல் வல்லபனையுங் கன்ன குச்சியர் காவலனையும்
11 பொன்னணி முடித்தலை தடிந்து தன் கொடிபடையை ஏவி
12 க்கன்னாடகர் விடுகடகரி புரளத் தன்னுடையில் த[மிழ்]ப் பரணி

13 கொண்டோன் வீரவச்சிரநெடுவாள் விச்சயன்வெரு நெளி
14 த்தஞ்சியோ[ட]த் தன் வஞ்சியம் படையா லாங்கவன் பிதா
15 வை மாதாவோடுஞ் சதர்மலிவீங்கு நீர்ப் பூண்டுர வெஞ்
16 சமத் தகபடுத் தப்படை ஆஹவமல்லன் புயத்தோடு
17 [உ]லாவிடும் ஒற்றரை வெரு . . . . த்தாங்கவர் மார்[பி]
18 [ல்] ஆஹவமல் . . . . இயாங்கநு . . . . . . ன்கெழுதி
19 செலுத்திட . . . . த்தன் புலிக்கொடிப் படை . . . ராட்டல்
20 லரண் வகைசைக் கடல்புரை சிறுதுறை பெருதுறை . . . தப்பஸி
21 . . . யென்று[று] துறை மூன்றிலும் உரைபுன . . . உற்றவகை
22 த்தகிகிரியில் வெற்றிகொடு மூவையேறெழுதி உயர் ஜயஸ்தம்
23 எழில் பெற நிறுத்தித் தன்கழல் பணிந்தொழுகும் . . . .
24 டு செண்டாடிப் பொருபுலி வீரக்கொடியொடுத்த .
25 த் தொன்னலர் கவர்ந்தோன் நெதிப்பிறக்கம் இரவல . .
26 து விரவலில் அவன் விடு [த]ண்டத்துக்கவ[ன்] வென் . . [க்கி]
27 ம்பனும் காளிதாஸனும் விளப்பதராச் சாமுண்டனு . . விநு . .
28 க் கொம்ம[வ]னும் வில்லவராஜனும் முத . . .
29 னாவெல்சமத்திரியலா . . . . .
30 கயவர் பெருநெதி கவர்ந்து
31 ச்சான் உப்பளன் கொய்
32 ம்மலர் . . பதராக த
33 யிலபென் தடிந்து முன் கொண்
34 டு திகை வன்தப்பை முன்தைப்ப . . . .
35 . . . . செகுத்து உப்பளன் வழியினத்தப்பு
36 ல . . ரைச(ர்) ராங்கதுமிழக்கமாட்டாது தன் பூங்க
37 ழல் சரணெனப் புகுத அரணவர்க் களித்துத் தடமுடிமீ
38 ட்டுக் குடுத்துத் தடங்கை வனதப்பையைப் பறித்து
39 டன் கொடுபோந்த பின் மறன்துலைந்தஞ்சியும் அஞ்சா
40 தாநாய் வெஞ்சமங்கருதி விட்டன்தபெறக் கடைகன்முன்
41 பெரிதவற்க் குறைவரைந் தொருநாள் சாத்தி அறைகழல்
42 [பு]கழ பாதம் முன்பபிரட்டரி . . மர் ஒருவனைப் பெண்ணுல

43 . . டுத்தி ஒருவனை அஞ்சுசிகைப்படச்[சிரை]படுத்து நொ . .
44 . . . லவும் ஆஹவமல்லனும் என்று இவர் இடுவித்துன்ற . .
45 ரை விடுத்து . கடை தன்நொடும் போக்கி ஊற்க்குடன் விட்டின
46 னர்து . . ன் . . . ருங்[கொ]முதுகிடப் பொருதுகள் கா . ப்பு
47 த்தண்டின் முன்தாநொருதமிய நெறிமாளக்கை மழலைகட . .
48 கல்லியாணபுரமென்னு ந் தொன்னகர் துகளெழுத் துகைப்பி
49 ன்னகர் . . சு . . கருமாளிகை பொடியாக்கி ஆங்கது காநாநி .
50 பூங்கழல் அடலிராகுத்தன் முதலியர்க்கடகளிற்றரைசரோர் முப்பத்
51 . . . யொடுங்கரியொடும் படுகப் பொருதப் பொருநகர் விஜைய
52 ராஜேந்த்ர . ன்சிங்கசைமிக வீரஅபிஷேகஞ் செய்து சீர்கெழுலி
53 . . விளங்கு மநுநெறி நின் றஶ்வமேதஞ் செய்தரைசு வீற்றிரு
54 ஜயங்கொண்ட சோழன் உயர்ந்த பெருமக்கட்க் கோவிராஜ கேஸரியெ . . .
55 லாகில் யெல்லா நிறைந்த கீர்த்தி உடைய ஸ்ரீவிஜைராஜே
56 ந்த்ரதேவற்கு யாண்டு ௩௰[க]ஆவது உய்யக் கொண்டான் வள நாட்டுப்
57 [பா]ம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் மூலபருடையோம் இவ் வாட்டை மகர நாய[ற்று]
58 அபரபக்ஷ[த்து] . . விதியையும் புதன்கிழமையும் பெற்ற ஆயில்
59 யத்தின் நான்றுச் . . .
60 . . . ட்டகொட்டி . .
61 சா . . . ற்றப்புள்ளி வாசித்துத் திருக்கீழ்க்
62 கோட்டமுடையார் கோயிலில்
63 உள்ளாலைத் திருமுற்றத்துக் கூட்ட
64 க் குறைவறக் கூடியிருந்து பணி
65 ப்பணியால்ப் பணித்து இறையி
66 லி பிரமாணஞ் செய்து குடுத்த பரிசா
67 வது திருக்காரோணமுடைய மாஹாதே
68 வரும் கள்னி[யாபிடாரி]களும் ஊர்க்கீழ் இறை
69 குக்கடவ நிலம் இறைபற்றாமையில்
70 இத்தேவர்கள் ஸ்ரீபண்டாரமாய்க்கூட இருந்த பெ(ரந்)

71 காசு கல்லால் நிறை பொன் ஞூற்றுத் தொண்ணூற்று எண் கழ . . . .

72 ற்றுத் தொண்ணூற்று எண்கழஞ்சுங்கொண்டு இத்தேவர்க்[கே]

73 நிலம் ஊர்பொதுவாய்க்காலுக்கு மேற்க்கும் பாம்பூர்நாட்டு . . . . க்கா

74 . . . ஞூற்று இருபத்தெட்டுக் குழிகொண்டதொருமாவாகவி . . . . .

75 . . . + ரூ — + ரகூசரூகூவுரூஉசஉம் பள்ளிகொண்ட . . . .

76 நிலத்துக்கு வடக்கு கமுதுவன்மாயான் காடனும் கம்பபார நிலத்து

77 க்கு மேற்கு விளைநிலம் ரகூரூகீரூஉவுகீ — + ஊ . . . .

78 ணங்காட்டுக்குக்கிழக்கு சோழ உத்தம வாய்க்காலுக்கு தெற்கு . . . . . .

79 வாற்றுக்கு வடக்கும் மாடலன் திருவிராமேஸ்வரன் நன்காரி . .

80 த்துக்கு மேற்கு நடுவுபட்ட நிலத்தில் இத்தேவர் திருமுற்ற மும்

81 பூநன்தனவனங்களும் நீக்கி மா மூன்[றும்] புன்செய்களும் அ

82 ரைக்காலும் ஆக நிலம் கூஉப உஎரூவஊஉஊம் கமுதவன்

83 . . . . மாதேவனும் தம்பிமாரு ரூ த்துக்கு வடக்கு . . . . .

84 கு தெற்கு மாடிலன் . . ந்தநார் ஞராயணன் ஸ்ராஹ்ணி நி

85 [ல]த்துக்கு கிழக்கும் கவிணியன் மஹாதேவன் திவாகர[ன் நில]த்து

86 க்கு வடக்கும் வயிரூவண்ணஈஸ்வரமுடையான் நேரெ

87 . . தியா . விளைநிலமும் புன்செயும் அகையாறும் தோட்டமு

88 ம் ஆக நில ஸஉவுரூவநூஊவுகீவலிஉம் திருக்கீழ்க்கே

89 ாட்டமுடைய ம(ா)ஹாதேவர் விட்ட நிலத்துக்கு தெற்க்கும்

90 மேற்க்கும் காமக்காணி நாகன் தய[மகெந்தெ]து

91 க்குக்கிழக்கு தோட்டம் வவழலிவுகீகூசஉகஙீ

92 ஜதஉ திருக்கீழ்க்கோட்டமுடைய ம(ா)ஹாதேவர்

93 பள்ளிகொண்டாழ்வார்

94 விட்ட நிலத்துக்கு வடக்கு

95 திருவாய்ப்பாடித்தேவரோடு . . .

96 முன்னேபதி வந்த தோட்ட

97 ரு ம்௨௰௨௲௩௨௲

98 ௰௨௲ம் சோழ [உத்தம]

99 வாய்க்காலுக்கு தெற்கு விளை நில

100 மும் புன்செயும் [ம௺த]வ்வாய்க்காலுக்கு வ

101 டக்கு விளைநிலமும் ஆக ரு பரு௱௰௩

102 ௩௱௰௲௰௲ கவிணியன் ஆமு

103 துகணவதியு தன்னம்மக நிலத்துக்கு

104 மேற்கு பழவாற்றுக்கு வடக்கு விளை நி

105 லம் ௰௲ங்கும் தாணியறைப் ப

106 டாரியான் மாடமுடையான் ரு க்கு மே

107 ற்க்கு ஒழுக்கைக்கு வடக்குத்தாரைய . . . . .

108 ஹாதேவரொடு நொபாதி கொடித்தோட்ட

109 நிலம் யு௲௰௨௲ம் குலையாத

110 ன பள்ள வாய்க்காலுக்குத்தெற்கு வி

111 ளை நிலமும் புன்செயும் ஆக ரு ௩௱

112 ௩௱௰௲௲௲ பிடார

113 ன் ரு ம் வாயிலார் குளத்துக்கும் பெருவழி

114 கும் வடக்கு தொட்ட ரு ம் ௰௲௲

115 கிஹம் ஆகப்பல தடிகளாலும் நூற்று இரு

116 பத்தெட்டுக் குழிகொண்டதொருமாவாக வந்த

117 ரு ம் ௩சபழகி௱௰௰௨௲௩௱௰

118 ௨ம் இன்னிலம் ஆறரையெநா[ல்] மாக்காணி

119 கிநால்கு மாக்காணி அரைக்காணி அரைக்காணி முந்திரி

120 கைக்கீழ் அரையே மாகாணி அரைக்காணி . . . .

121 முஷிகையும் சஷிராதித

122 வற் எப்பேர்ப்பட்ட இறை

123 யும் வெள்ளான் வெட்டி

124 யும் இறையிலிக்காசு உள்

125 ளிட்டு எப்பேற்ப்பட்ட இறை

126 களும் நாங்களே இறுத்துக் குடு

127 க்க இத்தேவர் இன்னிலங்களி . .

128 [இறையி]லியெ சனுஜவிக்கப் பெறுவாரா

129 க இப்பொற்காசு நிறைசாக்ஷும்மாக . . . .
130 காண்டு சஞ்ஜ்ராதிதவற் இறையிலி செய்
131 [து] குடுத்தொம் திருக்காரோணமுடைய மஹா[தெவ]
132 வற்க்கும் கன்னியாபிடாரிகளுக்கும்
133 மூலபருடையோம் இப்பரிசு இன்னிலங்க
134 [ள்] சஞ்ஜ்ராதிதவற்கு இறையிலியாகத் திருக்கீழ்
135 கோட்டமுடைய மஹாதெவர் கொயி
136 லிலெ கல்லில் வெட்டிவித்துக் குடு
137 க்கக்டேவொமாக இன்னிலங்கள் எப்பே
138 ற்ப்பட்ட இறையுமிழிச்சி இறையிலிப்
139 பிரமாணஞ் செய்து குடுத்தொம் தி[ரு]
140 க்காரோணமுடைய மஹாதெவற்க்கும்
141 கன்யா பிடாரிகளுக்கும் மூலபருடையாம்
142 மூலப்பருடையில் இருந்து பணித்தார் கவிணிய
143 . . . . லராமுது ஞராயணன் கவிணியன்
144 நாராணன் கவிணியன் ஜாதவெதனுதித்தன் மாட
145 லன் கண்டந்வெண்காடு தெவந் மாடலன்தெவன் சோ
146 மன் மாடலன் பாண்டன் தாமோதரன் கமுதுவ
147 ன் மாதேவனான கமுதுவனக்கனாகன் கமுதுவ
148 ன் மாயாந் சோமன் கமுதுவன் மாதேவன் சங்க
149 ரன் பாரதாயன் வடுகந்நக்கன் காமக்காணி நாராயணல்
150 மாதேவன் காமக்காணி சங்கரன் கொற்றன் காமக்கா
151 ணி பாண்டன் கேசவன் ஆதவன் ஞதித்தநுத்தன்
152 ஆழியன் இஷப வா[க]*னமாதேவன் மொகிலியன்
153 நாராயணன் வாஸுதேவன் மொகிலியன் நாராய
154 ணஞராவமுது வியாக்கி பரதன் சுப்பிரம[ணி]*யன்
155 கோக விணயன் சாத்தநிஷபவாரூரன் கவிணியன் மாதேவ
156 மாடலந் நாராயணனேய் நான்கமுதுவன் தாமோதிரன் சங்கரநா
157 . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 46 |

இடம் : நாகேஸ்வரர் கோயில் மேற்குப்புறத் திருச்சுற்றுமாளிகைச் சுவரின் ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : கீழ்க்கோட்டமுடையார் கோயிலில் மேற்குத் திருச்சுற்றில் [வல]க்க வாசகன் என்பான் தான் எடுப்பித்த கூத்தாடும்திரு . . . வாதீஸ்வரமுடையாற்கு தினப்படி பூசைக்கும், திருவமுதுக்கும் நிலம் வாங்கி அளித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒவ்வொரு வரியிலும் இறுதிப்பகுதி இல்லை.

தொடர்ந்து இந்நிலத்தைத் திருநாமத்துக் காணியாக மாயேசுர தேவர்கன்மிகளும், கோயில் கணக்கும் ஏற்றுக்கொண்டு எழுதுவித்ததைக் குறிக்கும் பகுதி உள்ளது.

கல்வெட்டு :

I

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கர . . . . டியன் முடி[த்தலை]யுங் கொண்டருளி விசையாபிஷேகமும் வீராபிஷேகமும் பண்ணி அருளின திரிபுவன வீரதேவற்க் , . . .

2 இஷபநாயற்று பூவ-ழப(க்)க்ஷத்து . . . பெற்ற அத்த[த்]* துநாள் உய்யக் கொ[ண்ட]ார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் உடையார் திருக்கீழ் கோட்டமுடை . . . . .

3 து மேலைத் திருமாளிகையில் [வல]க்கவாசகன் எழுந்தருளி வித்த உடையார் கூத்தாடும் . . . திருவாதீஸ்வர முடையார்க்கு நித்தப்படி பூசைக்கும் திரு அமுது படிக்கும் . . . . .

4 யில் விட்ட நில(ம்)மாவது இத்திருகுடமூக்கில் ஏகபோக இறை

யிலி பெற்றுடைய . . . . . நாராயணபட்டன் . . . . . கொண்டு உடையனுல் ஸ்ரீபாத[த்]*து நீர் வார்த்துக்குடுத்த இறையிலி . . . . .

5 யர் சீராமபட்டன் நிலத்துக்கு மேற்க்கும் . . . யாலேத்தும் புலி விளை நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்க்கெல்லை . . யான் விளை நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை பாம்பூர் நாட்டு வா . . . . . . .

6 ஆக இறையிலி நிலம் இரண்டு மாவும் பூசைக்கும் திருஅமுது படிக்கும் உடலாக ஸ்ரீபாதத்து நீர்வார்த்து பிரமாணம் பண்ணி . . . .

7 படிய் இ[றை] ஒன்பது . . . . திருபணியும் . . . . . . இரண்டு . . . . நோக்குவார் ஸ்ரீபாதம் இரண்டும் என் தலை மேலே:

II

8 கல்வெட்டித்தந்த நிலம் உ . . . நாள் ஒன்றுக்கு அறுநாழி அரிசியும் . . . விஞ்ச

9 னங்களு . . . . ஸ்ரீபண்டார . . . . மாறு செலுத்தக் கடவ தாகவும் இந்நிலம் திருநாமத்துக்காணி

10 யாக கூட்டிக்கொள்ள கடவோமாகவும் இப்படி ஸம்மதித்து தான நியோக . . . . . . . .

11 சிமாயேசுர தேவர்கன்மிகளோம் இவை கோயில் கணக்கு [க]ருடையானும் தெ . . . . . . சோழபட்டட . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 47 |

இடம் : நாகேஸ்வரர் கோயில்-கருவறையின் வடக்குப்புறப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் பிற்பகுதி மட்டுமே உள்ளது. இக்கல்வெட்டும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டினதே. இக்கல்வெட்டில் வரும் பராந்தக மூவேந்த வேளான் இக்கோயிலில் செய்வித்த பல பணிகளைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவையும், பட்டவிருத்தி சாலாபோகம் இவற்றையே குறிப்பிடுகிறது.

கல்வெட்டு

I

1 வார் நாரணன் சுவரனை சிவசரண செட்டி வசம் ஸ்ரீஞ் செ . . ல்லை அசுவூர் வாய்க்காலுக்கும் வேளக்குடி நிலத்துக்குத் தெற்க்கும் இவ்விசைத்த பெருனந்கெல்லை யுளகப்பட்ட நிலம் +ப இவ்வொன்றே காலு . . .

2 கணட்டியும் இ . . லைத்துடந்த உற்ஹரும் படைய் சிங்களாந் தகம் ஸாஹாஹோமமாக வைச்சேன் பராந்தக மூவேந்த வேளானேன் ஆயிரந்திருவடியும் ரக்ஷை. பட்ட விருத்தியான நிலம் உ இரு வேலியும் அசுகூர் வாய்க்காலே உருவுவதாக . . . க் குடுத்தோம் மூலப்பருடையோம்

II

3 . . . க்கு ஆக இப்பொன்னில் உத்தமாஹுத்துக்கு சரு நாற் பதின் கழஞ்சு பொன்னுக்கு ஆக இஷேவர் னிலம் மேற் காவிரியில் மூலம்

4 [காநி]லை உத்தமாஹுத்துக்கு வைத்த நிலத்துக்கு தெற்கும் இவ் விசைந்த பெருநான்கெல்லை . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 238 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 48 |

இடம் : நாகேஸ்வரசாமிகோயில் கருவறையின் மேற்கு ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : திருக்கீழ்க்கோட்டத்து இறைவனுக்குத் தொண்ணூற்று ஆறு ஆடுகளை விளக்கெரிக்க காரி விழுப்பரையன் என்பான் அளித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேச[ரிபன்] . . மற்கு யாண்டு . .

2 தானம் திருக்குடமூக்கில் திருக்கீழ்க்கோட்டத்து உறாதே . . . .

3 டயான் காரி விழுப்பரையன் வைத்த நொந்தாவிளக்கு ஒ . . . .

4 . . சினல் வந்த ஆடு தொண்ணூற்றாறும் சாவா மூவாப்பெ . . . . . . . . ாதித்தவல் . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 254 of 1911 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 49 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற் பராந்தகன் | | |

**இடம் :** நாகேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குப்புறம் குமுதப்படையில் உள்ளது.

**குறிப்புரை :** தென்கரை நாட்டுக் கிழார்க் கூற்றத்து ஆயிரத்தளித்தேவதான ஊரைச் சேர்ந்த வில்லவன் பேரரையன் ஆயின . . . . திருக்கீழ்க் கோட்டத்துப் பெருமானடிகளுக்கு அமுதுபடிக்கும், சிலர் உண்ணவும் [சாலாபோகம்] பொன் அளித்த செய்தியைத் தருகிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்[ட] கோப்பரகேஸரிவர்மற்கு யாண் . . . . . . . திருக்குடமூக்கில் மூலப[ருடைப்பெ]பருமக்களோம் தென்கரை நாட்டுக்கிழார்க் கூற்றத்து ஆஇரத்தளித் தேவதான . . . . . ஞுருடையான் வில்லவன் பே[ப]ரரையனுயின . . .

2 . . . ட்டளையால்பொன் சும் இப்பொ . . டிக்கு . . கரு வைய்காசித்திங்கள் முதலாகப் பெருமாநடிகள் உச்சியம் போது அமி . . . . . முன்பு அகனுழிகை . . . . . வஞ்ஞாதித்தவல் ஊட்டுவோமாநபடி . . . ன்னலம்

3 ஸாஹாஹோமத்துக்கு சிறு பயற்றுத்தூப்பரு . . . . . . ற்கு . . . ழைப்பழம் தேவற்கு . . . . . தவிர இருவற்கு இருனுழிக்கு இருவருக்கு ா . . . . . . இருவற்குமாகக் . . க்குழி ருமு உ வஞ்ஞாதித்தவல் இரு . . . . . முன்பு . . பொ . . ம் இத்தளி ஸ்ரீகாயகுமாராயும் . . . .

4 மூலபருடையேம் விற்றுக்குடுத்த நிலம் நாங்க[ள்] . . . வாய்க்
காலுக்குக் குடுப்ப . . . க்கு ஒற்றி நிலம் இருவேலியுமே . . .
நால்வேலி நில விற்றுக் குடுத்தோம் திருக்கீழ்க் கோட்டத்
துப் பெருமாநடிகளுக்கு இவ்வூர் மூலபருடைப் பெருமக்க
ளோம் . . . இந்நிலம் விற்றுக் குடு . . . . . . .

5 ம் வாழைப்பழம் இருவர்கு நாலு . . . . இருவர்கு இரு . . .
பெறுவிலே . . . . . . . படி சந்திராதித்தவல் இவ்விருவரை
யும் பெருமானடிகள் அமிர்து செய்தருளுவதானேம் இத்
தளி ஸ்ரீகாயஃழ ஆராயு . .

6 க்கு திருக்கீழ்க்கோட்டத்து பெருமானடிகளுக்கு இவ்வூர் மூல
பருடையோ . . த நிலம் நாங்கள் ப . . ரிபன்மரிடை
சுஹிஷேகஉக்ஷிணே பெற்ற ஸ்ஹூதெயம் திரைமூர் நாட்டுக்
கரம்பைக்க . . . க்கு இப்படி ஊட்டுவதாக விற்று

7 க்குடுத்தோம் திருக்கீழ் கோட்டத்துப் பெருமானடிகளுக்கு இவ்
வூர் [மூலபருடைப் பெருமக்]களோம் இப்படி இவ்விரு
வனையும் ஶஞ்ராதித்தவல் இத்தேவராய் ஊட்டுவதாக இந்
நிலம் விற்றுக் குடுத்தோம் இது பன்ஶோஷேஷூர ஶக்ஷை

254 of 1911—On the South Wall. A damaged record of the Chola King Madiraikonda-Parakesarivarman (906-47) the date of which is lost. Records gift of 105 pieces of gold (Tulaipon) by Villavan Peraraiyan alias Sidupayam Pandan, a native of Kavalur which was a devadana of Ayirattali in Kilar-kurram a subdivision of Tenkarainadu, for conducting festivals in the same temple.

*தெற்குச் சுவரில் உள்ளது. மதிரைகொண்ட பரகேஸரிவர்மனின் (906–47) ஆட்சியாண்டு சிதைந்த கல்வெட்டு. இக்கோயிலில் திருவிழா எடுப்பதற்காக, தென் கரை நாட்டுக் கிழார் கூற்றத்து ஆயிரத்தளி தேவதானமான காவலூரரைச் சேர்ந்த வில்லவன் பேரரையன் என்பான் 105 துளைப்பொன் கொடையாகக் கொடுத் துள்ளான்.*

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 50 |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்து விட்டது. மன்னன், ஆட்சியாண்டு, கோயிலின் பெயர் ஆகியன மட்டுமே தெளிவாக உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பந்மற்கு யாண்டு ரு ஐ . . . .
2 ம்பூர் நாட்டுத் தேவதானந் திரு[க்கீ]
3 ழ்கோட்டத்துப் பரமஸ்வாமிக்கு நம்
4 மா தே . . .
5 உத்தர . . .
6 ன் ஸஂ௩ . . .
7 சந்தா . . .
8 ந்நு நி
9 த்தம . . .
10 வாறு . .
11 யில் க . . .
12 து உத் . . .
13 . . . . .
14 யு பொ . . .
15 றுக்கு . . .
16 முர் . . .
17 க்கரெ
18 . லி பிற
19 நிலமுங்
20 ழவரி
21 . . . .
22 மா . .
23 நெய் . .
24 ழியும்ப
25 இப்படி
26 வ்வ ஆ
27 ய் ஊட்டு
28 . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | சகம் 1467<br>கி.பி. 1545 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 51 |

இடம் : நாகேஸ்வரர் கோயில் முகவாயில் கோபுரத்தின் மேற்குப் பட்டிகையிலுள்ளது.

குறிப்புரை : நாராயண செட்டியார் என்பவர், இக்கோயிலில் ஏதோ பணி செய்ததைக் குறிக்கிறது. தொடக்கம் மட்டுமே உள்ளது. பெரிதும் சிதைந்து விட்டது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ஸமாவூழ சூசாகூயஎ இதந் மேற்செல்லா நின்ற பரி
தாபி ஸம்வத்ஸரத்து திருக் . . . பக்ஷத்து . . . . ை . . .
வாரமும் பெற்ற ரோஹிணி

2 நக்ஷத்ரு[த்]து நாள் தொண்டைமண்டலம் சந்த . . ராச்சியம்
திருக்குட[வூர்] நாட்டில் திருப்பதி . . . ந இ , . மார
மோத்ரு[த்]து நாகு செட்டியார் வங்குருகூர் நாருயண
செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 16-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 52 |
| அரசு : | விஜயநகரர் | | |
| மன்னன் : | கிருஷ்ணதேவராயர் | | |

இடம் : நாகேஸ்வரர் கோயில் முகமண்டபத்தின் தெற்குப்புறத் தூணிலுள்ளது.

குறிப்புரை : கிருஷ்ணதேவ மகாராயரிடம் பணி செய்யும் தெண்டி வசவய்யர் என்பவர் இம் மண்டபத்தைக் கட்டியதை இக்கல்வெட்டுக் குறிப்பதாகத் தெரிகிறது, எதிர்த் தூணில் தெலுங்கிலுள்ளது.

கல்வெட்டு

1 கிறுக்ஷ
2 தேவ மக(ா)
3 ராயர் ஊ
4 ழியம் தெ
5 ண்டி வச
6 வயர் ஸ
7 தா ஸே
8 வை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 53 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறை வடக்குப்புறம் உள்ளது.

குறிப்புரை : துர்க்கை கருவறையில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தினுள் சென்று விட்டதால் பாதி மறைந்த கல்வெட்டு. பள்ளியறை இறைவனுக்கு, உச்சியம் போது அமுது செய்வதனைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு . . . .

2 பூர் நாட்டுத் தேவதானந் திருக்குடமூக் . . . கீழ்க் . . . . வாரணேஸ்வரரம் திருப் . . . .

3 பள்ளி கொண்டருளுகிற வாரஸ்வாமி . . . . ஸ்ரீகோ . . . . உச்சியம் போது அமுது . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 54 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : நாகேஸ்வரசாமி கோயில் கருவறையின் வடக்குச் சுவர், ஜகதியில் உள்ளவை.

குறிப்புரை : துண்டுக்கல்வெட்டுக்கள். மிகவும் சிதைந்துவிட்டன.

கல்வெட்டு

I

1 . . . . வர் . . ரு . . . . ய . . . . ட்டங்கரு
2 மடாடாக உடைய . . . . . . நெல்லு
3 இந்நால்ப . . . ஹோமமாக கு . .
4 . . . ன் இது வஞ்ஜாதி . . .

II

1 . . . யும் இசக்க . . காத்து வகைசெய்கின்ற பரமேஸ்வர . . தே
2 ரி . கர்ணன் பரமேஸ்வரன் விண்ணப்பத்திஞல் தன் . . க்கொ . .
3 சின் தண்டப் பொன் நூம . . . இப்பொன் . . . னேந் . .
4 ஷேவரை . . . . நக்கனும் ஆகாச்சிமுக . . .
5 . . க்கச பெருமானடிகள் ஸ்ரீமுகங்கொண்டு . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 55 |

இடம் : நாகேஸ்வரர் கோயில் கோபுரத்தின் மேற்கு (உட்புறம்) குமுதப்படையிலுள்ளது.

குறிப்புரை : பகுதி I-ல் காரோணமுடையார் என்ற இறைவன் பெயர் குறிப்பிடப்படுகிறது. துண்டுக்கல்வெட்டு. இவ்வூர்க் கல்வெட்டு எண் 36-லும் திருக்காரோணமுடையார் என்ற இறைவன் பெயர் குறிப்பிடப்படுகிறது. பகுதிII-ல் விளக்கெரிக்க அளித்த கொடையும், பகுதி III-ல் அமுதுசெய்யஅளித்த கொடையும் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

I

1 . . ச்சமனும் வென்றுமா . . கோவி . . . . . . . . . த்தமன . .

2 திருக்காரோணமுடைய ஞயஞ . . . ரிலே . . தலுத் . .

3 க்கு அமுதுபடி பதிங்கலம் கறிஅமுது . . . . ஞ்சு பச்சடி வகை நாலு . . . திரு . . . .

II

4 . . . யட்டக் கடவான் மன்ருடி சி . .

5 . . ம்சங்கன் திருகவணச் . .

6 . . விருவோம் . . . ருத்தோம் . .

7 . . தித்தோம் எரிக்க கடவோமாகவும் . .

8 இவ்விள[க்*]கோடும் இரண்டு விளக் . . .

9 வராஈகை

III

10 . . . . . நாலு . . . . கொண்டு . . . கல . . . திருவல . . .
. . . தரு . . . தையங்கொண்டு மாசி மாதத்துக்கும் பங்கு

11 . . [ஸ்ரீ]பாதநாயனுற் திரு . . . க்கு [எ]ழுந்தருள அமுதுசெய்ய
கட்டளை இப்படியாலே சந்திருதித்தல . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | சகம் 1365<br>கி.பி. 1443 |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 56 |
| அரசு : | விஜயநகரர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : நாகேஸ்வரர் கோயில் முகவாயில் கோபுரத்தில் உள்ள கிழக்குப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : விஜயநகர மன்னர் ஹரிஹரர் காலத்துக் கல்வெட்டுப்பகுதி. துண்டுக் கல்வெட்டாதலின் பிறசெய்திகள் அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

I

1 ஸ்வஸ்திஸ்ரீ மண்டலீசுரன் அரிய

2 . . . ம் சூ௲ாசூ௫ ல் செல்லா நின்ற

II

3 காரியஞ் செய்வார்களும் தேவ

4 . . ன்மி கோயில் கணக்கனும்

5 . . ச்சிஞக்கினியான் பக்கல்

6 . . கள் உபையமாக திருப்பதி

III

7 விஹாடந் ஹா . . .

8 நின்ற பமகா . . . . .

9 . . ஹரியண உடையார் . . .

10 ம் இருபத்தஞ்சாந்தியதி மஹா . . .

11 கீழைக்கூறு ருூ வ

12 . . . தக் கடவனுகவும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 249 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 57 |

On the South Wall of the Central Shrine. A record of the Chola king Madiraikonda Parakesarivarman (Parantaka-I) the date of which is lost. Built in at the end and damaged. Records sale of land by the assembly of Tirukkudamukku for feeding two persons in the temple of Tirukkilkkottattu-perumanadigal. Mentions Ayirattali in kilar-kurram, a subdivision of Tenkarainadu.

நாகேஸ்வரசாமி கோயில் கருவறை தென் சுவரில் உள்ளது. மதிரை கொண்ட பரகேசரிவர்மனின் [பராந்தகன் I] கல்வெட்டு இது. ஆட்சி ஆண்டு தெரியவில்லை. இறுதிப் பகுதி கட்டிடத்தினுள் மறைந்தும், சிதைந்தும் விட்டது. திருக்கீழ்க் கோட்டத்துப் பெருமானடிகள் கோயிலில் இருவர் உண்ண, திருக்குடமூக்குச் சபையினர் நிலம் விற்றுக்கொடுத்ததை இக் கல்வெட்டு குறிக்கிறது. தென்கரை நாட்டுக் கிழார்க் கூற்றத்து ஆயிரத் தளி இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | — |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 241 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 58 |

On the West wall of the Central Shrine. Records gift of gold for lamps by two private individuals.

நாகேஸ்வரசாமி கோயிலின் கருவறை மேற்குச் சுவரில் உள்ளது. தனிநபர் இருவர் விளக்கெரிக்க வைத்த பொற்கொடையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 228 of 1911 |
| மொழி | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேஸரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 59 |

On the North wall of the Central Shrine in Nagesvara Temple. A record in the third year of the Chola King Rajakesarivarman [Gandaraditya]. Records gift of ninety sheep for a lamp by Kumaran Tuduvan, one of the Kaikkolas of virasolatterinja-kaikolar and a resident of Tanjavur. (Vira Chola was a surname of parantaka I and the Kaikkolars evidently got the title from him. For similar epithets see. Tj. 1397 and 1398).

*நாகேஸ்வரர் கோயிலின் கருவறையின் வடக்குச் சுவரில் உள்ளது. கோ இராஜகேசரி வர்மனின் மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. தஞ்சையில் வாழும் வீரசோழத் தெரிஞ்ச கைக் கோளரில் குமரன் தூதுவன் என்பான் ஒரு விளக்கெரிக்க தொண்ணூறு ஆடுகள் கொடுத்ததைக் குறிக்கிறது. [பராந்தகனின் பட்டப்பெயரே வீர சோழன் என்பதாகும். அவனது பெயரையே இவர்களும் கொண்டிருந்தனர். [இதுபோன்ற கல்வெட்டுக்களுக்கு தஞ்சை எண் 1397, 1398 ஆகியவற்றைக் காண்க.]*

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 226 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | ஆதித்தகரிகாலன் | ஊர்க் கல்வெட்டு எண் | 60 |

On the North Wall of the Central Shrine. A record in the fourth year of the Chola King Parakesarivarman (Aditya II) "who took the head of the Pandya". Records gift of ninety sheep for a lamp to the temple of Tirukkilkottattu Parameswara by Pendatti Devayan Pullakkan alias Avanisikhamani (a resident) of Kilaivalam (quarter) at Tanjavur, called after Udaiyapirattiyar Kilanadigal, the mother of Anaimerrunjinar (i.e. Rajaditya who was killed by Bhutuga II while seated in his elephant and whose mother was Kokkilanadigal, the queen of Parantaka I. See Leyden Grant in Tamil and Sanskrit Ins , p. 204 ff; the Atakaur inscription as interpreted by R. Narasimhachariyar in J.R.A.S, April 1909; and Mysore Arch. Rep. 1911, p. 38.)

நாகேஸ்வரசாமி கோயிலின் கருவறை வடக்குச் சுவரில் உள்ளது. பாண்டியன் தலைக்கொண்ட கோப்பரகேசரி வர்மனின் 4-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. ஆனைமேல் துஞ்சினரின் [இராஜாதித்தன்] அன்னை உடைய பிராட்டியார் கிழானடிகளின் பெயரில் அமைந்த கிழைவேளத்துப் பணி புரியும் பெண்டாட்டி தேவயன் புல்லக்கன் ஆன அவனிசிகாமணி என்பாள் திருக்கீழ்க்கோட்டத்துப் பரமசுவாமிகளின் கோயிலில் விளக்கெரிக்க 90 ஆடுகள் கொடையளித்ததைக் குறிக்கிறது. [ராஜாதித்தன் தன் யானைமேல் இருந்து போரிடுகையில் இரண்டாம் பூதுகனால் கொல்லப்பட்டான். அவனது தாயார் கோக்கிழானடிகள். பராந்தகனின் மனைவியார். லெய்டன் செப்பேடு காண்க. தமிழ் சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள். பக்கம் 204; அதக்கூர்க் கல்வெட்டு ஆர். நரசிம்மாச்சாரியார் என்பவரால் Journel of Royal Asiatic Society 1909. ஏப்ரல்-இதழிலும், மைசூர் தொல்பொருள் ஆண்டறிக்கையிலும் [Mysore Arch. Rep. 1911 p. 38] எழுதப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 225 of 1911 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 61 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் (ஆதித்த கரிகாலன்) | | |

On the North Wall of the Central Shrine. A record in the fifth year of the Chola King Parakesarivarman (Aditya II) "who took the head of the Pandya". Records sale of land by the assembly of Tirukkudamukku, a devadana in Vadagarai-Pamburnadu to the palace woman (pendatti) Periyan Tribhuvana-Sundari (a resident) of Palaiyavelam at Tanjavur in Tanjavur-kurram, for 85 kalanju of gold which she had deposited, for feeding a Sivayogin in the temple of Tirukkilkottattu-Paramasvami. The land given by Kadan-Achchan formed one of the boundaries of this land.

நாகேஸ்வரசாமி கோயிற் கருவறையின் வடக்குச் சுவரிலுள்ளது. பாண்டியன் தலைக்கொண்ட பரகேசரிவர்மனின் [இரண்டாம் ஆதித்தன்] ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு. திருக்குடமூக்கு சபையினர் செய்த நிலவிலை யாவணத்தை இது குறிக்கிறது. தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் பழைய வேளத்துப் பெண்டாட்டி பெரியான் திரிபுவனசுந்தரி என்பாள் 85 கழஞ்சுக்கு விற்று அப்பொன்னின் பலிசையால் திருக்கீழ்க் கோட்டத்துப் பரமசுவாமி கோயிலில் ஒரு சிவயோகிக்கு உணவளிக்க ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது. காடன் ஆச்சனின் நிலமும் [எண். 224 of 1911] இந்நிலத்தின் எல்லைகளில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

1 . . . . . . . .
2 கொண்ட கோ . . .
3 வது வடகரை பா . . . .
4 குடமூக்கில் திருக்கீ . . . .

5 [கோ]காயிலில் உத் . . .

6 தஞ்சாவூர்க் . . . .

7 மும் வேளத் . . . .

8 திரிபுவன சு . . . .

9 இ[ப]துக்கும் . . . .

10 ல் பருடை . . . .

11 ஷேக ஃக்ஷி . . .

12 விற்றுக் குடுத்த . . . .

13 ல் கெல்லை . . .

14 துக்கு மே . . .

15 க்கேய் வடக்கு .

16 கிழக்கும் எரி . .

17 ஆக இவ்வா . .

18 நிக்கு இருகறி .

19 பழமும் . . . .

20 ஜிதவற் . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 2-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 224 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 62 |

On the North wall of the central shrine in Nagesvara Temple. A record in the second year of the Chola King Parakesarivarman. Records sale of land to a certain kadan Achchan for 25 kalanju which he had deposited in the same temple, for maintaining a perpetual lamp. (Mr. Krishna Sastri surmises that the king referred to might be Aditya Karikala II)

நாகேஸ்வரசாமி கோயிலின் கருவறை வடக்குச் சுவரில் உள்ளது. பரகேஸரிவர்மனின் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு. காடன் ஆச்சன் என்பான் 25 கழஞ்சுக்கு நிலத்தினை விற்று, அப்பணத்தினைக் கோயிலில் விளக்கெரிக்க முதலாக வைத்த செய்தி குறிக்கப்படுகிறது. [இதில் குறிக்கப்படும் மன்னன் ஆதித்தகரிகாலனாக இருத்தல் வேண்டுமென்பது திரு. கிருஷ்ணா சாஸ்திரியவர்கள் கருத்து]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 27-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 934 |
| ஊர் : | குடந்தை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 232 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 63 |

On the North wall of the central shrine in the Nagesvara Temple. A record in the twenty seventh year of the Chola king Madiraikonda Parakesarivarman (Parantaka I). Built in at the end. An Inscription to the left of this on the same wall has its beginning built in and records a gift of land for feeding a sivayogin and maintaining a lamp in the temple of Thirukkilkottattu perumanadigal.

நாகேஸ்வரசாமி கோயிற் கருவறையின் வடக்குச் சுவரில் உள்ளது. மதிரைகொண்ட கோப்பரகேஸரிவர்மனின் [முதற் பராந்தகன்] இருபத்தி ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. இறுதி கட்டிடத்தினுள் மறைந்து விட்டது. இடப்புறம் கல்வெட்டின் தொடக்கம் கட்டிடத்தினுள் மறைந்து விட்டது. திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமானடிகளின் கோயிலில் சிவயோகி களுக்கு உணவளிக்கவும், விளக்கெரிக்கவும் நிலக்கொடை அளிக்கப்பட்டதைச் சுட்டுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 6-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 223 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 64 |

On the North wall of the central shrine in the Nagesvara Temple. A record in the sixth year of the Chola king . . . . . sarivarman. Built in at the beginning. Records gift of 96 sheep for a lamp to the temple of Tirukkilkottattu-Paramasvami at Tirukkudamukku in Vadagarai Pamburnadu by Ingala-Madevan Kodai Maran, a native of Ingal-nadu.

நாகேஸ்வரசாமி கோயிலின் கருவறை வடக்குச் சுவரில் உள்ளது. . . . சரிவர்மனின் ஆறும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. தொடக்கம் கட்டடத்தினுள் சென்றுவிட்டது. இங்கல் நாட்டு இங்கல மாதேவன் கோதை மாறன் என்பான் வடகரைப் பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கு திருக்கீழ்க் கோட்டத்துப் பெருமானடிகள் கோயிலில் ஒரு விளக்கெரிக்க தொண்ணூறு ஆடுகள் கொடையளித்ததைக் குறிக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 8-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | குடந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 13 of 1908 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | -- |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | மாறஞ்சடையன் | ஊர்க் கல்வெட்டு எண் | 65 |

On the West wall of the shrine of the goddess in the Nagesvara Temple. A record in the eighth year of the Pandya king Maranjadaiyan. Records gift of 138 cows for milk and 100 kasu for two lamps by the king to the temple of Tirukkilkottattu Bhatara at Thirukkudamukku. (The exact identity of Maranjadaiyan is not known. Thirukkudandai kilkottam is famous in Saivaite tradition as the place where the sun worshipped Siva and got back the splendour which he had lost owing to Visvakarma's curse).

நாகேஸ்வரசாமி கோயில் தேவி கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது. மாறஞ்சடையனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. திருக்குடமூக்குத் திருக்கீழ்க்கோட்டத்துப் படாரகர் கோயிலில் இரண்டு விளக்கெரிக்க 100 காசுகளும், பாலுக்கு 138 பசுக்களும் இம்மன்னன் கொடையளித்ததைக் கூறுகிறது. [இம்மன்னன் யாரென அறிய இயலவில்லை. திருக்கீழ்க்கோட்டம் சைவசமயத்தில் சிறப்பிடம் பெறுவது. இங்கு விஸ்வகர்மாவின் சாபத்திற்கு இலக்கான சூரியன் இறைவனை வழிபட்டு, மீண்டும் ஒளி பெற்றதாகக் கூறும் புராணவரலாறு உண்டு.]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 929 |
| ஊர் : | திருப்பாண் துறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 135 of 1932 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : பிரணவேஸ்வரர் கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவரிலுள்ளது. தலைகீழாக வைத்துக் கட்டப்பட்டுள்ளது.

குறிப்புரை : திருப்பெருந்துறை மாதேவர்க்கு அம்பட்டன் பிராந்தகன் ஆதித்தன் என்பான், ஒரு நொந்தா விளக்கெரிப்பதற்கு தொண்ணூறு ஆடுகள் கொடுத்ததையும், அதனைத் திருப்பெருந்துறை மகாசபையினர் பெற்றுக்கொண்டு, விளக்கெரிக்கும் பொறுப்பேற்றதையும் இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை [கொண்]
2 ட கோபரகேசரி பந்மற்கு ய[ாண்டு]
3 உ௰உ ஆவது திருபெருந்[துறை]
4 யூர் நாட்டு தேவதான பிர
5 மதேயம் திருபெருந்துை[ற]
6 மாதேவர்க்கு அம்[பட்ட]
7 ன் பிராந்தகனுதித்[த]
8 ன் சந்திராதித்தவல்
9 நிசதம் உழக்கு [நெய்]
10 திருநொந்தாவிளக்கி . . .
11 யாலும் எரிப்பதாக
12 [வை]த்த ஆடு தொண்[ணூ]

13 . . இவை சாவா மூவா . .
14 . . டார் சந்திராதித்தவற்
15 வொரு விளக்கு எரிப்பி . . .
16 ஞேம் திருப்பெருந்து[றை மஹ]
17 ா ஸஹையோம் . .
18 . . ம்மிக . . . .
19 பஞ்சாஹேஹ்ஸூரு ஈஸ[க்ஷ]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 6-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 14- ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருப்பாண்துறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 138 of 1932 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : பிரணவேஸ்வரர் கோயில்-மண்டபத்தின் கிழக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : சுந்தர பாண்டியனின் 22-ஆம் ஆட்சியாண்டில் நல்லிடையான் வழுதியராயன் என்பான் மகாபீடம் ஒன்றினை இக்கோயிலில் அமைத்துக் குடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ வீர[பாண்டிய] தேவருக்கு
2 யா[ண்]*டு சு[வ]து இறையனர் திருக்
3 கொயில் மு[ன்]*னள் சுஊரபாண்டி
4 ய தே[வ]*ருக்கு உ௰உ [வ]து முதலிக்கு
5 சாத்தின மஹா பீடம் நல்
6 லிடையான் வழுதியரா
7 யதன்மம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 14-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1230 |
| ஊர் : | திருப்பாண்துறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 137 of 1932 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : பிரணவேஸ்வரர் கோயில் முன்மண்டப வடக்குப்புறச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : பாண்டிய குலாசநி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்தைச் சார்ந்த அரைசூருடையான் அரையன் குணதாயான் இலங்கேஸ்வரன் என்பானின் மனைவி, அவளது மாமனர் மலைக்கினிய நின்றான் இராமதேவனை சயங்கொண்ட சோழப் பல்லவரையனை முதுகண்ணாகக் கொண்டு, அமாவாஸி தோறும் இறைவன், தேவி, செல்வர், அத்திரதேவர் ஆகியோரை எழுந்தருளச் செய்யவும், வழிபாட்டுக்காகவும் இறையிலியாகக் கொடையளித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டின் இறுதிப்பகுதி கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1 திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்[ட்]டு [ப]திநாலாவது ஸிஂஹ நாய[ற்று] அபரபக்ஷத்து டீஶியும் புதன்கிழமையும் பெற்ற ரோகிணி நாள் பாண்டிகுலாசநி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து அரைசூருடையாந் அரையன் குணதாய

2 ாந் இலங்கேஸ்ூ[ர]ந் பாரியை சுத்தமலி வளநாட்டு வெ[ண்]*ணிக் கூற்றத்து குணமுலைமிடியு . . வை அரையந் அழகியந் அழகிய பெருமாள் கங்கை கொண்டாநேந் எங்கள் மாமனர் விருதராச பயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு முடை[ழயூ] ருடையாந் மலைகிநிய நின்

3 [றன்]ராமதேவந் ஆந சயங்கொண்ட சோ[ச]ழ பல்ல[வ] ரையரை முதுகண்ணாக கொண்டு நம் பிரமாண இசைவு தீட்டு குலோத்துங்க சோழ வளநாட்டு திருநறையூர் நாட்டு

ஸுஷூஷேயம் திருப்பெருந்துறையில் உடையார் அமாவாசி
4 நாயகரும் நாச்சியாரும் பெரிய செல்வரும் அத்திர தேவரும்
திரு . . . . தருளி அழ . . . . . . தீத்தம் சாத்தி . . .
. . . . ருளவும் வேண்டுவனவற்றிக் குடலாக . . . . . . .
இறையிலி . . . . . .*

* கொடுக்கப்பட்ட இறையிலி நிலமும், மனையும் என்ற தெளிவினை இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை மூலம் பெறுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 20-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1236 |
| ஊர் : | திருப்பாண்துறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 136 of 1932 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | [மூன்றும்] இராஜராஜன்* | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : பிரணவேஸ்வரர் கோயில்–வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. திருப்பெருந்துறை பிரம்மதேயம் என்று குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ தி[ரிபுவனச் சக்கறவத்திகள்] . . .

2 யூர் நாட்டு ப்ரஹ்மதேயம் திருப்பெருந்[துறை]யில் உடையார் . . . . . ப்பெருந் . . . . . க்கு வேண்

3 யிலிலே கல்வெட்ட . . . . . . . . . .

4 இநாயனுர் . . . . . பெருந் . . . ருடை . . .

5 . . . . . .

Chola-Tribhuvana Chakravartin - Rajaraja 20th year. Makarasu 9. Wednesday Asvati - Tamil - Damaged and incomplete. Mentions the Brahmadeya Village Tirupperundurai and one Nittakalyanan.

சோழர் - திருபுவனச்சக்கரவத்திகள் - இராஜராஜன் 20-ஆம் ஆண்டு மகரம் - சுக் 9. புதன்கிழமை - அசுவதி - தமிழ். சிதைந்தும், முற்றுப்பெறுமலும் உள்ளது. நித்தியகல்யாணன் என்ற பெயரும், திருப்பெருந்துறை பிரம்மதேயம் என்ற குறிப்பும் மட்டுமே தெரிகிறது.

* மன்னன் பெயர் ஆட்சியாண்டு இவை இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை மூலம் குறிப்பிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருப்பாண்துறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 134 of 1932 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |

இடம் : பிரணவேஸ்வரசாமி கோயில் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு

I

1 . . பாந பதிங்கழஞ்சு . . . உத்திரியம் ஒன்றினால் எட்டுமா . . பொ[ன்]*கழஞ்சே முக்கா[ே]ல யிரண்டுமா திருப் [பட்டம்] ஒன்றினால் எட்டு மாறி பொன் . . . .

2 . . ல் எட்டும் மாறிபொன் . . . ஞ்சு மேற்படிய[ார்] இட்ட திரு . . . . ஒன்றினால் எட்டு மாறிபொன் அயிரு கழஞ்சு ஆக பொன் எழுகழஞ்சு குண . . . .

II

3 . . . . இவ்வூரில் . . . ழிச்சிக் கொண்டு திரு[நுந்]தா விளக்குப் புறம் ஆக விட்ட . . . லே முக்காணியும் இத்தேவர் ஸ்ரீ பண்டாரத்துப் பழ முதலாய் [வ]ருகிற உருக்களாய்ச்ச[ய]ப் படி . . . . . கு[ேலாத்]துங்க சோழ தேவ

4 . . . . ங்கழ . . . . . லே நாலு மஞ்சாடியும் அஞ்சு மா குண மலைப்பாடி . . . கைகொண் . . . ரான பொத்தப்பிச்சோழர் இட்ட பட்டம் ஒன்றினால் எட்டு மாறி பொன் இருபதின் கழஞ்சுக்கும் . . . .

On the south wall of the central shrine of the Praneswara temple—Chola—king and date lost—Tamil. Begins with புயல்வாய்ப்ப etc-Kulottunga III-Damaged and incomplete. Seems to be an inventory of the temple lands and ornaments. Purports to be the copy of an inscription engraved on stone, the original brick temple of Tirupperunturai Udaiyar was converted into a stone temple in the reign of Karikala-Chola, on which occasion the inscriptions previously engraved on the door jambs and the caves of stone (kar-kavi) were copied on the temple walls.

*சிதைந்தும் முழுமையின்றியும் உள்ளது. 'புயல்வாய்ப்ப' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. கோயிலைச்சார்ந்த நிலம், ஆபரணங்களைப் பற்றிக் கூறுவதாகத் தெரிகிறது. முதலில் இருந்த செங்கற் கோயில், கரிகாலன் காலத்தில் கற்கோயிலாக மாற்றப்பட்டது. அப்போது பழைய கோயிலில் வாயில் நிலையிலும், பிற இடத்திலும் ('கற்கவி'யென உள்ளது) இருந்த கல்வெட்டுக்கள், பின்னர் சுவரில் மீண்டும் எழுதப்பட்டன.*

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : குடந்தை
ஊர் : திருப்பாண்துறை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 6

இடம் : பிரணவேஸ்வரர் கோயில் கருவறை அதிஷ்டானத்தில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுக்கள். நிலத்தின் அளவுகளையும், எல்லைகளையும் குறிப்பிடுகின்றன.

கல்வெட்டு :

I

1 . . . ாகதம் நடுபட்ட நிலம் ஒருமாவரைக்காணி கீழ் நாலும் மேல் கணப . . . க்கு அடையக் . . . எல்லை . . , வழிக்கு மேற்க்கும் தெந்பார்க்கு எல்லை குடுக்க . . . . க்கும் மேல் பாக்கு எல்லை வார் வாய்க்காலுக்கு

2 எல்லை நடுவுபட்ட நிலமுக்காணி அரைக்காணி அரையே மூன்று மாவும் மே . . . திரு . . கீழ் சிறகில் குடுக்கிற மனைக்கு குடுக்க . . . முக்கு மே . கும் தெந்பாற்க்கு எல்லை அரசூருடையா . . . கொண்டான் மனைக்கு வடக்கும் மேல் பார்க்கு எல் . . .

3 . . . கலந்திரு . . முடையாந் மனைக்கு தெற்க்குமாக இசைந்த இநான்கெல்லை உள் நடுவுபட்டமனை இருபத்து அஞ்சினல் நிலம்காணியும் திருபெருந்துறையில் கொல்லை . . . . க்கு கீழ்பார்க்கு எல்லை கோயிலுக்கு மே . .

# II

4 . . . . . ே[க]ாணார் . . . த . . த . . . காண . . . . . டான் நிலத்து

5 . . . அரசூரில் . . . ாள் . . . . . என்று பேர் கூவப்பட்ட இ . . நிலத்துக்கு . . . முக்காலுக்கு மேர்க்கு தென்பா . . எல்லைக்கு நன . . . த்துக்கு வடக்கு . . ழிக்கு . .

6 ரு துறை . . க்க . . றுக்குகிழக்கும் வடபார்க்கெல்லை . . ால் செ . . . . துக்கு தெற்கு ம . . . . . . . ாநுக்கு எல் . . டாந் . . ட்ட நிலம் மும்மாவரை நிலம் மும்மாவரையும் குசவந்குமரன் . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 9-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1021 |
| ஊர் : | திருக்களித்திட்டை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 292 of 1908 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதல் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : முதல் இராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில், அவனுடைய 9-ஆம் ஆட்சியாண்டில் ராஜேந்திர சிங்கவள நாட்டு மண்ணிநாட்டு பிரமதேயம் வேப்பற்றூரான ஸ்ரீசோழ மார்த்தாண்டச் சதர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த மகாசபையார், சண்டேஸ்வர தேவரிடம், அறுபத்தஞ்சு காசு பெற்றுக் கொண்டு நிலத்தை (ஒற்றியாக) கொடுக்கின்றனர். அந்நிலத்தின் மூலம் வரும் வருமானத்தால், திருஆராதனையும், திருவமுதும் அளித்தல் வேண்டும். தவிர, அறுபத்தஞ்சு காசுக்கு உரிய வட்டியினைக்கொண்டு, இந்நிலத்துக்குரிய வரிகளையும், மகாசபையே கட்டி விடுதல் வேண்டும்.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்நி வளர இரு நி
2 ல மடந்தையும் போற்செயப் பாவை
3 வயும் சீர்த் தநிச் செல்வியும் தன்வெ
4 பருந்தேவியராகி இன்புற நெடுதியலூழி
5 யுள் இடைதுறை நாடும் துடர்வன வேலி
6 ப்படர் வனவாசியும் சுள்ளிச்சூழ்மதிள் கொள்
7 ளிப் பாக்கையும் நண்ணற்கருமுரண் மண்ணை
8 க்கடக்கமும் பொருகடல் ஈழத்தரசர்தம் முடியும் ஆ
9 கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்ன
10 வந் பக்கல் தெந்[ந]வந் வைத்த சுந்தரமுடியும் [இந்திரநமு]

11 ம் தெண்டிரைப் பொருகடல் ஈழமண்டல முழுவதும் எறி ப
12 டைக் கேரளந் முறைமையிற் சூடும் குலதனமாகிய பலர் பு
13 கழ்முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்
14 பெருங்காவல் பல்பழன்தீவும் செருவிற் சினவி
15 யிருபத்தொருகால் அரைசு களைகட்ட பரசுராமன் மேவருஞ்
16 சாந்திமத் தீவரண் கருதி இருத்திய செம்பொற் திருத்தகு மு
17 டியும் பயங்கொடு பழிமிக முயங்கியிற் முதுகிட்டொளித்த
18 சயசிங்கன் அளப்பரும் புகழொடு பீடியல் இரட்டபாடி ஏ
19 ழரை இலக்கமும் நவநெதிக்குலப்பெருமலைகளும் மாப்
20 பொருதண்டாற்க் கொண்ட கோப்பரகேஸரி வன்மரான ஸ்ரீரா
21 ஜேந்த்ரசோழ தேவற்க்கு யாண்டு ஒன்பதாவது ராஜே
22 ந்த்ர சிங்கவளநாட்டு மண்ணிநாட்டு ப்ரஹ்மதேயம் தே
23 வம்பற்றூரான ஸ்ரீசோழ மாத்தாண்ட சதுர்வேதி ம
24 ங்கலத்து மஹாஸபையோம் இவ்வாட்டை மகர ந
25 ாயற்று புதன் கிழமை பெற்ற திருக்கேட்டை நாள்
26 . . . . . . மண்டபத்தே
27 . . ழீ செய்து
28 கூட்டக் குறைவற
29 க்கூடி இரிந்து
30 யாலம் . . னத்து நம்மூர் . . . .
31 . . ட்டை இனிதெழுந்தருளி இரிந்த
32 . . . . [வராஹ]ஸ்வாமிக்கும் . . . . . .
33 ஸ்வாமி தேவர் பக்கல் ஸபையோம் கொண்ட காசு அ
34 றுபத்தைஞ்சு இக்காசு அறுபத்தைஞ்சும்
35 கொண்டு ஸ்ரீ குடித்திட்டை . . . . .
36 வ்வூர் கீழ்[பிடாகை] . . . வதிக்குக் கிழக்கு ஸ்ரீ அ
37 ருமொழி தேவ வாய்க்காலுக்கு வடக்கு இரண்டாங் கண்
38 ணாற்று இரண்[டாஞ் சதிரத்து] . . . . . .
39 தேவர்க்கு முன்பு . . . . அஷயம் செய்து குடுத்த நில
40 ம் பழம்படி அரையே அறுமா முக்காணி நீக்கி இத

41 ளேடுமடைய[க்] கிழக்கு மாவண்டூர் திருவாரூர் நம்பி

42 கூமவித்தன் நிலத்துக்கும் பருன்தூர் சீ மாதவகூ

43 மவி[த்]தன் நிலத்துக்கு மேற்க்கும் தென்பாற்க்கெல் . .

44 . . கண்ணாற்றுக்கு வடக்கும் மெல்பாற்க்கெல்லே இ . .

45 த்தேவற்க்கு அஷெயம் செய்து குடுத்த நிலத்துக்கு

46 க்கிழக்கும் வடபாற்க்கெல்லே கண்ணாற்றுக்குத் தெற்க்கு

47 ஆக இன்னாந் கெல்லேயிலும் நடுவுபட்ட பழம்

48 படி நிலம் மூன்றுமாக்காணி இதநால் உலகளனருளிெ . .

49 எறிவன்த மிகைஞிலம் ஒருமாக்காணி அரைக்காணி முஷிரி

50 கைக் கால் முஷிரிகைக் குழி முக்காலே மூன்று மாக்காணி

51 ஆக நிலம் ஞன்மாவரை அரைக்காணி முஷிரிகைக் . .

52 ல் முஷிரிகை குழி முக்காலே மூன்றுமா முக் . . .

53 . . ஷிரம் மடக்கி வஹ குறுநிலம் ஒருமா முக்காணிக்கால் முஷிரிகைக்குழி மூந்றுமா அரைக்காணியாலும் இவ்வாட்டை மகர நாயறு முதல் இந்நிலத்தால் வஹ வாசலில் பொஹ இறையிலி வாய்க்காசுக்கும் பஞ்சவார நெல்லுக்கும் . . பறு . . .

54 வ்வளாக்கு எண்ணே நெய்க்கும் மற்றும் எப்பேர்ப்பட்ட ஊருடு* வரிக்கும் ஏரி ஈவுக்கும் குலேயும் குரம்பும் உள்ளிட்ட வெட்டி வேதனேகளும் சில்வரிகளும் ஸஹையோமே இக்காசு அறு பத்தஞ்சுக்கு பலிசை செகுத்து இறையிறுக்கக் கடவோ மாகவும் ஸஹை

55 [பே]யாம் இறையிறுக்க இந்நிலம் இத்தேவர் இறையிலி அஷே யமே அநுஷவிக்க பெறுவாராகவும். இந்நிலத்தில் ஷோகம் இஷேவர்க்கு திருவமுதுக்கும் திருவராதனே செய்வாநுக்கும் அ . . . லது ஸஹையோமுக்கு ஆக அவ்வஆண்டுகள் ஸ்ரீகா

56 [ரி]யம் செய்வாரும் இத்ஷேவர் நிலங்களில் இறைநிலஞ்சுட்டி இந்நிலத்தில் போகம் கொள்ள பெறுதோமாக இப்பரிசு இருகால் ஆவதும் முக்கால் ஆவதும் இக்காசு அறுபத்தஞ் சுங் கொண்டு இக்காசுக்கும் பலிசை செகுத்து இநா

---

* 'ஊரிடுவரி' என்க.

57 . . ம் பாட . . மடக்கிவந்த குறுநிலம் ஒருமா முக்காணிகால் முந்திரிகைக் குழி மூன்றுமா அரைக்காணிக்கு ஸபையோம்மே இறையிறுக்க இந்நிலம் சஷிராதித்தவற் இறையி . . . . விக்க பெறுவாராகவும் பணி பணியால் பணி

58 த்து வ்யமா[ா]ணம் எழுதிக்குடுத்தோம் ஸபையோம் இதில் திறம்பில் பஞ்சாஸனத்தில் முந்பு நில்க்கிலும் நில்லாவிடி லும் இதேவர் கன்மிகளே தாங்கள் வேண்டுகளத்தில் தாங் கள் வேண்டும் பொந்மந்றயறுப்பித்து

59 இந்நிலம் இதேவர் அதேயமே அநுபவிக்க பெறுவாராக இப்பரிசு பணிப்பணியால் பணித்து சஞ்ராதித்தவற் அதேயம் செய்து வ்யமாணம் எழுதிக் குடுத்தோம் ஸ்ரீகுடித்திட்டை இநி தெழுந்தருளி இருந்த பரமஸ்வாமிக்கு மூலபரித்த்ய

60 நாந வணூஸ்ர தேவர்க்கு வேம்பற்றூராகிய ஸ்ரீ சோழ மார்த் தாண்ட சதுர்வேதி மங்கலத்து ஊமாஸபையோம் இப்பரிசு ஸபையி . . . இருந்த வ்யமாணம் எழுதிப்பணித்தார் ஸ்ரீ அரு மொழி தேவச் சோமணலூர் நாயந் கேசுவநும் ஜ

61 னநாதச் சேரி குண்டூர் எஞ்ஞ உருத்திரநாராயண க்ரமவித்தநும் நித்தவிநோதச் சேரி சந்நக்குடி விஷ்ணுதாஸ க்ரமவித்தநும் [ரா]ஜகேஸரிச்சேரி அள . . . இளைய ஸ்ரீ வாஸுதேவ க்ரம வித்தநும் நிகரிலிச் சோழச்சேரி குரவசி தி

62 ருவிசலூர் அடிகள் க்ரமவித்தநும் அழகிய சோழச்சேரி இருங் கணடிகளசய க்ரமவித்தநும் சிங்களாந்தகச் சேரி அளைப் புறத்த அக்கி சே[ா]ம க்ரமவித்தநும் குஞ்ஜரவச்சேரி இழக் காதிரத்து ஸ்ரீ வாஸுதேவ க்ரம

63 வித்தநும் சோழ குலசுந்தரச்சேரி மாவண்டூர் அத்தொண் ஷம ஆரியப்பட்ட சோமாசியார் மகந் உதைய திவாகர க்ரமவித்த நும் [சாராய] மாத்தாண்டச்சேரி வேலவட்டி சிங்கப்பிராந் பட்டநும் ராஜராஜச்சேரி மாங்களூர் அ

64 ணழுஞ்சிக்ரமவித்தநும் பணியால் இவ்யமாணம் எழுதிநேந் இவ் வூரடிகள் கமஸ்யஸ்தந் ஸ்ரீ மாதவந் வீரகோசத்தாந் ஆகிய எண்ணுயிரவநேந் இவை[எந்]நெழுத்து இப்படி அறிவேந் இவ்வூர் வைகானஸன் மௌத

65 மந் கேசுவந் தாமோதிர பட்டநேந் இவை எந்நெழுத்து இப் பரிசு பணியால் மய்யஸ்தந் சீரிளங்கோவிநேந் எழுத்து இப்படி அறிவேந் இவ்வூர் கடி . . நம்பந் சுந்திரநான ஏழாயிரத்து ஐஞ்ஞூற்றுவநேந் இனை

66 வ எந் எழுத்து இ[ப்]*டி பணியால் ஈயூஷூந் சிவபாதசேகரந்
உதைய திவாகரநேந் இவைஎந் எழுத்து இப்படி அறிவேன்
இவ்வூர் வேள்கோவந் தாமோதிரந் திருவிசலூர் அடிகளேந்
இப்படி அறிவேந் சுன்னங்குடியாந் கேசுவந் திட்டை

67 டயேந் இப்படி அறிவேந் இவ்வூர் வைவானவந் மௌதமந்
சீமாதவந் தாமோதிர பட்டநேந் இப்படி அறிவேந் இவூர்
சிவஞாணந் சந்நரேவித்த்யநேந் இப்படி அறிவேன் இப்
பதி வாழ் வெள்ளாளந் எந்தை [பியர்] மாதேவந் எம்பிராந்

68 முந்தையா . . . . . . . . . . நற்தகை நெடுமாதங்கிய் சீர் அப்
பிரமையநேந் நெந்பேந் :–

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 9-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1021 |
| ஊர் : | திருக்களித்திட்டை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 293 of 1908 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில்-கருவறை வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வேம்பற்றூரான சோழமார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலத்து சபையார், கோயி லிடம் (சண்டேஸ்வர தேவரிடம்) 85 காசுகளுக்கு ஒரு நிலத்தினை ஒற்றி வைக் கின்றனர். அந்நிலத்தால் வரும் போகத்தால் கோயிலில் திருவமுதும், திருவா ராதனையும் செய்தல் வேண்டும். அதோடு, 85 காசுகளுக்குத் தரவேண்டிய வட் டிக்குப் பதிலாக (பணமாகக் கொடுக்காமல்) அந்நிலத்திற்குரிய அனைத்து வரிகளை யும், சபையாரே கட்டிவிடுதல் வேண்டும். நிலத்தின் அளவு, எல்லைகளும், இசைவுத் தீட்டு எழுதிய, எழுதுவித்த, சாட்சியிட்டோர் கையொப்பங்களும் உள்ளன.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தை
2 தயும் போற்செயப்பாவையும் சீர்தனிச்செல்வி
3 யுந் தந் பெருந்தேவியராகி இன்புற நெடுதுயில் ஊழி
4 யுள் இடைதுறைநாடும் துடர்வனவேலிப் படர்வன
5 வாசியும் கள்ளிச்சூழ்மதிள் கொள்ளிப் பாக்கை
6 யும் நண்ணற்கருமுரண் மண்ணைக் கடக்கமும்
7 பொருகடல் ஈழத்தரைசர் தமுடியும் ஆங்கவற் றே
8 தவிய ரோங்கெழில் முடியும் முன்னவன் பக்கல் தென்
9 னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரனாரமும் தெண்டிரைப்பொ
10 ருகடல் ஈழமண்டலமுழுவதும் எறிபடைக் கேரளந் முறைமயில்

11 சூடும் குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையும்

12 சங்கதிர் வேலைத்தொல்பெருங்காவல் பல்பழந்தீவும் செருவில்

13 சினவில் இருபத்தோர்கால் அரைசு களைகட்ட பரசுராமன் மேவ

14 மஞ்[சாந்திமற்றீவரண் கருதி இருத்திய] செம்பொற்றிருத்தகு
முடியும் ப

15 யங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சியசிங்கந்
அளப்பெரும் [புக]

16 ழொடு பிடியல் இரட்டபாடி ஏழரை இலக்கமும் நவநெதிகுலப்
பெருமலை

17 களும் மாப்பொருதண்டாற் கொண்ட கோப்பரகேஸரி
வன்மரான ஸ்ரீராஜேந்த்ர செ[சா]

18 ளதேவற்கு யாண்டு ஒந்பதாவது [வடகரை] இராஜேந்திர சிங்க
வளநாட்டு மண்ணிநாட்டு

19 ப்ரஹ்மதேயம் வேம்பற்றூரான [ஸ்ரீசோழ]மாத்தாண்ட சதுர்வேதி
மங்கலத்து ஸ

20 பையோம் இய்யாட்டை யநு நாயற்று நாயற்றுக்கிழமை
பெற்ற உத்திரட்

21 டாதிநாள் . . லமண்டபத்தே யஜிசெய்து கூட்டக்குறைவறக்கூடி
இருந்து

22 பணிப்பணியால் பணித்து நம்மூர் ஸ்ரீகுடித்திட்டை இநிதெழுந்
தருளி இருந்த ப

23 ரமஸ்வாமிக்கு மூலபரத்யரான சண்டேஸ்வரதேவர் பக்கல் ஸபை
யோம் கொண்ட காசு இவ்

24 வூர்க்காக உடையார் ஸ்ரீராஜராஜ ஈஸ்வரம் உடையார்க்கு . . ஸ்ரீ
பண்டாரம் செயப்போகின்ற

25 ஸ்ரீஜனநாயச்சேரி [இராயிரவர்] தர்மக்ரமவித்தனுக்கு . . பலம்
குடுத்த கா

26 சு அறுபதும் இத்தேவர்கே திருப்பரிசாரகம் செய்கிந்ற ந . .
டாப்பள்ளி ஸ்ரீயக்ர

27 வித்தந் மகன் ஸ்ரீராம க்ரமவித்தனுக்கும் இருங்[க]ண்டி விஷ்ணு
க்ரமவித்தந் மகந்

28 . . . கரநாராயண க்ரமவித்தனுக்கும் வாரபலங் குடுக்கக்
கொண்டு குடுத்த காசு இருபத்தை

29 ஞ்சும் ஆக கொண்ட காசு எண்பத்தைஞ்சு எண்பத்தைஞ்சுங் கொண்டு இஸ்ரீகுடித்திட்

30 [டை]தேவர் நிலம் இவ்வூர்க் கீழ்ப்பிடாகை ஸாஸூதி[வ]திக்குக் கிழக்கு அருமொழிதேவ வாய்க்காலு

31 க்கு வடக்கு இரண்டாங்கண்ணாற்று இரண்டாஞ்சதிரத்து இத் தேவர்க்கு முந்பு . . .

32 யன செய்த நிலம் பழம்படி நிலம் அரைக்கால் நீக்கி இதநோடு மடையக்க . . .

33 க்கு பழம்படி நிலன் நான்கு மாகாணி நிலமும் இதினுல் உல களந்தருளி எறிவ . .

34 மரை நிலம் ஒருமா முக்காணி அரைக்காணி அரைமுந்திரிகை குழி அரையே இருமா

35 வரையும் ஆக நிலம் அறுமா அரைக்காணி அரைமுந்திரிகைக் குழி அரையே இருமா

36 வரையினல் மூன்றூரமடக்கி வந்த குறுநிலம் இரண்டுமாக் காணி முக்கால் மு

37 ந்திரிகைக்குழி ஒந்றே எட்டும் அரைக்காணியால் இய்யாட்டை யநு ஞயறு மு

38 தல் இந்நிலத்தால் வஜ இறை வாசலில்ப் போந்த குடிமை இறை விக்ரய

39 த்துக்கும் பஞ்சவாரத்துக்கும் பயறு துவரைக்கும் மற்றும் எப் பேர்ப்பட்ட ஊ

40 ரிடுவரியும் சேரி ஈவும் குலையும் குரம்பும் உள்ளிட்ட வெட்டி வேதினையும் ஸ

41 பையோமே இக்காசு எண்பத்தை

42 ஞ்சுக்கும் பலிசை செகுத்து இறையி

43 றுக்கக் கடவோமாகவும் ஸபையோம் இ

44 றைபிறுக்க இந்நிலம் அசேயமே இறை

45 யிலி அசையமே அநுபவிக்கப் பெறுவாராகவும்

46 [இ]ந்நிலத்தில் ஹோமம் இதேவர்க்கு தி

47 ருமெமிதுக்கும் திருவாராதினை செய்வாநுக்கு

48 ம் அல்லது ஸபையோமும் ஸபையே

49 ாமுக்காக அவ்வாண்டுகள் ஸ்ரீகார்யஞ் செய்வாரும் இந்நில

50 ம் இதேவர் நிலங்களில் இறை நிலம் கட்டி இந்நிலத்தி

51 ல் ஹோமம் கொள்ளப் பெருதோமாக இப்பரிசு இருகாலாவ

52 தும் முக்காலாவதும் இக்காசு எண்பத்தைஞ்சும் கொண்டு இக் காசு

53 க்கு பலிசை செகுத்து இந்நிலம் பரப்பு வடக்க வந்தநும் . . . இரண்டு

54 மாக்காணி முக்கால் முந்திரிகைக்குழி ஒந்றே எட்டுமாவரைக் காணிக்கும் ஸ

55 ஸபையோமே இறையிறுக்க இந்நிலம் சந்த்ராதித்யவல் இறையிலி அநு

56 ஷிக்க க . . . . இப்பரிசு பணிப்பணியால் பணித்து ப்ரமாணம் எ

57 ழுதிக்குடுத்தோம் [ஸபை]யோம் இன்நிலத்துக்குக் கிழ்பாற் கெல்லை இத்தேவர் நி

58 லத்துக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை கண்ணுற்றுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை இ

59 த்தேவர்க்கு முன்பு அ[ஃ]யம் செய்து குடுத்த நிலத்துக்கு கிழக் கும் வடபாற்கெல்லை கண்

60 ணுற்றுக்கு தெற்க்கும் ஆக இவி[ை]*சத்த பெருநான்கெல்லை யிலும் நடுவுபட்ட நிலம்

61 பழம்படி நிலம் ஞநா[ன்]*கு மாக்காணியும் இதி . . ல் உல களந்தேறி மிக்கு[வன்த]மிகை நிலம்

62 ஒருமாக்காணி அரைக்காணி அரைமுந்திரிகையும் . . . . . ஒரு மாவரையுமாக நிலம் அறுமாவ

63 ரைக்காணி அரைமுந்திரிகையும் குழி அரையே ஒருமா . . . முதற்தரம் மடக்கி வஜ[குறு]

64 குறுநிலம் இரண்டு மாக்காணி முக்கால் முஷிரிகை . . . ஒன் . . . . . அரைக்காணியால் வந்த

65 இறை எப்பேர்ப்பட்டதும் ஸபையோம் கொண்[டு] இஎண்பத் தைஞ்சு காசுக்கும் பலிசைசெகுத்து

66 இவ்வாட்டை யநு ஞயற்று நாயற்றுக் கிழமை பெற்ற உத்தி ராட முதல் ஸபையோமே எப்பேர்ப்ப

67 [ட்]ட வரிகளும் இறுக்க இன்நிலம் இத்தேவர்க்கு இறையிலி சந்த்ராதித்யவல் அக்ஷயம் இறையிலி சந்த்ரா

68 தித்யவல் அனுபவிக்க பெறுவாராகவும் இதற்றி றம்பிற் யஜ்ஞாஸன[த்து] முன்பு நிற்க்கிலும்

69 . . . . . . தேவர் கன்மி[களே தாங்கள்] வேண்டு களத்து . . .

70 . . பொன்மந்றி இறுப்பித்தும் இந்நிலம் அக்ஷயமே அநுப விக்க[ப்(பெ)]றுவாராக இ

71 பரிசு பணிப்பணியால் பணித்து அக்ஷயம் செய்து ப்ரமாணம் எழுதிக் குடுத்தோம் ஸ்ரீகு

72 டித்திட்டை இனிதெழுந்தருளி இருந்த பரமஸ்வாமிக்கு மூல ஸ்தாநரான விஷ்ணுஸ்வர தேவற்க்கு வேம்

73 பற்றூராகிய ஸ்ரீசோழ மாத்தாண்ட சதுர்வேதி மங்கலத்து மஹாஸபையோம் இப்பரிசு[ஸ]

74 பையிலிருந்து ப்ரமாணம் எழுதப் பணித்தார் ஸ்ரீஅருமொழி தேவச் சேரி ம . . லூர் தாயன்[தே]

75 வநாடும் ஜநஞயச்சேரி பாகஞூர் கேசுவபட்டந் மகன் நாராயண பட்டனும் நித்த விநோத

76 ச்சேரி இராயூர் சொட்டை சங்கரநாராயண க்ரமவித்தநும் இராசகேஸரிச் சேரி ய . .

77 . . ண கோவிந்த பட்டனும் நிகரிலிச் சோழச்சேரி காரம்பிச் செட்டி . . .

78 அழகிய சோழச்சேரி காட்டுக்கு[றி] திருவரங்க . . . க்ரமவித்த னும் சிங்களாந்தகச்

79 சேரி காற்றிறை இளைய நாராயண க்ரமவித்தனும் ஸ்ரீகுந்தவைச் சேரி குஞ்சப்ப . .

80 . . . . . சோழ

81 குலச்சேரி உறுப்புட்டூர் வெண்ணையபட்ட

82 னும் சோழமாத்தாண்டச் சேரி குண்டூர் . . .

83 க வாமன் க்ரமவித்தனும் ராஜராஜசேரி இருங்

84 கண்டி திருவெண்காடபட்டனும் இருங்கண்டி ஸெவு

85 க்ரது க்ரமவித்தனும் பணியால் எழுதினேந்

86 இவ்வூர்க் கடிகை மத்யஸ்தந் ஸ்ரீமாதவ வீரகோசத்திஞயக . . யா

87 நேந் இவை எந்நெழுத்து இப்படி அறிவேந் இவ்வூர் சிவப்ரா
ஹ்மணந் ப[ா]

88 ரதாயந் கூத்தந் சடங்கவியேந் இப்படி அறிவேந் இவ் . . . .
கடிகை மத்யஸ்தந் [கேச]

89 வந் தாமோதிரநேந் இப்படி அறிவேந் இவ்வூர் . . . மௌதம

90 ந் தாமோதிரன் முத . . [தே]வபட்டநேன் இப்படி அறிவே

91 ந் இவ்வூர் வைகானஸந் [மெ]ளதமந் தாமோதிரன் இளைய சீ
மாத

92 வ பட்டநேன் இப்படி ப[ணியா]ல் இவ்வூர் [மத்ய]ஸ்தந் வெண்காட

93 ந் கூத்தாடியாந திரிபுவந மாதேவி பெ . . வதியெந் இப்படி

94 அறிவேந் இவூர் ஸிப்ராஹ்மணன் பார[தா]யன் . . ஐயந் ஸாக்ஷியஷ
நே

95 ன் இப்படி அறிவேன் இவ்வூர் தட்டான் பாற்சன்ஞா மா . .

96 . . . யநேன் இப்படி அறிவேன் இவூர்க்கரணத்தான்

97 வெள்ளாளன் திருமயமுடையான் . . . . ஸாக்ஷியஷநேன்

98 இப்படி அறிவேன் இவூர் மத்யஸ்தன் . . [நா]ராயண கை . .

99 திருவரங்க பிரியனேந் இவை . . . முத்து . இப்படி

100 அறிவேன் இவர் கடிகை மத்யஸ்தன் . . . த்தோன் ஐயனு

101 கிய இரண்டாயிரவநேன் உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 8-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1020 |
| ஊர் : | திருக்களித்திட்டை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 294 of 1908 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதல் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு, மேற்குப் பட்டியிலுள்ளது.

குறிப்புரை : வேம்பற்றூரான சோழமார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர், நிலத்தினை கோயிலில் ஒற்றி வைத்து, அவ்வூர் நடுவில் திருமுற்றத்துக் கீழைச் சேரியில் ஒரு கூத்தாடும் தேவரை (ஆடல் வல்லான்) எழுந்தருளச் செய்யத் தேவையான செலவுகளுக்காக ஐம்பது காசுகளைப் பெற்றுள்ளனர். இந்நிலத்தால் வந்த போகம் கோயிலில் திருவமுதுக்கும் திருவாராதனைக்கும் பயன்படுத்தப்படவேண்டும்; ஐம்பது காசின் வட்டிமூலம், அந்நிலத்திற்கு உரிய வரியினை இறுத்தல் வேண்டும். இதனைக் கூறுகிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநிலமடந்தையும் பொற்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தன்பெருந்தேவியராகி இன்புற நெடுதுயில் ஊழியுள் இடதுறை நாடும் துடர் வனவேலிப் படர்வனவாசியும் சுள்ளி சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கரண்முரண் மண்ணைக்கடக்கமும் பொருகடலீழத்தரசர் தமுடியுமாங்கவர் தேவியர் ரோங் கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவன் வைத்த சுந்தர முடியும் இந்திரனாரமும் தெண்டிரை ஈழமண்டல முழு வதும் எறிபடைக்கேரளன் முறைமையிற் சூடும் குலதன மாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல் பெரு

2 ங்காவல் பல்பழந்தீவும் செருவிற் சினவில் இருபத்தொருகால ரைசு களைகட்ட பரசுரா[மர்] மேவருஞ் சாந்தி மற்றீவரணங் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் மாப்பெரு

ண்டாற்க்கொண்ட கோப்பரகேசரி பந்மரான ஸ்ரீ ராஜே
ந்த்ரசோழ தேவற்கு யாண்டு அ ஆவது இராஜேந்த்ர ஸிம்ஹ
வளநாட்டு மண்ணிநாட்டு ப்ரஹ்மதேயம் வேம்பற்றூரான
ஸ்ரீசோழ மாத்தாண்ட சதுர்வேதி மங்கலத்து ஸபாஸ[ஸை]
யோம் இவ்வாட்டை கும்ப நாயற்று வியாழக்கிழமை
பெற்ற ம . . . நான்று பகல் நம்மூர் மண்டபத்தேய்
கூட்ட குறைவறக்கூடி இருந்து பணிப்பணியால் பணித்து நம்மூர்
ஸ்ரீ குடித்திட்டை இறிதெழுந்தருளி இருந்த பரமஸ்வாமிக்கு மூல
ஸ்தாநரான வஜ்ஞபுஷ்ப தேவ[ரிடை] இஸ்ஸபையோம் எங்கள்
கீழைச்சேரி [சாகநாந] நடுவில் திருமுற்றத்து கு . . ரை
எ பூந்நளுவித்து வருகின்ற [தெநவ] கீழைச்சேரிப் பெரு
மக்கள் ஆடவல்லாரை எ

3 பூஜருளுவிப்பதற்க்கு விசத்துக்காக கொண்ட காசு ஐம்பது
இக்காசு ஐம்பதும் இவர் பக்கல் ஸபையோம் கொண்டு
On stray stones built into the south wall of the first prakara of the Varadarajapperumal temple-27th-Tamil. Fragmentary. Relates to a gift of land and gives the detailed boundaries of it.

வரதராஜப் பெருமாள் கோயிலின் முதற் பிரகாரத்தில் தனித்தனியாக வைத்துக் கட்டப்பட்டுள்ள கற்களிலுள்ளது. 27—ஆம் ஆண்டு—தமிழ்—சிதைந்துள்ளது. நிலக்கொடை பற்றியும், அந்நிலத்தின் எல்லைகளை விரிவாகவும் கூறும் கல்வெட்டாகும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1123 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 617 of 1909 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறி உடையார்) கோயில் மகாமண்டபம் வடக்குச் சுவர், பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : திருவிசலூர் பட்டப் பெருமக்கள் உள்ளிட்ட மகாசபைப் பெருமக்கள், இக் கோயிலில் எழுந்தருளியுள்ள பள்ளியறை நாச்சியாற்கு இறையிலியாக நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. தனித்தனியாக மூன்று இடங்களில், இவ்வூர் இறைவன் செந்நெறியுடையார் பெயரில் நிலம் வாங்கியுள்ளனர். அந்த மொத்த நிலம் இரண்டரையே ஒருமாவினையும், இருநூற்று நாற்பத்தெட்டுக் காசுகளுக்கு வாங்கி இறையிலியாக்கியிருக்கின்றனர். மற்றொரு நிலம், நாற்பத்தேழரைக் காசுகளுக்கு வாங்கி அளிக்கப்பட்டு இருக்கின்றது. அச்செய்தியும் இறுதியில் கூறப் பட்டுள்ளது. அனைத்து நிலங்களுக்கும் எல்லைகளும் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு வரியிலும் இறுதி சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு அஞ்சாவது பிரம்மதேயம் திருவிசலூர் பட்டப்பெருமக்களுள்ளிட்ட மஹாஸபையோம் இந்நாட்டுத் திரு . . .

2 மங்கலத்து உடையார் திருச்செந்நெறி உடையார் கோயிலுக்குத் திருப்பள்ளியறை நாச்சியாற்கு திருச்செற்றத்து . . . இறை யிலி [செய்து குடுத்த] நிலமாவது இ . . .

3 கு அருமொழிதேவ வாய்க்காலுக்கு தெற்கும் உலோச்சந் அனந்த நாராயணனு[ம் கி]ளிநல்லூர் சலகபத்தியனை . . .

4 தேவனும் நிலத்துக்கு மேர்க்கு ராஜராஜ வாய்க்காலுக்கு வடக்கு மாக இவ்விசைந்த பெருநான்கெல்லை நி . . .

5 லம் கவணியந் பொந்மலை மாதேவ பட்டனும் பாலாசிரியந் சீதரந் மாதவனும் பாலாசிரியந் பத்தபட் . .

6 லோச்சந ஸாதவேதந் உமை உலோச்சந் ஜாதவேதந் குமரனும் சீரிளங்கோச்சாலிச் . . . .

7 ட்டாருமாக இவ்வனைவர் பக்கலும் இத்[திருச்]செந்நெறியுடையார் திருநாமத்தால் விலைகொண்டு . . . .

8 ம்மாயிருந்த் நிலம் இரண்டே ஒருபதிந்மாவரை இந்நிலம் இரண்டே ஒந்பதுமாவரையும் இந்நிலத்தை யி

9 றையிலி செய்து குடுத்த மனை நிலமாவது வடக்கிறுசேரி நத்தத்தில் கிழக்கடைய பொந்மலை மாதேவனு . . .

10 திருவரங்கநாராயணனும் மாடலந் சீகாரிமாறந் [ஆதி]யுமுள்ளிட்டார் பக்கலே இத்தேவர் திருநாமத்தால் விலைகொண்[ட] . .

11 நத்த நிலத்துக்கு கீழ்பார்க்கெல்லை புதுவூர் வதிக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை [க]வுணியந் பொந்மலை மாதவனு . . .

12 . . யாத திருவரங்க நாராயணனும் உள்ளிட்டார் விளை நிலத்துக்கு வடக்கும் மேல்பார்க்கெல்லை மேற்படியான் . .

13 . . . . க்கும் வடபாற்கெல்லை நெந் . . . [கணபதி] நிலத் . . சிரியத்தாழ்வார் இறையிலி நிலத்துக்கும் . . .

14 நிலத்துக்கும் தெற்கும் ஆக இவ்விசைந்த பெருநாந்கெல்லையுள் நடுவுபட்ட கொல்லை நிலம் ஒருமாவரை ஆக நி

15 லம் இரண்டரையே ஒருமா இந்நில மிரண்டரையே ஒருமாவும் அதூாஜித்தவற் ஸாஷூதிகமாக இறையிலி செய்து குடு[த்து] செ

16 ந்நெறியுடையார் சீபண்டாரத்து தேவகந்மிகள் உள்ளிட்டார் கைவழி கொண்ட காசு இருநூற்று நாற்பத்தெட்டும் கைச் செ . . . . . .

17 இந் நிலமிரண்டரையே ஒரு மாவும் இறையிலி செய்து குடுத்தோம் விசலூர் ஊரைஸபையோம் இந்நம் இவ்வூர் மஹாஸ . . . . .

18 நாயநாற்கு இறையிலி செய்து குடுத்த விளைநிலமாவது புதுவூர் வதிக்குக் கிழக்கு ராஜராஜ வாய்க்காலுக்கு வடக்கு நாங் . . . .

19 குடுத்த விளைநிலத்துக்கு கீழ்பார்க்கெல்லை விசலூர் சீபத்தப் பிரியத்தாழ்வார் இறையிலி விளை நிலத்துக்கு மேற்கு . . .

20 [ராஜராஜ] வாய்காலுக்கு வடக்கும் மேல்பாக்கெல்லை . . . இந்நாச்சியாற்கு . . . செந்ந . . ப்பு . . . . ங்கள்

21 றக் கிழக்கும் வடபார்க் கெல்லை அருமொழி தேவவாய்காலுக்கு தெற்கும் ஆக இசைந்த பெருநாந்கெல் . .

22 நாமத்திலே [கி]ளிநல்லூர் சாலாபத்தியந் சேந்தபாரந் ஸ்ரீ வாஸுதேவ பட்டந் பக்கலும் பாலாசிரியந் அனந்த நாரா யணந் . . .

23 னந்த நாராயணந் விலைகொண்டு இத்தேவற்கு ஸொம்மாயிருந்த விளை நிலம் ஒந்பதிந்மாவரை இந்நி

24 . . . கு இறையிலியாக சந்த்ராதித்தவற் ஸாஸ்வதிகமாக இறையிலி செய்து இந்நாயநார் ஸ்ரீபண்டாரத்து தேவகந்மிகள் . . . .

25 . . . பத்தேழரை இக்காசு நாற்பத்தேழரையுங் கொண்டு இந் நிலம் ஒருபதிந்மாவரையும் சந்த்ராதித்தவற் ஸாஸ்வதிகமாக இறை . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1122 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 618 of 1909 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில்-மகாமண்டபத்தின் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : சாரபரமேஸ்வரர் (திருச்செந்நெறியுடையார்) கோயிலுக்கு மூன்றுமா நிலத்தினை ஏழு கழஞ்சரைப் பொன்னுக்கு வாங்கிக்கொண்டு, அதனை இறையிலி நிலமாக்கியதைக் குறிக்கிறது. இவ்வூர் மகாசபைப் பெருமக்கள் இதனை எழுதி அளித்துள்ளனர். கங்கைகொண்ட சோழ விண்ணகராழ்வார் என்ற ஒரு வைணவக் கோயிலின் இறைவன் பெயர் இதில் இடம்பெறுகின்றது.

**கல்வெட்டு :**

1 திரிபுவநச் சக்ரவத்திகள்
2 ஸ்ரீ விக்கிரம சோழ தே
3 வற்கு யாண்டு ச ஆ[வ]து [ஸ்ரீ]
4 ஹூதேயம் [விசலூர்] மஹா
5 ஸபையோம் . . . .
6 . . . . யார் திருச்செந்[நெறி]உடைய
7 ரார் ஊர்கீழிறையிலி [கு]டுத்த நில
8 வது . . . கழ் . . . . . . ல் வெள்ள
9 . . . . . ய்க்காலுக்
10 கும் மேற்குத் தெந்பாற்கெல்லை கங்
11 கைகொண்ட சோழ விண்ணகராழ்
12 வாரிறையிலி நிலத்துக்கும் . . . .
13 ஸ்ரீகரஜ்ஞந் திருவாய்குலமுடை

14 யார் நிலத்துக்கு வடக்கும் மேல்
15 பாற்கெல்லை உலோச்சந் மந்ந ந
16 த்த நிலத்துக்கு கிழக்கும் வடபாற்
17 கெல்லை ராஜராஜ வாய்க்காலுக்கு [தெ]
18 ற்கும் ஆக இசைந்த பெருநாந்கெல்லையுள்
19 நடுவுபட்ட நிலம் ஙுப இந்நி
20 ல மூன்றுமாவும் இந்நாயநாற்கு அந்த்ராழி
21 த்தவற் ஸாஸ்வதீகமாக இறையிலி செய்து
22 குடுத்[துக்கொ]காண்ட பொந் ஏழுகழஞ்சரை இப்பொ
23 ந் ஏழுகழஞ்சரையுங் கொண்டு இந்நில மூன்றுமாவும்
24 இறையிலி செய்து குடுத்தோம் இவ்விசலூர் மஹா
25 ஸபையோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1123 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 619 of 1909 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில்-மகாமண்டபத்தின் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருவிசலூர்க் கோயில் பட்டப் பெருமக்கள் உள்ளிட்ட மகாசபையினர், திருச் செந்நெறி உடையாற்கு இறையிலியாக நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1 த்ரிபுவநச்சக்ரவத்திக
2 ள் ஸ்ரீ விக்கிரம சோழ
3 தேவற்கு யாண்டு அ
4 ஞ்சாவது ப்ரஹ்மதேய
5 விசலூர்ப் பட்டப்பெரு
6 மக்கள் உள்ளிட்ட மஹாஸ
7 பையோம் திருச்செந்நெறி உடை
8 யாற்கு நாங்க[ள் இறை]யிலி செய்து கு
9 டுத்த நிலமா . . க்கு மே
10 மற்கு அருமொ . . . னுக்கு
11 வடக்கு நாங் . . யது . .
12 குடுத்த நில . . . கெல்
13 ஊல இந்ந . . . றையி
14 லி விளை நிலத்துக்கு மே

15 ற்கு[ம்] தெந்[பாற்]கெல்லை [அருமொழி]
16 தேவவாய் . . . .
17 . . லபார் . . பத்தப்பிரியத்த .
18 . . . . . லத்துக்குக் . .
19 . . . . ஜனஞத
20 . . . . கும் ஆக இவ்வி
21 . . . யுள் நடுவு
22 பட . . ளரி உய்யவந்தாள் திரு
23 செந்நெறியுடையார் கோயிற் . .
24 ல வீதிவிடங்கந் கருவுணுயகஞன
25 பிள்ளையடியாந் பேரில் குடிவி
26 லையால் முந் . . கொள்வித்து இவர்க்கு
27 மனையுட்பட விளைநிலம் அரையும்
28 பொத்தகப் படி மிகுதிக்குறைவுள்ளடங்க சந்த்ரா
29 தித்தவற் ஸாஸ்வதிகமாக இறையிலி செய்து குடு
30 த்து இப்பிள்ளையடியார் கைவழி கொண்ட கா
31 . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 47-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1117 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 620 of 1909 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | -- |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில் மகாமண்டபம் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர் செந்நெறியுடையார் கோயிலுக்கு ஒன்றே காணி அரைக்காணி நிலத்தினை ஐம்பத்தொரு காசுகளுக்கு விற்றுக் கொடுத்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டு இது. தம்மிடம் உள்ள நிலத்திற்குக் கட்டவேண்டிய வரிகளைக் கட்ட இயலாத நிலையில், அந்நிலத்தில் பணி செய்யும் மக்களில் வாங்கும் சக்தியுடையோருக்கு விற்றுவிடும்படி அரசு ஆணை பெறப்பட்ட நிலையில், இவ்விலையாவணம் எழுதப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1 திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு சமஎ ஆவது இஷபநாயற்று அபரபக்ஷத்து தசமி யும் புதந் கிழமையும் பெற்ற சதையத்திநாள் குலோத்து [ங்க]

2 சோழவள நாட்டுச் செற்றூற் கூற்றத்து ப்ரஹ்மதேயம் ஸ்ரீவான வந் மா[தே]தவிச் சதுவேதி [ம]ங்கலத்துப் பட்டப் பெரு மக்களுள்ளிட்ட மஹாஸபையோம் இவ்வூர் திருநாராயண

3 விண்ணகராழ்வார் கோயிலிலே கூட்டங்குறைவறக் கூடியிருந்து எங்களுக்கு இறை கடிதாயுடனுள்ளது நேராகக் குடுத்து எங்களாற் தே . . றுக்கலாவது மிறுத்து . . பிந்பிறுக

4 வுடலில்லாமையினும் இந்நாளில் குடிமக்களாய் நிலை நின்று கடமையி[று]த்தார் நிலங்கள் கொள்வாற்கு விற்றுக் காசொடுக்குக வெந்று ஒ[லா]தஞ் செய்தருளின திருமுகம் வந்தமை

5 [யி]ல் முந்நிந்று கடமையிற் . . . . பொன் மாடிலந் ஸ்ரீகூரஜ்ஞ பட்டனும் க[வு]ணியந் தண்ணானூர் நம்பிபட்டனும் உள் ளிட்டாரும் முந்பே ஸ . . ப்பொ . . நிலமுமாக

6 இந்நா . . . . ராஜஸுந்தரிச் சதுர்வேதி மங்கலத்து உடை யார் திருச்செந்நெறியுடையாற்கு விற்றுக்குடுத்த நிலமாவது இவ்நாலாங்கண்டத்து இந்நிலத்துக்குக்

7 கீழ்பார்க்கெல்லை . . திருச் . . . டத்தாழ்வாருதான இறையிலி நிலத் . . . நிலத்துக்கும் ஸ்ரீ கூரஜ்ஞபட் . . த்துக்கும் பட் டைப் பிடாரி கோயிலி

8 நிந்றும் வடக்கு நோக்கிப் போந்த வொழுக்கைக்கு மேற்கும் தெந்பார்க்கெ[ல்லை] . . . க்கும் . . . திருப்பனங்காடுடைய மஹா . . நிறையிலி நிலத்துக்கு வடக்கும் மேல்பார்

9 க் கெல்லை மழவசேரி வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபார்க் கெல்லை குலோத்துங்க சோழ நல்லூருக்கு நீர்ப்பாய்க்கா லின் வாய்க்காலுக்கு . . ற்கும் ஆக இவ்விசைந்த பெரு நாந்கெல்லையு

10 ள் நடுவுபட்டு எங்களுக்கு ஸொம்மாயிருந்த நிலம் ஒந்றே காணியரைக்காணியும் இந்நாயனார் திருநாமத்தே விற்றுக் குடுத்து இந்நாய . . கோயிலில் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி வீதி வி

11 டங்கந் கருவுணாயகனாந பிள்ளையடியாரும் தேவகந்மிகளும் கைவழி குடி விலையாக ஸம்மதித்துக்கொண்டு அந்றாடு நற்காசு ௫[௰௧] இக்காசு . . . சு . . ஆவணக்களியே காட் டேற்றி கைச்

12 செலவறக் கொண்டு இந்நிலம் விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம் இத்திருச்செந்நெறியுடைய மஹாதேவற்கு சந்த்ராதித்தவற் [வாந]வந் [மா]தேவிச் சதுர்வேதி மங் கலத்துப் பட்ட

13 ப் பெருமக்களுள்ளிட்ட மஹாஸபையோம் இந்நிலமொந்றே காணியரைக் காணிக்கும் நாங்களிறையிலி செய்து குடுத்து இந்நாய[னார்]* தே[தவ]கந்மிகள் கைவழிக் கைக்கொண்ட காசு

14 ௫௰௧ இக்காசு ஐம்பத்தொந்று காட்டேற்றிக் கைச் செலவறக் கொண்டு [இத்]திருச்செந்நெறியுடைய மஹாதேவற்கு சந்த்ரா தித்த . . . . இந்நிலம் ஒந்றே காணியரைக்கா . . .

15 [ணி]யும் இறையிலி செய்து குடுத்து இக்காசு ஐம்பத்தொந்றுங் கொண்டோம் இவ்வூர் . . .

த. நா. தொ. ஆய்வுத்துறை    தொடர் எண் : 108 / 1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 9-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1127 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 620 of 1909* |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறி உடையார்) கோயில் மகாமண்டபத்து வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வானவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலத்து நம்பிகள் உள்ளிட்ட மகாசபையினர் விளைநிலம் மூன்றுமாக்காணி அரைக்காணியினையும், கொல்லைநிலம் ஒருமா முக்காணியினையும், செந்நெறியுடையார் கோயிலுக்கு, பதின்மூன்றே முக்கால் காசுகளுக்கு விற்று விலையோலை எழுதிக்கொடுத்துள்ளதை இக்கல்வெட்டில்காண்கிறோம்.

கல்வெட்டு :

1 திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு [யா]ண்டு ஒந்பதாவது ஸிங்[க]நாயற்று அபர பக்ஷத்து பஞ்சமி[யு]ந் திங்கட்கிழமையும் பெற்ற . ஷுதி நாள் குலோத்துங்க சோழவளநாட்டு திருச்செற்றுற் கூ

2 ற்றத்து ப்ரஹ்மதேயம் வானவன் மாதேவிச் சதுவே[தி ம]ங்கலத்து நம்பிமாருள்ளிட்ட மஹாஸபைப் பெருங்குறிப் பெருமக்களோம் நிலவிலைய[ாவ]ண மிந்நாட்டு ப்ரஹ்மதேயம் ராஜாதித்தச் ச[துர்வேதி மங்க]

3 லத்து உடையார் திருச்செந்நெறியுடைய மஹாதேவர் கோயிலில் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண்காணிப்பிள்ளையடியாற்கும் தேவகந்மிகளுக்கும் நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவது எங்களூர் . .

---

* 620 of 1909–இல் இரு கல்வெட்டுக்களின் குறிப்புகள் ஒன்றாக உள்ளன. அவை இங்குத் தனித்தனிக் கல்வெட்டுக்களாக (ஊ. க. எண். 4, 5)ப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

4 த்து விற்றுக் குடுத்த நிலத்துக்கு கீழ்பார்க்கெ[ல்]லை பட்டைப் பிடாரி நங்கை கோயிலிநிந்றும் வடக்கு நோக்கிப் போகிற ஊரொழுக்கைக்கு மேற்கும் தெந்பார்க்கெல்லை இத்திரு . .

5 ர் தேவர் இறையிலி நிலத்துக்கு வடக்கும் மேபார்க்கெல்லை இந் நாயநாரிறையிலி விளை நிலத்துக்குக் கிழக்கும் [வட]பார்க் கெல்லை குலோத்துங்க சோழநல்லூர்க்கு நீர் பாய்க்க . . .

6 இவ்விசைந்த பெருநாந்கெல்லையுள் நடு[வு]பட்ட இப்பரிவத்தனை யால் ஸபையோம் . . யிருந்த விளை . . . ந்று மாக்காணி யரைக்காணி [இ]ந்நிலம் மாக்காணியரைக்காணி . . . இதந் தெ . . .

7 விலையாவணஞ் செய்து குடுத்தோம் இவ்வானவந் மாதேவிச் சதுவே-தி மங்கலத்து நம்பிமாருள்ளிட்ட மஹாஸபையோம் [பெ]ருங்குறிப் பெருமக்களோம் இவ்விளை நிலம் மூந்றுமாக்

8 காணியரைக்காணியும் கொல்லை நிலமொருமாமுக்காணியும் இத் திருச்செந்நெறியுடையார் திருநாமத்திலே இறையிலி செய்து குடுத்து வாநவந் மாதேவிச் சதுவே-தி மங்கலத்து நம்பிமா ருள்ளி

9 ட்ட மஹாஸபைப் பெருங்குறிப் பெருமக்களோம் இவ்விளை நிலம் மூந்று மாக்காணியரைக்காணியும் கொல்லை நிலமொருமா முக்காணியும் இத்திருச்செந்நெறியுடையார் திருநாமத்தில் இறையிலி செய்து குடுத்து இவ்வானவன் மாதேவிச்

10 சதுவே-தி மங்கலத்து நம்பிமாருள்ளிட்ட மஹாஸபைப் பெருங் குறி மக்களோம் இத்தேவர் தேவகன்மிகளும் ஸ்ரீ மாஹேஸ்வர கண்காணிப்பிள்ளையடியாருங் கைவழிகொண்ட காசு ... இக்காசு பதிந்மூந்றேகாலும் [ஆ]வணக்களியே காட்டேற்றிக் கைச்செலவறக்

11 கொண்டு சந்திராதித்தவற் ஸர்வமானியமாக இறையிலி செய்து குடுத் தோம் நம்பிப் பெருமக்களுள்ளிட்ட மஹாஸபையோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில் மகாமண்டபம் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கம் இல்லை. வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையினர் எழுதிக் கொடுத்த நிலைவிலையாவணம் இது. இரண்டே கால் காசுகளுக்கு விற்றுள்ளனர். (இது வரி கட்ட இயலாத நிலையில் எழுதிக்கொடுத்த நிலைவிலையாவணம் போலத் தோன்றுகிறது.)

**கல்வெட்டு**

1 . . . . . .
2 பெற்ற தைய்த் திருநாள் . . . . லத்து . .
3 ஸபையோம் இவ்வூர் திரு . . . நாராயண
4 . . . . காலாவது மிறுத்து . . . . பிந்பிநுக்கு . .
5 தஞ் செய்தருளின திருமுகம் . . . . வந்தமை . . . .
6 ஷ . . . ப்பொந் . . . . . . நிலமுமாக
7 நாலாங் கண்டத்து இந்நிலத்துக்கு . . . .
8 . . . . த்துக்கும் பட்டை பிடாரி கோயிலி
9 றையிலி நிலத்துக்கு வடக்கும் மேல்பார் . . . .
10 ம் ஆக இவ்விசைந்த பெருநாங்கெல்லையு . . .
11 கோயிலில் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி வீதிவி . . .
12 சும் ஆவணக்களியே காட்டேற்றி கை . . .

13 நவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துப் பட்ட . . .

14 ர் தேவகந்மிகள் கைவழி கொண்ட காசு

15 வதானம் இந்நிலம் ஒன்றே காணியரைக் காணி . . . .

16 யேதயே . . . . ருந்த புந்செய் நில . . .

17 ணியாக விற்றுக் கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் . . . . .

18 ஒருமா முக்காணியும் ஆக விளை நிலமுங் கொல்லையுமான நிலங் காலே யரைக்காணியும் இத்திருச்செந்நெறி மஹாதேவர் திருநாமத்திலெ கா . . . . .

19 ப் பொருளந்நுடு நற்காசு உப இக்காசு இரண்டே காலும் ஆவணக்களியே காட்டேற்றி கைச் செலவறக் கொண்டு இந்நாயநார் . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1123 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 621 of 1909 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரமசோழன் | | |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில்-மகாமண்டப மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : இராஜசுந்தரிச் சதுர்வேதி மங்கலத்துப் பட்டப்பெருமக்கள் உள்ளிட்ட மகாசபையினர், அனைத்து நிலத்திற்கும் நிலவரி கட்ட இயலாது போக, தம்மால் கட்ட முடிந்த நிலங்கள் தவிர பிறவற்றைச் செந்நெறியுடையார் கோயிலுக்கு விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டுச் சுட்டுகிறது.

## கல்வெட்டு

1 . . . சக்ரவத்திகள் ஸ்ரீ விக்கிர[சோழ தேவ]ற்கு யாண்டு ரு ஆவது மிதுந நாயற்று அபரபக்ஷத்து

2 . . யும் வியாழக்கிழ[மையும்] பெற்[ற] உரோசனி நாள் குலோத்துங்க சோழ வளநாட்டு செற்றூர் கூற்றத் . . . .

3 தேயமாந ஸ்ரீ ராஜஸுந்தரிச் [சது]வே-தி மங்கலத்துப் பட்டப் பெருமக்களுள்ளிட்ட மஹாஸபையோம் . . .

4 ற்றுவரம்பலத்தேய் . . . து கூட்டங் குறைவறக் கூடியிருந்து இயாண்டு நம்மூரொட்டி . .

5 போநமையில் . . . . டுமொ . . . வெல்லாமிறு . . . எங்கு காற் தேடலாவன . .

6 . . மரங்க . . . நாங்கள் குடிவிலை கொள்வாரின்மையாலும் . . . . . . . சிறிது நிலத்து . . . .

7 . . ங் குடுத்து கடமை இறுப்போமென்று இப்பட்டப் பெரு [மக்க]ளுள்ளிட்ட மஹாஸபையோம்

8 . . . . இறையிலி [செய்]து குடுத்த பரிசாவது இவ்வூ[ர்] திருச்செந்நெறியுடைய மஹாதேவர் திருப்பள்ளியறையான . .

9 ந் திருச்செந்நெறிப் புறமாகவும் திருநந்தவனங்களாகவும் . . . . முஞ்சேரியு[டை]யார் கோளரி உலகுய . . . .

10 ன் வாணதி . . மிகள் பக்கல் . . . உலகுய்யவந்த விளாக மெந்நும் பேரால் நாங்களிறை . . .

11 து குடுத்து . . . வதிக்குக் கிழக்கு ராஜேந்த்ரசோழ வாய்க்காலுக்குத் தெற்கு மூந்றா[ங்கண்]

12 ணற்று இரண்டாஞ் சதிரத்து நாங்கள் இறையிலி செய்து குடுக்கிற விளைநிலத்துக்கும் புந்செய் நிலத்து . .

13 . . நிலத்துக்கும் கீழ்பாற்கெல்லை [இ]ந்நாயனுர் நாற்பத்தெண்ணாயிரவந் மடப்புற இறையிலி விளை நி . .

14 . . செய் நிலத்துக்கும் மேற்கும் மேற்பாற்கெல்லை கண்ணாற்றுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை சதிரத்துக்கு . .

15 வடபாற்கெல்லை கண்ணாற்றுக்கு தெற்கும் ஆக இவ்விசைந்த பெருநாந் கெல்லையுள் நடுவுபட்டு இவ்வூரில்

16 . . நாராயண சீராமபட்டனும் க . . ளயந் ஸ்ரீ . . .

17 . . . லை நிலம் . . . . நிலம் க . . . . . க்கும் குடி . . யாக இக்கோயிலில்

18 . . . . வஜ . . ம் ஸஹையா . . க்கல் . . லை . . .

19 . . யும் புந்செய்நிலம் [௨]வரூ வஙுழவதுகு வவம நீர்நிலை நிலம் ழேயு . . ஆநிலவறுவரூ . . .

20 ஆகக் கொல்லையுட்பட நிலம்கவகஙகீழ்ரு . . இந்நிலம் . . ஒந்றே யொந்பதுமா முந்திரிகைக் கீழரையே மாகாணி

21 விலைகொண்டு குடிவிலையிட்ட காசு உ௰சுவஙுச இக்காசுமிருபத்து நாலேயறுமாவரையும் காட்டேற்றிக் கைச்செல . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1075 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற்குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறி உடையார்) கோயில் மகாமண்டபம் தெற்கில் மேற்குப்புற வளைவில் உள்ளது.

குறிப்புரை : இராஜசுந்தரிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபைப் பெருமக்கள், செந்நெறி யுடையார் சித்திரை மாதம் சோதித் திருநாளன்று விழா எழுந்தருளவும், ஆற்றில் சென்று தீர்த்தமாடி அருளுவதற்குமெனக் கொடுத்த நிலக்கொடையினை இக் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

கல்வெட்டு :

1 திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ரு ஆவது இஷப நாய[ற்றுவி]

2 யாழக் கிழமையும் பெற்ற உத்ர[சீரிஷ]த்திநாள் குலோத்துங்க சோழ வளநா . .

3 யம் ராஜஸுந்தரிச் சதுவேதி மங்[கலத்]துப் ப[ட்டப்] பெரு மக்களுள்ளிட்ட மஹா . .

4 நெறியுடையாற்கு சித்தி[ை]ரச் சோதித் திருநாளெழுந்தருளி . . . . ராடணப்பேராற்றி . . .

5 . . . ருளி . . . த்த . . . ளுகைக்குத்தொ . . ற்றாற்று . . னெந்நா

6 ஸாஹஸிகமாகக் காசு கொண் . . றையிலியாகக் குடுத்த . . .

7 த பிராந் வாய்க்காலுக்குத் தெற்கு முதற் கண்டத்து மிரண் டாங் கண்டத்தும் நாங்[க]ளிறையிலி . . . .

8 ற்கெல்லைச் சதிரத்துக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை வேயந் நாராயணந் சங்கர நாராயணபட்டந் . . . .

9 கெல்லை சந்திரந் திருவரங்கதேவநுந் த[ம்]பியுமுள்ளிட்டார் நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல் . .

10 கும் ஆக இவ்விசைந்த பெருநாந் கெல்லையுள் நடுவுபட்டு வேயந்திருச் . . நாராயண . .

11 திருச் செந்நெறியுடையார் சித்திரைச் சோதித் திருநாள் தீத்தம் ப்ரஸாதித்தருள உடையார்

12 . . . . ளியிருக்கத் திருக் . . . .

13 . . . . ஹுமா . . த்ரா . .

14 றையிலியாகத் திருக்கைம்மலரில் நீர்வார்த்து இறையிலி செய்து குடுத் . . . .

15 . . ட்டப் பெருமக்களுள்ளிட்ட மஹாஸபையோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறி உடையார்) கோயில் மகாமண்டபத் தெற்குப் புறத்தில் உள்ளது.

குறிப்புரை : ராஜசுந்தரிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர், செந்நெறியுடையார் கோயிலில் உள்ள உமாமகேஸ்வரருக்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு நிலம் அளித்ததைக் குறிக்கிறது. திரிபுவனமாதேவி வதி, ராஜராஜ வாய்க்கால் ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன. திருமுத்தீசுரமுடையார் என்ற இறைவன் பெயரும் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. கல்வெட்டு முழுவதும் கிடைக்கவில்லை.

**கல்வெட்டு :**

1 த்ரிபுவநச் சக்ரவத்திகள் ஸ்ரீ . . . . .

2 . . . . நான் நூற்றெருபத்து மூன்றினல் க[ற்கட]க நாயற்று அபர பக்ஷத்து நவமியும் வெள் . .

3 குலோத்துங்க சோழ வளநாட்டுச் செற்றூர்க் கூற்றத்துப் ப்ரஹ்ம தேயம் ராஜஸுந்தரி சதுர்வேதி . . . .

4 ருள்ளிட்ட மஹாஸபையோம் இவ்வூர் திரு[மு]த்தீஸ்வரமுடையார் கோயிலில் திரு . . .

5 மகந் . . . டி இவ்வாண்டு இவ்வூரில் போகங்கள் . . .

6 . . . ற்ற . . . . யையில் ஸபை . . .

7 . . . . . . . . . . . .

8 நெறியுடையார் கோயிலில் உமாமஹேஸ்வர தேவற்கு அமுதுபடி ப . . . றமாக நாங்கள் ஸ . . .

9 டுத்த நிலமாவது இவ்வூர்த் திரிபுவனதேவி வதிக்குக் கிழக்கு ராஜராஜ வாய்க்காலுக்கு வட . . .

10 ங்கள் இறையிலி செய்து குடுக்கிற நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை திருமுத்தீஸ்வரமுடையம . . . . .

11 மேற்கும் தெந்பாற்கெல்லை இவ்வா[ய்க்]காலுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை இத்திருச்

12 . . லத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை நக்க . . . பாடியாம் நவ . . . ண்டாழ்ந்சே . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 7-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி பி. 1223 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 615 of 1909 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | [மூன்றும் ராஜராஜன்] | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில்-மகாமண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : சாரபரமேசுவரர் [செந்நெறியுடையார்] கோயிலில் காணியுடைய சிவபிராமணர்களிடம், இவ்வூரில் இருக்கும் வெள்ளாளன் நித்தியகல்லியாணன் மண்டையான் திருவிளக்கு நம்பி என்பான், ஒரு நொந்தாவிளக்கு எரிக்க 20 காசு கொடுத்துள்ளான். அக்காசினுல் வரும் வட்டி கொண்டு இவ்விளக்கு எரிக்க ஒத்துக்கொண்டு எழுதிக் கொடுத்த ஆவணம் இது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஶ்ரீ த்ரிபுவந சக்கரவத்திகள் [ராஜரா]ஜ [தே]வற்கு யாண்டு எ ஆவது திருச்சேறை திருச்செந்நெறி உடையார் கோயில் காணி உடைய சி

2 வப்ராஹ்மணரில் காமகா[ய]ன் ஜபங்கொண்டான் [குனிக்]கும் பிரானும் மாடிலன் அம்பலங் கோயில் கொண்டான் சேறை நாயகனும் ஆத்திரை

3 ரயன் பட்டன் கருவுணுயனும் காசியபன் திருவையாறுடையான் மாபறமனும் உள்ளிட்ட இவ்வனைவோம் இவ்வூர் இருக்கும் வெள்ளா

4 ளன் நித்த[கல்லியாணன் மண்டையாந் திருவிள]க்கு நம்பிக்கு நாங்கள் உபையத்திட்டுக் குடுத்த பரிசாவது இவன் பக்கல் இக்கோயிலிலெந்று நெய் நித்தம் உழக்கு செ[ந]

5 ய்யால் ஆசன . . . . நொந்தா விளக்கு ஒன்று எரிக்கக்கடவோ

மாக கொண்ட காசு உம் இக்காசு இருபதுக்கும் பொன் . .
ண்டு பொலியூட்டாக எரிக்கக்கடவோமாகவும் இக்கோயி

6 லில் காணி எங்கள் பக்கல் விலையாலும் ஒற்றியாலும் அடை
கொண்டும் அபாபத்தாலும் பெற்றுடையராய் படி கடந்து
புக்காரே எரிக்க கடவர்களாகவும் இப்ப

7 [டி] இக்கோயிலிலே கல்வெட்டிக்கொள்ளக் கடவநாக இசைந்து
தீட்டுக் குடுத்தோம் இந்நித்தகல்யாணன் மண்டையாந்
திருவிளக்கு நம்பிக்கு

8 இக்குனிக்கும்பிரான் உள்ளிட்ட இவ்வனைவோம் இது ப[ன்]
மாஹேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில்-மகாமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் இறுதிப்பகுதி மட்டுமே உள்ளது. தக்ஷிணாயனம், உத்திராயனம் ஆகிய இரு அயனங்களும், சித்திரை விஷு, ஐப்பசி விஷு ஆகிய இரு விஷுக்களும், [சூரிய சந்திர] கிரணங்களும் ஆகிய நாட்களில் இறைவன் அமுது செய்தருள நிலம் கொடையளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . .

2 இக்குழியால் நிலம் காணி அரைக்காணிக் கீழரை இன்நிலம் வாசியுட்படப் பதிங்க . . . . . .

3 மால் வந்த நெல்லிலே திரு . . . . க்கு முக்கல நெற்போக்கி அல்லாத நெல்லுக்கு அயனம் இரண்டும் விஷு இரண்டும்

4 . . . . ந . . . . கிரணங்களுக்கும் ஒன்றுக்கரிசி குறுணி நாநா . . . . ஆக உடையாரை அமுது செய்விப்பது இது பன்மாயே[சுர ரக்ஷை].

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறி உடையார்) கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கம் இல்லை. இரவில் சந்திவிளக்கு ஒன்று எரிக்க அளித்த நிலக்கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . .
2 விட்ட விளை நிலம் அரைக்கா
3 ணியாலும் . . . . [மறுநட்ட பொ
4 த்தாலுள்ள] நெல்லு உடையார்
5 [ப]ண்டாரத்தே புக்கு நாள் ஒன்று
6 க்கு இரவை ஸந்திக்கு ஸந்திவிள
7 க்காக எரிக்கும் ஸந்திவிளக்கு ஒன்
8 [று]க்கு உடையார் ஸ்ரீபண்டாரத்தே [அ]
9 ந்திராதித்தவற் . . . . .
10 . . . . . எரிக்கக் கடவத . .
11 . . . . தத்து இதுபன்
12 மாஹேஸ்வர இரக்ஷை :–

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : குடந்தை
ஊர் : திருச்சேறை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி பி. 11, 12-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 13

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார்) கோயில்-மகாமண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : இது கல்வெட்டின் இறுதிப் பகுதி. நிலம் கொண்டு இரவு சந்திவிளக்கு எரிக்கச் செய்த ஏற்பாட்டைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . .
2 தாத்தி கூடின நிலம் . . . . பிந்பு கல்லிந நிலம் முந்திரிகைக் கீழரை ஆக நிலங்காணி கீழரையு
3 . . . முந்திரிகை ஆக நிலம் அ . . . கூட்டிக்கொண்டு சந்தி ராதித்த வரை இரவை சந்திக்கு ஒரு . . . . .
4 ரைக்காணி முந்திரிகை . . . . எரிக்கப்பண்ணுவது இது பன்மாஹேஸ்வரர் ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1227 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 616 of 1909 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் ராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |

இடம் : சாரபரமேஸ்வரர் (செந்நெறியுடையார் கோயில்) மகாமண்டபத் தெற்குப்புறக் குமுதத்தில் உள்ளது.

குறிப்புரை : திருச்செந்நெறியுடையார் கோயில் சிவபிராமணர்கள் வசம் திருநொந்தா விளக்கு ஒன்று எரிக்க நெய் அளக்கும் பொருட்டு, 25 காசுகளை அளித்ததை இக்கல்வெட்டு காட்டுகிறது. கொடுத்தவரின் பெயருள்ள இடம் முழுவதுமாகச் சிதைந்து விட்டது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீரரஜராஜ தேவற்கு யாண்டு [௰]க* ஆவது திருச்சேறையான இரா . . . ந்த . . . . . கலத்து உடையார் திருச்செந்நெறி உ[டையார் கோயில் சிவ]ப்ராஹ்மணரில் காமகாயன் [ஜெய]ங்[கொ]ண் [டான்] குநிக்கும் பிராநாந நாற்பத்தெண்ணாயிரபட்டனும் ஆத்திரயந் சிவபு[ர] . . . ஆழ்வ[ா]நாந அணுக்கநம்பியும் [ஆ]ரிதந் பெரியாந் பொந்நம்பலக்கூத் . . . ழ்கெதமநி . .

2 த்திரையந் பட்டந் கருவுணயகபட்டநும் இவ்வனைவோம் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து தாமற் கோட் . . . நாட்டுக்கரிவேட்டில் கொற்றமாந . . . வாந . . . லநித்த . . படி நறுநெய் நித . . . ழக்கு நெய்யால் திருநுந்தா விளக்கு ஒன்றெரிக்கக்கடவோமாக நாங்கள் கொண்ட காசு உ௰ரு இருபத்தஞ்சும் இக்காசு இருபத்தைஞ்சு ஆசந்திரகால முதல் நிற்க . . சைக்கு இரு . . நுந்தா விளக்குஎரிக் . . .

3 வில் எங்[கள்] பக்கல் இக்காணி விலை கொண் . . . கொண்டான் ம . . . . ம் பெற்ற . . ம்மபாவ . . . . . . யராம அடைகொண்ட . . எறு விலையாலும் [illegible] விலையாலும் ஊஷேமூர விலையாலும் உள்ளிட்ட பேறுகளால் பெற்றுடையார் . . . . . . படி கடந்து புக்கார் எரிக்ககடவதாகவும் இப்படிக்கு இக்[கோயி]லிலே க[ல்]வெட்டிக் கொள்ளப்பெறுவாராக இசை . . . கோட்டை . . . . வதியாழ்வானுக்கு இவ் . . . . ஏழாவது . . . . . .

---

* இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் ஆட்சியாண்டு ஒன்று என்று குறிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 16 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |

இடம் : சாரநாதப் பெருமாள் கோயில்-கருவறையின் மேற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : இக்கோயிலைக் கட்டுவதில் பங்குகொண்டவரின் பெயராக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 வராஉயஂகாா ஷஓாவோவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு | — |
| எழுத்து : | கிரந்தம் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : ஸ்ரீசாரநாதப் பெருமாள் கோயில்-கருவறை தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : ரெத்னய்யங்காரின் தன்மம் என்று குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 ரெத்நய்யங்கார் ஸதாஸேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி.16, 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழும், கிரந்தமும் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |

இடம் : சாரநாதர் கோயில்-கருவறையின் தெற்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வள்ளல் அய்யங்காரும், அவருடைய மனைவியும் தன்மஞ் செய்தவராகக் குறிக்கப் படுகின்றனர்.

## கல்வெட்டு

1 வள்ளலைய்யங்கார் ஸஹா

2 ஸேவை அவருடைய

3 ஸ்ரீஅப்பையாயி ஸஹா ஸேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | சகம் 1566<br>கி.பி. 1644 |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 614 of 1909 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழும், கிரந்தமும் | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : ஸ்ரீசாரநாதர் கோயில்-கருவறை தெற்குக் குமுதத்தில் உள்ளது.

குறிப்புரை : விஜயராகவ பூபாலனின் நன்மைக்காக, கோவிந்ததாசன் என்பவர், நன்செய், புன்செய் நிலங்களைத் தானமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்ரீ ஸாரநாதாய நம: ஸ்வஸ்தி ஸ்ரீ ஸகாப்தம் ௲௫௱௬௰௬ இதின்
செல்லா நின்ற தாருண வருஷம் கார்த்திகை பு ௰௨ சநி
ரோஹிணி நாள் ஸ்ரீ ஸாரநாத ஸ்வாமிக்கு ஸம்மி பீதாம்பரமும்
சாத்திவிச்சு ஏகாந்த திருமஞ்சனத்துக்கும் சாந்து ச[ரிபா]க்-
கும் மழவராயஸந்நிதிக்கும் விஜயராகவ பூபாலன் புண்
ணியமாக கோவிந்த தாஸன் கெங்காதர நல்லூரில் பொலி
யூட்டாக ஸமர்ப்பித்த புஞ்சை நிலம் மூன்றே எட்டுமா
ஆழ்வார் ஸந்நிதிக்கு ஸமர்ப்பித்த நஞ்சை நிலம் அரை ஆக நிலம்

2 மூன்றே முக்காலே மூன்றுமாவும் சுகந்தம் அப்பங்கார் பாரிசம்
இக்கட்டளையிட்டு தாராபூர்வகமாக ஸமர்ப்பணம் பண்ணி
ஸமர்ப்பித்தபடியினாலே ஆசந்திரார்க்க ஸ்தாயியர் புத்ர
பௌத்ர பரம்பரையாக ஸாரநாத ஸ்வாமித்தெ கைங்கர்யம்
பண்ணிக்கொண்டு சுகத்திலேயிருக்கவும் இந்த தர்மத்துக்கு
ஆராகிலும் விகாதம் பண்ணினல் கெங்கைக் கரையிலே காராம்
பசுவைக் கொன்ற தோஷத்திலே போகவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |

இடம் : சாரநாதர் கோயில்-முன்மண்டபத்தூணில் உருவச்சிலையின் கீழ் உள்ளது.

குறிப்புரை : முன்மண்டபத்தைக் கட்டுவித்தவராக இருக்கலாம்.

கல்வெட்டு

1 நல்ல வாணன்
2 சதா சேர்வை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 20 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரி | | |

இடம் : ஸ்ரீசாரநாதப் பெருமாள் கோயில்-கருவறை முன்புறம் வாயிற்படி முன்பு தளத்தில் பாவப்பட்டுள்ள கல்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒருபகுதியே கிடைத்துள்ளது. தஞ்சாவூர் அரண்மனை வேளத்தில் பணிபுரியும் பாளூரன் பொற்றும[ரை] என்பாள், இடையன் வெண்ணி வண்ணக்கன் மூலம், திருமுத்திருக்கோயில்* பெருமாளுக்கு விளக்கொன்று எரிக்க [ஆடு?] தொண்ணூறு அளித்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பந்மற்க்கு யாண்டு [பத்]தாவ . . .

2 தானம் செற்றூர் திருமுத்திருக்கோயில் பெருமாளுக்கு தஞ்சாவூ . . . .

3 கிழானடிகள் வேளத்துப் பெண்டாட்டி பாளூரன் பொற்றும . .

4 க்கொன்றுக்கும் எண்ணுழி நாராசம் வழுவாவுழக்கிஞல் நி . . .

5 தெற்கு சந்த்ராதித்தவல் இடையன் வெண்ணி வண்ணக்கன் வழி . . .

6 தொண்ணூறு இது பந்ம[ா]*ஹேஸ்வர ரக்ஷை||—

* இக்கோயில் இறைவனின் பழைய பெயர் திருமுத்திருக்கோயில் பெருமாள் போலும். இவ்வூர்க் கல்வெட்டு எண். 21-ஐப் பார்க்க.

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண்: 124 / 1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | திருச்சேறை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 612 of 1909 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |

இடம் : சாரநாதர் கோயில்-குளக்கரையில் நாலுகால் மண்டபப் படியில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒருபகுதியே கிடைத்துள்ளது. பொய்யில் கூற்றத்துக் கீரமங்கலத்துக் கீரமங்கலமுடையான் என்பான், இடையன் வண்ணக்கன், இடையன் சாத்தன் காடன் ஆகிய இருவர் வழி விளக்கொன்று எரிக்கத் தானம் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பந்மற்கு யாண்டு பத்த[ா]

2 வது செற்றூர்க் கூற்றத்து தேவதானம் செற்றூர் திருமுத்திருக் . . .

3 பொய்யில் கூற்றத்து கீரமங்கலத்து கீரமங்கலமுடையான் ந . . .

4 க்கி வைத்த நொந்தா விளக்கொன்றுக்கு எண்ணழி நாராசம் வழ . . .

5 கு நெய்யட்டுவதற்கு சஹாதித்தவற் இடையன் வண்ணக்கன் ப . . . .

6 தனன் சாத்தன் காடனும் இவ்விருவர் வழி விட்ட சாவா மூவாப்பே . . .

7 பன்மாஹேஸ்வரர் ரக்ஷை||

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | நாயக்கர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |

இடம் : சாரநாதர் கோயில்-அம்மன் சன்னதி-கருவறை தென்சுவரில் உள்ளது.

குறிப்புரை : ராயசம் நரசப்பய்யரின் மருமகன் வெங்கடேச(ன்) ஏதோ பணி செய்ததனைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ராயசம் நர
2 சப்பய்யர்
3 மருமகன்
4 வெங்கடே
5 [சுராங்கத]
6 சேர்வை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |

இடம் : சாரநாதர் கோயில்-குளத்தருகில் உள்ள நாலுகால் மண்டபப் படியில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுக்கள். நிலக் கொடையைக் குறிக்கும் கல்வெட்டுத்துண்டு களாக உள்ளன. அனைத்தும் கட்டிடத் திருப்பணியின்போது இடையிடையே வைத்துக் கட்டப்பட்டுள்ள துண்டுகள் ஆகும்.

கல்வெட்டு

I

1 . . . கையாலும் இயாவிட . . .
2 . . . பொலிசை நெல் முப்பதி . . .
3 . . . க்கு நெல்லு குறுணிக்கு நித்த . . .
4 . . . . ஒருதிரு நுந்தா விளக்கு சந்தி . . .
5 . . . . . கவும் எங்கள் பக்கல் விலையா . . .
6 . . . . ந்து புகுந்தார் இப்படி எரிக்க கடெ . . .
7 . . ம் திருமயானமுடையானை . . .
8 சிவப்பிராமணர் இவ்வனை . . . .

II

முன்மண்டபத்தில்

9 ங்க சோழ தேவர் . .
10 ல மௌ ஆக கடை . .
11 நிலம் கம இறை . .
12 கக்கு டைமாஙங . . .

## III

மேற்குப்புறப் பிரகாரத்தில், பாதம் பொறிக்கப்பட்ட மண்டபத்தில்

1 நாலுமா அரைகாணி டூா சந்ந. . . .

## IV

1 பெருமாள் மடமும் குளமும் . . யும் நிலம் செ . .

2 புல்லாலியுடையான் எழுத்து உ இவை புரவரி . . .

## V

1 லு . . . லம் . . . . முக்கா . . .

2 . . . . கு நிச்சயத்துடை . . . .

## VI

1 . . . . நிலத்துடையாத நிலம் . .

2 அனுபோகப்படி புன் பனை . .

## VII

1 மெ முக்காலே முந்திரிகை பெருக . . .

2 யூர்களில் கழிப்பது இவை புரவரி சீகாணி . . .

## VIII

1 நீங்கல்லாக நீக்கின . . .

2 டியா[ன] காசு முக்காலு . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்சேறை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |

இடம் : சாரநாதப் பெருமாள் கோயிலிலுள்ளது.

குறிப்புரை : இக்கோயிலில் உள்ள சேனைமுதலி செப்புத் திருமேனியின் பீடத்தில் இங்குள்ள எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. நாராயண தாஸன் என்பவர், இத்திருமேனியினை எடுப்பித்ததையும், இக்கோயிலில் திருச்சுற்றுமதிள் எடுத்ததையும் குறிக்கிறது. 8, 9-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியிலிருப்பதால், இத்திருமேனியும் அக்காலத்தைச் சார்ந்ததெனத் துணிய முடிகிறது.

## கல்வெட்டு

1 ஸ்ரீபட்டர் நாராயண தாஸன்

2 ஸேநாபதிகளையும் சுற்று மதிளும்

3 எடுப்பிச்சு . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திரைலோக்கி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 108 of 1931-32 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதற்குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : சுந்தரேஸ்வரர் கோயில் வெளிச்சுவர்-வாயிலின் தென்புறச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் முதலிலும், இறுதியிலும் ஒவ்வொரு வரியும் கட்டிடத்தினுள் சென்று விட்டது. இக்கோயில் இறைவனுக்குத் திருவிழாப்புறமாக விட்ட நிலத்தினை மகாசபையினர் இறையிலியாக்கியதைக் குறிக்கிறது. இந்நிலம், முன்னுளில் வரகுணப் பெருமாளால் அளிக்கப்பட்டது. இறைவன் கலியாணசுந்தரராக மார்கழித் திருவிழாவின்போது நகர்வலம் வருவதற்கும், பிற விழா, வழிபாடு களுக்கும் அளிக்கப்பட்டது. மேலும், நாட்டுக்கும், ஊருக்கும் நன்மையாகும் பொருட்டு இத்திருவிழா எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

## கல்வெட்டு

1 [நிலமகணி]லவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னர[வரி ரியலுற்றுழி தர . . . .

2 . . . செய்து அவனி முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவி ராஜகேஸரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க . . . .

3 . . . த்து நாயற்றுக் கிழமையும் பஞ்சமியும் பெற்ற ஆயில்யத்து [நிந்ற பகல்] விருதராஜபயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு . . . .

4 . . . லூர் திருவாய்ப்பாடி ஆழ்வார் கோயிலில் திருவோலக்க மண்டபத் தே பெருங்குறி கொட்டி தந்[மி] செய்து கூட்டங்குறை . . .

5 . . . ஶூர தேவற்குத் திருவிழாப் புறமிட்ட பரிசாவது முந்பு வரகுணப் பெருமாள் இத்தேவற்கு ஆட்டாண்டுதோறும் மார்கழித் திங்கள் திருவிழா . . . .

6 . . . . சிற்றம்பலமுடையார் திருச்[சிந்]தாடல் எழுந்தருளி ப்ரா ப்ரதக்ஷிணம் பண்ணித் திருவோலக்கஞ் சேதருளுகைக்கும் இவ்வெழு நாளிலும் நா . . . .

7 . . . . [பணமொக்கும்] மற்றும் [ஸ]வ-ஃ உபசாரத்துக்கும் வேண்டுவந வற்றுக்கும் முந்பு ஸபையார் நம் பக்கல் வரகுணப் பெருமாள் பொந் குடுத்த . . . .

8 . . . ருளிவிக்கவும் இவ்வூர் ப்ராஹ்மணரையும் வெள்ளாளரையும் போ திட்டி நெற்கொண்டு எழுந்தருளிவித்துவராக நின்றமையில் இப் பரிசு எந்த . . .

9 . . . ங்க சோளதேவர் திருமேனி கல்லியாண திருமேனியாகவும் ஸ்ரீ க்ராமத்துக்கு நன்றாகவும் [ராஜ்ய]த்துக்கு நன்றாகவும் திருவிழா வெழுந்தருளுகைக்கு விட . . . . .

10 . . . ஞ்சாங் கண்ணாற்று எட்டாஞ் சதிரத்து நிலமுக்கால் இந்நிலமுக் காலும் இங்கே ஒந்பதாந் சதிரத்தும் பத்[தாஞ் சதிர]த்தும் ரூ ஃ உப ச இந்நில . . . . .

11 ஒந்றே இருமாவரையும் சந்திராதித்தவல் இறையிலியாகவிட்டு திருவுத் ஸகம் எழுந்தருளும் பத்து . . வெள்ளாளர் . . . . பண்ணே . .

12 . . . . நித்த . . . நாளுள் இடக்கடவனாகவும் இப்பரிசு ஸஹா வ்யவஸ்தை பண்ணிநோம் மஹாஸபையோம். இப்பரிசு ஸபையுளிருஞ . . . . .

13 . . . . . மறச் . . . ட்டுதிருச்ச . . ஸஹஸ்ரந் பணியாலும் ,, சேரி நம்பூர் காடந்கள . . . அக்கசளம் ஸஹா பணியாலும் சேரி ஆஸ்ரி ஸ . . . .

14 . . . . . . ஸ்ரீகூரஜ்ஞபுர தேவ ஸஹஸ்ரந் பணியாலும் [ஆலே சோலயார்] அக்கி [முனே] தில்லை வநமுடையாந் ஸஹஸ்ரந் . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1150 |
| ஊர் : | திரைலோக்கி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 103 of 1931-32 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜராஜன் | | |

இடம் : சுந்தரேஸ்வரர்கோயில் மகாமண்டபம் மேற்குப்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : இரண்டாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தி சொல்லப்பட்டுள்ளது. கல்வெட்டு இடையிடையே சிதைந்தும், முடிவு கிடைக்காமலும் உள்ளது. இம்மன்னனின் 3-ஆம் ஆட்சியாண்டின் 358 ஆவது நாளில் வந்த திருமுகப்படி, ஊரில் உள்ள பிரம்மதேயம், தேவதானம், பள்ளிச்சந்தம், சாலாபோகம், ராஜகுலவர் காணிப் பற்று ஆகியவைகளில் மூன்று வேலிக்கு மேலிருப்பவைகளை வரியிடுமாறும் இது போன்ற பிற வகைகள் செய்யுமாறும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 பூமருவிய பொழிலேழும் பொருப்பேழும் பு[னை] நித்திலத் [தாம] நெருங்குடை பொ[பா]ழிந்த தவள வெண்ணிலா [குளி]ர் பொழியச் சுடற் சக்கர வெற்பிற்றன்னடச்சக்கர வெயி லெறிப்பச் [சி]னப்புலியுஞ் செங்கோ[லுமனைத்துயிர்க்]

2 குங்காவல் பூணப் பணியணைமிசைப் பரஞ்சோதி பாற்கட[ல்] நின்றெழுந்தரு[ளி] மணி நெடுமுடி கவித்தனநென மண் மடந்தையைக் கைப்பிடித்து மண்மடந்தை மணியா[ர் மார் பில்]

3 [புகழ்] மடந்தை கொழுனனுகிப் போர் மடந்தையை மணம் புணர்ந்து சு[ரு]திகளிந் துறை வாழ்த்தப் பருதி முதற் குலம் விளக்கி விழுந்த வறுசமையத்தை மீளவெடுத்து ஆதி யுகங் கொழுந்து [விட்டுத் த]

4 மைத்தோங்க கோடாதறங் குளிர்தூங்க மாரிவாய்த்து வளம்
சுரப்பத் தாரணி[ய]ார் பிணி நீங்க நல்லோர்தங் கற்புயர
நான்மறையோர் தொழில் வளர எல்லாருந்தனித்தனியே
வாழ்ந்தனம் மெனவும் வொருவரோடொருவற்

5 கும் வெருவெரு பகைமனத்தின்றி விழைந்து காதலு[ட]ன் சேர
விந்தி[ர]ன் முதற் றிசாபால ரெண்மருமொரு[வடி][வாகி]*
வந்தபடியென நின்று மனுவாணை தனிநடாத்தி மாலியானையே
பிணிப்புண்பன மணிச்சிலம்பே யரற்[றுவ]ன சேலோடை[யே]

6 . . மாவே வடுப்படுவன மாமலரே [கொடியவாயின வருபுனலே]
சிறைப்படுவன காவுகளே கொடியவாயின கள்ளுண்பன
வண்டுகளே பொய்யுடையன வனவேயே போர் மலைவன
வெழுகழனியே மை[ம]யுடையன நெடு . . . . . ந்திருநாட்டி
[ல் இயல்]விதுவென நின்று க[ாவல்]நெறிபூண்டு

7 . . . . . ல்லோர்க்கு . . . . தாயரில்லோர் . . . கியும் மைந்த
ரில்லார் மைந்த . . . விழிபெற்ற . . . . முகம்பெற்ற . . .

8 னென்னவும் வரஞ்செய் பெருந்தவ . . . . தமிழுக்குத் தலைவ
னெனவு மூன்றுலகில் முதல்வனெனவும் [அரசி]யற்கை
முந்நிறுத்தல்லவைக் கடிந்துப் பொருகலியிநிருள் நீக்கிப்
புகழென்னும் நிலாப் பரப்பி கன்னடருங் காலிங்கருந் தென்
னவருஞ் சி

9 ங்கையருங் கொங்கணருங் கூ[ப]கரும் போதகருங் கோசலருங்
கப்பளரும் பாஞ்சாலரும் பொப்பளரும் பூலுவரும் மத்திரரு
மராட்டரு வத்தவரு மாகதருங் கொடிநுடங்கு கனககோபுரக்
கொ[ற்ற]வாசலில் வந்தீண்டி . . . . திறைகள் கைக்
கொ[ண்டு]

10 . . . முடிசூடி பெண்ணரைசாய் . . ஞாலை மண்மிசைநடாத்துங்
குயிலுலகுடை முக்கோக்கிழானடி யென்னுமலகில் கற்பில
ரவிந்தமடந்தை[யுந் க]ருமாமுகில் திருநிறத்துக் கன[களப]
ராஜராஜன் திருமார்பிலுந் திருத்தோளி[லும் திருமனதி]

11 லும் பிரியாது பற்றூர் குழலியர் கொரு சூளாமணி ரத்நமென்ன
சிந்தாமணி மகாரத்நம் திலத சோழகுல . . . முதற்றேவியர்
பல்லாண்டே . . . போற்றப் பேரரசை . . . தவர் கொழுனன்
தலை காக்குமண்ணில் பொரு நாநமுதற் குல நான்[கும்] நல்
லொழுக்கமும்

12 . . . . . . முழுதுடை . . . . . .

13 முழுதுடையாளும் . . . . புரக்குமருந்ததியெனவரும் பெருமை யவனிமுழுதுடையாளும் மந்னிய பெரும்புகழ் படைத்த தென்னவன் கிழானடி[களும்] வாழியூழி பலகர்பம் வாழி மணம் புணர்ந்திருப்ப உதயகிரி

14 உச்சியேறி மதிவெண்குடை புதுநீழற்கீழ்ச் சந்திரமுகமண்டலத்துத் தாமரைக்குள்ச் செம்பவளவா யிந்திரநீல குஞ்சரமோடிளம் பிடியோடைசந்தன செம்பொந்வீர ஸிங்காஸன . . . . ச் . . . . . .

15 முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ௬வது விருத[ராஜ]பயங்கர வளநாட்டு ப்ருஹ்மதேய[ங்]களிலும் தேவதா[னங்களிலும்] பள்ளிச் சந்தம் . . . . த் தொறப்பட்டிறை இறை

16 . . . . . . . ஊர்களிலும் வெள்ளான் [உள்ளிட்ட] . . . . ட்டைத்த ஊராநிலும் இராஜகுலவர் காணிப்பற்றும் ஜீவிதம் பாக்கிறக . . . . . ம் மானவளாக . . . . நகா . . . . நாமு . . . . கெகுங்கூ . . . . . ள்ளிட்டு நெய்யும் நந . . . . ங்களு . . . . . .

17 . . . . . . . . ல . . . . . ணங்களில் . . . . களுக்குப் பதின் ஐநூறுவது . . . . ன்றுடை . . . . . . குதேவதானமிட்ட நிலங்கள் . . . . க்குத் தேவதான . . . . . பள்ளிச் சந்த . . . . . .

18 . . . . . யாரு வரிக்குக் கூறுசெய்வார்களும் மெழுத்திட்ட . . . . நீக்கி நின்ற நிலங்களுஞ் சாலா போகங்களும் . . . . மப்புறங்களும் மற்றும் ப . . . ணிப் புறங்களுக்கும் ஊர்க் கீழிறையிலியாய் வருகிற நிலங்களும் காணிகொள்வார்க்கு ராஜராஜப் பெருவிலையாக இளரி கீ[ழுடை]யாந் விற்றுக் காசொடுக்கக் கடவத

19 [ாக]வும் இந்நிலங்கள் மூவேலிக்கு மேற்பட்ட நிலங்களும் காணி கொ . . நா . . பாக்கீழ் வரியிலிடக்கடவதாகவு இந்நிலத் துக்கு இன்னும் நம் ஓலை எழுதும் சோளேந்திர சிங்க மூவேந்த வேளானும் வரிக்கு நாயகஞ் செய்வார்களில் சிறு புன்றூர் கிழவனும் மருதூருடையானும்

20 . . . யானும் விலை மதித்த காசு காணி விலையாக ஒடுக்கி இவர் களெழுத்திட்ட ஷ்ராணம் கொண்டார்க்கு . . . . மாக அனுபவிக்கப் பண்ணுகவென்று திருமந்திரவோலை சோ

ளேந்திர சிங்க மூவேந்த வேளானெழுத விலாடராஜனு
வேளாயிராஜனும் தொண்டைமானும் எழுத்திட்டு மூன்று

21 [வது]நா[ள்] முன்னூற்றைம்பத்தெட்டினுல் ப்ரஸாதஞ் செய்
தருளின ஸாமுதாயத்தாரு முக . . பட்டமையில் நாலாவது
கற்கடக நாயற்று வஹவ௨ பக்ஷத்து . . . யுஞ் செவ்வாய்க்
கிழமையும் பெற்ற அத்தத்தி நாள்

22 . . . களும் பழந்தேவதானங்களில் காணியான [இல்]லாதவர்
களும் இவையற்ற . . விலையாகக் கொண்டனுபவித்து
வருகிற நிலங்களும் ஊர்க்கீழிறையிலியாய் வரியிலிட்ட நிலங்
களும் இவை இற்றி . . . தானங்களில் முற்பாட்டுக் கமுகும்
திருநந்தவனங்களுமிந் திருமடை விளாகமு

23 . . . சாரி பாதன் பங்குந் தேவரடியார் பங்கும் பள்ளனயும்
நீக்கி நீக்கி நி . . . களும் குடிநீங்காத் தேவதானம் பள்ளிச்
சந்தம் மற்றும் இ . . த்திற . . . ஊர்களும் விஷ்ணு ஸ்தாநங்
களும் பதினைஞ்சாவது வரை ஊர்க்கீழிறையிலியான நிலத்
தில் மூன்றுவது நா . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திரைலோக்கி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 104 of 1931-32 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | [சோழர்] | | |
| மன்னன் : | கோனேரின்மைகொண்டான் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : சுந்தரேஸ்வரர் கோயில்-மகாமண்டபத் தென்புறச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : திருப்பரசுராமீஸ்வரமுடையாரின் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியாருக்கு வழிபாடு செய்யும் உரிமையினை, கோஸரி திரிபுவன சுப்பிரமணிய தக்ஷிணாமூர்த்தி பட்டன் என்பானுக்கு, மன்னனின் ஆணையின் பேரில் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டின் இறுதிப்பகுதி சிதைந்துவிட்டது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனசக்ரவத்தி கோனேரின்மை கொண்

2 டான் விருதராஜபயங்கர வளநாட்டுத் தயிலோக்கியான

3 விருதராஜபயங்கரச் சதுப்பேதி மங்கலத்துத் திருப்பர

4 சுராமீஸ்வரமுடையார் கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீ

5 [மா]ஹேஸ்வரக் கண்காணி [செய்வார்களு]க்கும் ஸ்ரீகாரியஞ் செய்வா

6 னுக்கும் இக்கோயில் கொண்டரு . . . . மாக

7 திருக்கா[மக்] கோட்டமுடைய ஞ . . . . த்து

8 . . . உண்ணவும் இஞச்சியார் கோயில் ஶிவப்ராஹ்மணர் காணி . . . . பது பட்ட

9 கோஸரி த்ரிபுவந ஸுப்ரமணிய தக்ஷிணாமூத்தி பட்டன் என்கிற அ . . . னுக்கு காணியாக மேற் . . . .

10 கடவதாகவும் பெறவேணுமென்று ஹணித்த சக்ரவத்தி நமுக்குச் சொன்னமையிற் இப்படி சயு . . .

11 க்கச் சொன்னேம் திருக்காம கோட்டமுடைய நாச்சியார் திருவூ
ை . . .

12 . . . . னும் . . . . ஸிவ . . . . ருச . . .

13 . . . . தா . . .

14 ன் எழுத்து இப்படி . . .

15 ளே . . . ப்படி . . . .

16 ய்ய . . . . . . . .

17 கோட்ட உடைய நா

18 ச்சியார் கோயிலி[ல் சி]

19 வப்பிராமணக்கா

20 ணி [த]க்ஷிணைமுத்துப்

21 . . . . . . க . . . . .

22 க்கொண்

23 டான் . . . .

24 . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திரைலோக்கி | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 107 of 1931-32 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : சுந்தரேஸ்வரர் கோயில் மடைப்பள்ளிச் சுவரிலுள்ளது.

குறிப்புரை : குரவைசேரிச் சம்பந்தப் பெருமாளான செம்பியன் பிரம்மராயர் தன்மமாகத் திருமாளிகையமைத்ததைக் கூறும் கல்வெட்டிது.

## கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ இத்திருமாளி
2 கை குரவைசேரிச் சம்
3 மந்தப் பெருமாளான
4 செம்பியன் பிரம்மா
5 ராயர் தன்மம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12,13–ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | திரைலோக்கி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 106 of 1931-32 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : சுந்தரேஸ்வரர் கோயில் மடைப்பள்ளிச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : அரசூர் திருச்சிற்றம்பலமுடையாரான எதிரிலி சோழப்பிரம்மராயர் தன் தன்மமாக இத்திருமாளிகை அமைத்ததைக் கூறுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ இத்திருமா
2 ளிகை அரசூர் திருச்சிற்றம்
3 பலமுடையாரான எதிரிலி
4 சோழப் பிரம்மாராயர் தன்ம[ம்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 19-ஆவது |
| வட்டம் : | குடந்தை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திரைலோக்கி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 102 of 1931-32 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | [இரண்டாம்] இராஜராஜன்* | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |

இடம் : சுந்தரேஸ்வரர் கோயில்-மகாமண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : சிவப்பிராமணர்கள் பொன் பெற்றுக்கொண்டு, விளக்கு எரிக்க ஒத்துக்கொண்டது குறித்துக் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் . . . . .
2 தேவற்குயாண்டு ௰தொன்பதாவது
3 . . . ஷத்து . . . . . . ஊதியும் வியாழக்கிழமையும் பிரு . . . . . . .
4 . . . . . விருதராஜ பயங்கர வளநாட்டு
5 . . . . . . . . . . . . . . .
6 . . . . . . . . . . . .
7 . . . . . சதுர்வேதிமங்கல நல்லூர் உடை
8 . . . . ய . . . . கென . . . . முப்பது . . . டி . . . . . .
9 சிவப்பிராமணரோ . . . . இவ்வனைவோரும் இநாயநாற்கு
10 . . . . திரு . . . . . [சந்திராதித்தவரை] விளக்கு எரிக்க கடவோ . . . .

* இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

